# பலியின்
# உடன்படிக்கை



## இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக *(E-Books)* இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் *(Download)* செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: *www.WordOfGod.in*

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் *(E-Book)* வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய *WhatsApp* எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ *(Email)* எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

*WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599*

*Email: wordofgod@wordofgod.in*

## *Wishing you in the mighty name of Jesus Christ*

*We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.*

*95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.*

*WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599*

*Email: wordofgod@wordofgod.in*

# பலியின் உடன்படிக்கை!

(COVENENT OF SACRIFICE)

J. சாம் ஜெபத்துரை

வெளியிடுவோர் :

J சாம் ஜெபத்துரை, M.A.,

50, ரெயில்வே ஸ்டேஷன் ரோடு,

கோடம்பாக்கம், சென்னை 600 024.

# அர்ப்பணம்!

ஐயா, இயேசு ராஜா, எங்களுக்கு நேராக நீட்டப்பட்டிருக்கிற உம் காயப்பட்ட கரங்களுக்காக ஸ்தோத்திரம். காயப்பட்ட கரத்திலிருந்து வழியும் தூய்மையான இரத்தத்திற்காக ஸ்தோத்திரம். இரத்தத்தினாலும், கிழிக்கப்பட்ட உம் சரீரத்தினாலும் எங்களோடு நீர் செய்த அன்பின் உடன்படிக்கைக்காக ஸ்தோத்திரம். எங்களுக்காக பதிலாடாய் அடிக்கப்பட்ட வண்ணமாயிருக்கிற உம் பலியின் உடன்படிக்காக ஸ்தோத்திரம்.

இயேசு ராஜா, இரத்தம் வழியும் உம் கரங்களைப் பற்றிக் கொண்டு, உம்மோடு பலியின் உடன்படிக்கை செய்து தியாகமாக உழைக்கும், இரத்த சாட்சிகளுக்காக, ஜெபவீரர்களுக்காக, மிஷனெரிகளுக்காக, சுவிசேஷகர்களுக்காக, உத்தம ஊழியர்களுக்காக உமக்கு ஸ்தோத்திரம்; ஸ்தோத்திரம்.

ராஜா, உம் கல்வாரி அன்புக்கும் தியாகத்திற்கும் தகுதியான வாழ்க்கை வாழும்படி, எங்களை பெலப்படுத்துவீராக! இச்சிறு புத்தகத்தை உம் இரத்தத்தில் தோய்த்து அனைவருக்கும் நீரே வழங்கியருளும். உம்பாதத்தில் பணிவோடு அர்ப்பணிக்கிறேன். ஆமென்.

# பொருளடக்கம்


| எண் | | பக்கம் |
|---|---|---|
| 1. | அன்பின் படிக்கை | ... 5 |
| 2. | மலர்களின் மகிழ்ச்சி | ... 9 |
| 3. | பலியின் உடன்படிக்கை! | ... 14 |
| 4. | பலியின் தீர்மானம் | ... 19 |
| 5. | பலியாக வேண்டிய சுபாவங்கள்! | ... 23 |
| 6. | எதுவரைக்கும்? | ... 26 |
| 7. | வேதத்தின் கிரயம் என்ன? | ... 29 |
| 8. | யோனத்தானே..., யோனத்தானே! | ... 34 |
| 9. | பொன் வாத்தின் மதுர கீதம் | ... 41 |
| 10. | சிலுவையைக் குறித்தே...! | ... 44 |
| 11. | பலியின் எழுத்துக்கள் | ... 50 |
| 12. | வெடிப்புள்ள தொட்டியும் பிளக்கப்பட்ட கன்மலையும் | ... 53 |
| 13. | மகா ஞானமுள்ளவைகள் | ... 59 |
| 14. | பிறந்த நாள் பரிசு! | ... 73 |
| 15. | பலிகள் பலவிதம்! | ... 76 |
| 16. | திறப்பின் வாசலில் யார்? யார்? | ... 81 |
| 17. | என்னிடத்தில் கூட்டுங்கள்... | ... 89 |
| 18. | மனம் விட்டு உங்களோடே... | ... 94 |

விலை ரூ. 4--00

## இதே ஆசிரியரின்
## மற்ற ஆவிக்குரிய புத்தகங்கள்

| | | ரூ | பை |
|---|---|---|---|
| 1. | கல்வாரிப் பாதையில் நீ ! | 4 | 00 |
| 2. | என்னை பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே! | 4 | 00 |
| 3. | கிறிஸ்துவின் இரத்தம் ! | 4 | 00 |
| 4. | ஆயத்தப்படு; ஆயத்தப்படுத்து | 4 | 00 |
| 5. | அன்பின் தேவனின் ஆறுதல் ! | 4 | 00 |
| 6. | எங்கள் போர் ஆயுதங்கள்! | 4 | 00 |
| 7. | பலியின் உடன்படிக்கை! | 4 | 00 |
| 8. | எழுப்புதல் எப்பொழுது? | 4 | 00 |
| 9. | ஊழியனே உனக்கு (மொழி பெயர்ப்பு) | 2 | 00 |
| 10. | துதியின் வல்லமை ! | 4 | 00 |
| 11. | என்னை ஆசீர்வதியும் ஆண்டவரே...! | 4 | 00 |
| 12. | வல்லமையான 60 சிறுகதைகள் | 4 | 00 |
| 13. | ஆறுதலான 60 தியானங்கள் | 4 | 00 |
| 14. | அன்றன்றுள்ள அப்பம்...(ஆண்டு சந்தா) | 15 | 00 |
| 15. | அனுதினமும் என் இயேசுவோடே | 5 | 00 |
| 16. | கல்வாரியின் பெருந்துளிகள்...! | 6 | 00 |

வாங்கி வாசியுங்கள்! புத்தக ஊழியங்களை ஊக்குவியுங்கள்!

அநேக ஆவிக்குரிய புத்தகங்கள் வெளிவர ஜெபியுங்கள்!

புத்தகங்கள் கிடைக்குமிடம் :

**J. சாம் ஜெபத்துரை,**

50, ரெயில்வே ஸ்டேஷன் ரோடு,

கோடம்பாக்கம், சென்னை—600 024

அத்தியாயம் 1

# அன்பின் உடன்படிக்கை

கிறிஸ்துவின் கரம் நமக்கு நேராய் நீட்டப்பட்டிருக்கிறது ஆழமான ஆணிகளால் கடாவப்பட்ட கரத்தில் இரத்தம் வழிய வழிய அவர் நம்மை நோக்கி தன் கரத்தை நீட்டிக் கொண்டே இருக்கிறார்.

அவருடைய கண்கள் ஆவலாய், எதிர்பார்ப்போடு உன்னை நோக்கிக் கொண்டே இருக்கிறது. ஆம்; அவர் உன்னோடு கூட ஒரு உடன்படிக்கை செய்து கொள்ள விரும்புகிறார்.

''பூச்சக்கரத்திலுள்ள எல்லா ஜனங்களிலும் உன் தேவனாகிய கர்த்தர் உன்னை தமக்குச் சொந்தமாய் இருக்கும்படி தெரிந்து கொண்டார். சகல ஜனங்களிலும் நீங்கள் திரட்சியான ஜனமென்று கர்த்தர் உங்கள் பேரில் அன்பு வைத்து உங்களைத் தெரிந்து கொள்ளவில்லை. நீங்கள் சகல ஜனங்களிலும் கொஞ்சமாயிருந்தீர்கள்.'' (உபா 7:6,7)

கிறிஸ்துவின் கரம் உனக்கு நேராய் நீட்டப்பட்டிருக்கிறது! உன்னை களிமண்ணிலிருந்து உருவாக்கி, ஜீவ சுவாசத்தை உன்னில் ஊதி உன்னை சிருஷ்டித்த தேவன். உனக்காக ஆணிகள் கடாவப்பட்ட கரங்களோடு உனக்கு நேராய் கடந்து வந்திருக்கிறார்!

அவர் கரங்கள் குயவனின் கரங்கள். குயவனுடைய கையிலே ஒரு பாத்திரம் கெட்டுப்போனால் கூட, அவன் அந்த மண்ணை தூக்கி எறிந்து விடுவதில்லை. அவன் அதை ஒரு

புதிய பாத்திரமாக வனேகிருன். தேவபிள்ளேயே, உன் வாழ்க்கையை ஒரு புதிய பாத்திரமாக வனேயும்படி, களிமண் பாத்திரமான உன்னே, பொற்பாண்டமாக உருவாக்கும்படி இரத்தம் கசியும் நேசரின் கரம் உன்னே நோக்கி நீட்டப்பட்டிருக்கிறது. (எரேமியா 18:2-5) (ஏசாயா 64:8). நீ கர்த்தருக்குத் தேவை!

அவர் கரங்கள் உன்னேக் கழுவும் கரங்கள். அன்றைக்கு சீஷர்களின் கால்களேத் தண்ணீரிஞல் கழுவி சுத்தப்படுத்தின தேவக்குமாரன். (யோ 13:5). இன்று உன் உள்ளத்தை அவர் தம் இரத்ததிஞல் கழுவி, பரிசுத்தமாக்க தன் கரத்தை உன்னண்டை நீட்டிக் கொண்டே இருக்கிருர்.

அவரது கரத்தில் வழிவது; இரத்த ஊற்று மட்டுமல்ல; உச்சிதமான அன்பின் பெருந்துளிகள். உன்னதமான நேசத்தின் அடையாளத் துளிகள். உன் மேல் வைத்த அன்பிஞலே தன் கரங்களே மகிழ்ச்சியோடு சிலுவையில் அறைப்பட ஒப்புக் கொடுத்தார். 'ஒருவன் தன் சிநேகிதனுக்காக ஜீவனேக் கொடுக்கிற அன்பிலும் அதிகமான அன்பு ஒருவரிடத்திலுமில்லே' (யோவான் 15:13) என்று சொன்னவர் உன்னேடு கூட அன்பின் உடன்படிக்கை செய்து கொள்ள தன் கரத்தை நீட்டிக் கொண்டே நிற்கிருர்.

அன்று மாராவின் கசப்பை மதுரமாக்க ஒரு மரம் வெட்டப்பட்டு மாராவின் தண்ணீரில் எறியப்பட்டதைப்போல உன் நேசர் உன் கசப்புகளே தான் ஏற்றுக் கொண்டு, உன் நோய்களேத் தாமே சுமந்து, சிலுவை சகித்தவராய் தன் இரு கரத்தையும் நீட்டிக்கொண்டே நிற்கிருர். அவர் கரம் அன்று குஷ்டரோகிகளேதொட்டது. மரித்துப்போன நாயினூர் விதவையின் மகனேத் தொட்டு எழுப்பினது. குணமாக்கும் வல்லமையுள்ள அந்த அற்புதகரம் உன் வாழ்விலும் அற்புதங்களேச் செய்யும்படி ஆவலாய் உன்னே நோக்கி நீட்டப்பட்டிருக்கிறது. (மத் 83, மத்8:14,15, லூக் 13:10-13)

அன்று தன் ஊழியத்தின் கடைசி நாளில், அவரது கரம் திராட்சை ரசத்தை ஏந்தியது. அதுதான் அவர் தன் சீஷர் களோடு பந்தியிருந்த கடைசி இரா போஜனம். ‘‘பாத்திரத் தையும் எடுத்து ஸ்தோத்திரம் பண்ணி, அவர்களுக்குக் கொடுத்து, நீங்கள் எல்லாரும் இதிலே பானம் பண்ணுங்கள். இது பாவ மன்னிப்பு உண்டாகும்படி அநேகருக்காகச் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய இரத்தமாயிருக்கிறது என்றார் (மத் 26:26-28). திராட்சைப் பழத்திலிருந்து எப்படி இரசம் பிழிந்து எடுக்கப்படுமோ அவ்விதமாய் தன்னையே பிழிய ஒப்புக் கொடுத்த தேவக்குமாரன், பரலோகத்தின் உச்சிதங்களையெல்லாம் உன்மேல் பொழிந்தருள புது உடன் படிக்கையின் கரத்தை உன்னை நோக்கி நீட்டிக் கொண்டே யிருக்கிறார்.

தன்னையே தந்தவர்; தன் கடைசி சொட்டு இரத்தத் தையும் உனக்காக ஊற்றினவர்; எல்லாவற்றையும் உனக்குத் தந்தருளுவது அதிக நிச்சயமல்லவா? சத்துருவின் தலையை நசுக்கினவர், பாதாளத்தை ஜெயித்தவர், பரலோக வாசல் களைத் திறந்தவர் உன்னோடு கூட உடன்படிக்கை செய்து கொள்ள விரும்புகிறார்.

அவர்தன் தலையை முள்முடி சூடப்பட ஒப்புக்கொடுத்தார்! உனக்காக! ! (யோவான் 19:2)

அவர்தன் கண்கள் உன் நிமித்தம் கண்ணீர் சொரிந்தது (லூக்கா 19:41) அவர் தன் கன்னங்கள்உன்பாவத்தினிமித்தம் ஓங்கி அறையப்பட்டது (புலம் 3:30)

அவர்தம் நாவு உனக்காக மன்றாடியது; ஊக்கமாக ஜெயித்தது (லூக் 23:34). அவரது தோள்கள் உன் பெரும் பாவச்சுமையை சுமந்தது (லூக் 15:5)

அவரது முதுகு உனக்காக உழப்பட்ட நிலம்போலானது (சங் 129:3) அவரது விலா உன் நிமித்தம் ஈட்டியால் பிளக்கப்பட்டது. (யோ 19:34)

அவர் தன் கைகளை உனக்காக ஆணியடிக்கப்படக் கொடுத்தார். (சங் 22:16). அவரது பாதங்கள் உனக்காக இரும்பு ஆணிகளால் சிதைக்கப்பட்டது.

அவர் தன் தூய இரத்தத்தை உனக்காகச் சிந்தினுர் (அப் 20:28) அவர் தன் ஆத்துமாவை உனக்காக மரணத்தில் ஊற்றினுர் (ஏசாயா 53:12)

பரலோகத்தின் ஐசுவரியத்தை விட்டு தரித்திரராஞர். (IIகொரி 8:9) அவர் தன்ஜீவனையே உனக்காகக் கொடுத்தார். (யோவான் 10:11)

சகல நாட்களிலும் அவர் உன்னேடிருப்பதற்காக வாக்குப் பண்ணியிருக்கிருர். (மத் 28:20). உனக்காக ஒரு ஸ்தலத்தை ஆயத்தம் செய்து கொண்டிருக்கிருர் (யோவான் 14:3). பிதாவின் வலது பாரிசத்திலேஉனக்காகப்பரிந்து பேசிக் கொண்டே இருக்கிருர் (ரோமர் 8:34).

அந்தக் கல்வாரி நேசரோடு ஓர் உடன்படிக்கை செய்வாயா? உன் கண்களில் நீர் வழிய உன் உள்ளத்தின் ஆழத்திலிருந்து, ''கிறிஸ்துவோடு கூடச் சிலுவையிலறையப்பட்டேன்; இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிருர். நான் இப்பொழுது மாம்சத்தில் பிழைத்திருக்கிறதோ, என்னில் அன்பு கூர்ந்து எனக்காகத் தம்மைத்தாமே ஒப்புக் கொடுத்த தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்திஞலே பிழைத்திருக்கிறேன்" (கலா 2:20) என்று ஒப்புக் கொடுப்பாயா?

இதுதான் பலியின் உடன்படிக்கை! எனக்காக பலியான கிறிஸ்துவுக்காக நானும் தியாகமாக வாழுவேன், தியாகமாக ஊழியஞ் செய்வேன் என்று திட்டமான தீர்மானம் செய்வோமாக! ''நாம் பிழைத்தாலும் கர்த்தருக்கென்று பிழைக்கிரேம், மரித்தாலும் கர்த்தருக்கென்று மரிக்கிரேம். ஆகையால் பிழைத்தாலும் மரித்தாலும் நாம் கர்த்தருடையவர்களாயிருக்கிரேம்" (ரோமர் 14:8) அல்லேலூயா!

அத்தியாயம் 2

# மலர்களின் மகிழ்ச்சி!

சீனு தேசம் சுவிசேஷத்திற்கு தன் கதவுகளை இறுக்கமாய் அடைத்துக் கொண்ட நேரம் அது! பயங்கரமான அந்தகாரம் தேசத்தை ஆக்ரமித்துக் கொள்ள, வலுசர்ப்பம் தலைவிரித்து ஆடும் இருண்ட தேசம் அது!

அங்கு ஓர் ஏழைப் போதகர் அரசாங்கத்திற்கும், அதிகாரிகளுக்கும் தெரியாமல் இரகசியமாய் ஊழியஞ் செய்து கொண்டு வந்தார். அந்தரங்க சபைகளை பெலப்படுத்துவதும் காடுகளில் முழு இரவு ஜெபக் கூட்டங்களை நடத்துவதும் அவரது வேலை.

ஒரு நாள் நள்ளிரவு. தன் வீட்டின் கதவு தட்டப்படுவதைக் கேட்ட அவர் திடுக்கிட்டு விழித்தார். மெதுவாய்ச் சென்று கதவைத் திறந்தார். அங்கே அநேக போலீஸ் அதிகாரிகள், கைகளிலே தடிகளோடும், கொம்புகளோடும், கைது செய்ய விலங்குகளோடும் நின்று கொண்டிருந்ததைக் கண்ட அவர் மனம் ஒரு நிமிடம் படபடத்தது. கலங்கினது.

மறுநிமிடம் அவர் மேல் சரமாரியாக, அடியும், உதையும் விழ ஆரம்பித்தது. அவர் தெருவிலே ஒரு நாயைப்போல இழுக்கப்பட்டு போலீஸ் லாரியிலே ஏற்றப்பட்டார். அந்த போதகரின் மனைவி ஜன்னலின் அருகிலே நின்று கவனித்துத் தேம்பிக் கொண்டிருந்தாள். போதகரின் சிறிய மகனுக்கு ஏன் தன் தந்தையை எல்லோரும் அடிக்கிறார்கள் என்றுபுரியவில்லை.

தன் தந்தையை எப்படியாவது காப்பாற்ற வேண்டும் என்ற உள்ளுணர்வு அவன் உள்ளத்தைத் தூண்டியதால், தன் பிஞ்சுக் கரங்களை நீட்டிக் கொண்டு, ''அப்பா, அப்பா'' என்று அலறியபடி தவழ்ந்து தெருவுக்கு வந்துவிட்டான்.

போதகருக்கு ஒரு குழந்தை இருப்பதைக் கண்ட போலீசார், குழந்தையின் கையைப் பிடித்து லாரியிலே தூக்கிப் போட்டுக் காவல் நிலையத்துக்குக் கொண்டு சென்றார்கள்.

தான் கிறிஸ்துவுக்காக நிற்க வேண்டிய நேரம் வந்ததை உணர்ந்து கொண்டார். அந்த போதகர்! கிறிஸ்து எருசலேமுக்குச் செல்ல எப்படி தன் முகத்தை திருப்பினார் என்றும், எவ்விதமாய் பார சிலுவையை பொறுமையோடு சுமந்தார் என்றும், தன் உள்ளத்திலே நிலை நிறுத்தி, கிறிஸ்துவோடு தான் செய்த உடன்படிக்கையை நினைவு படுத்திக் கொண்டார்.

போலீஸ் நிலையத்தில் விசாரணை ஆரம்பமானது. அவரது எலும்புகள் நொறுக்கப்பட்டன. தலையிலே அடித்த அடிகளால் அவரது கண்கள் பிதுங்கி வெளியே விழுவதைப் போல இருந்தது. ஆயினும் கிறிஸ்துவை அவர் மறுதலிக்கவுமில்லை. தன்னோடுள்ள மற்ற கிறிஸ்தவர்களை அவர் காட்டிக் கொடுக்கவுமில்லை. கிறிஸ்துவின் மௌனம் ஏசாயா 53:7ஐ அவருக்கு நினைப்பூட்டியது. ''அவர் நெருக்கப்பட்டும் ஒடுக்கப்பட்டும் இருந்தார். ஆனாலும் தம்முடைய வாயை அவர் திறக்கவில்லை. அடிக்கப்படும்படி கொண்டு போகப்படுகிற ஒரு ஆட்டுக்குட்டியை போலவும், தன்னை மயிர் கத்தரிக்கிறவனுக்கு முன்பாகச் சத்தமிடாதிருக்கிற ஆட்டைப் போலவும் அவர் தம்முடைய வாயைத் திறவாதிருந்தார்.

அடிகளையும், சித்திரவதைகளையும் உபயோகித்து போதகரைத் தங்கள் வழிக்குக் கொண்டுவர முயற்சித்த முயற்சிகள் தோல்வியானதைக் கண்ட அதிகாரிகள், கடைசியில் ஒரு

நீள பூந்தொட்டியைக் கொண்டு வந்தனர். போதகரின் குழந்தையைப் பிடித்து அதில் கிடத்தினார்கள். ''போதகரே, உம் குழந்தை உம்மைக் காப்பாற்றும்படி, 'அப்பா' என்று அலறிக் கொண்டு தெருவிற்கு ஓடி வந்தது. இதோ, அந்தக் குழந்தையை நீர் காப்பாற்ற கடைசியாய் ஒரு தருணம் தருகிறோம். நீர் கிறிஸ்துவை மறுதலியாவிட்டால் உம் குழந்தையை உயிரோடு புதைக்கப் போகிறோம். என்ன சொல்லுகிறீர்?

போதகர் பதில் பேசவில்லை! அவர் இம்மைக்காக மட்டும் கிறிஸ்துவின் மேல் அன்பு வைத்தவரல்ல! எனவே அவர் கிறிஸ்துவை மறுதலிக்க ஒப்புக் கொள்ளவில்லை! தன் மகனைப் பற்றிய முழுபாரத்தையும் இயேசு கிறிஸ்துவின் மேல் வைத்து விட்டு, கல்வாரிக்கு நேராய் தன் கண்களை ஏறெடுத்தார்.

பூந்தொட்டிலில் கிடத்தப் பட்டிருந்த தன் அருமைப் புதல்வனின் கள்ளங்கபடமற்ற பிஞ்சு முகத்தை ஒரு முறைப் பார்த்தார். அவர் பார்த்துக் கொண்டே இருக்கும்போதே குழந்தையின் மேல் மண்ணையும் சாம்பலையும் வாரிக் கொட்டினார்கள். குழந்தை, 'வீல்' என்று அழுத அழுகை அவர் உள்ளத்தை உலுக்கியது. அதன் அழகிய நீல விழிகளில் குப்பை நிறைந்தது. தன் பிஞ்சுக் கரங்களையும் உதறி உதறித் துடித்தது. ''ஐயோ மகனே'' என்று நெருப்பிலிட்ட புழுவை போல, பேரதகரின் உள்ளம் கதறியது. ஆனால் அந்தப்பாதகர்களோ, மேலும் மேலும் மண்ணைக் கொட்டி. தொட்டியை நிறைத்து விட்டனர், மண் கொஞ்சநேரம் மேலும் கீழும் ஆடி அசைந்து கொண்டேயிருந்தது. சற்று நேரத்திற்குப்பின் அந்த அசைவும் நின்று விட்டது.

மனிதத் தன்மையற்ற ஒரு போலீஸ் அதிகாரி அந்தப் பூந்தொட்டியின் மேல் தண்ணீர் ஊற்றி சில பூஞ்செடிகளையும் விதைகளையும் வறட்டுப் பெருமையோடு நாட்டிச் சென்றார். போதகரை விலங்கிட்டு சிறையிலே அடைத்தார்கள்.

சிறையிலே தள்ளப்பட்ட போதகர் பசியினாலும், பட்டினியினாலும் வாடி, சில மாதங்களுக்குப்பின் மீண்டும் அதே இடத்திற்குக் கொண்டு வரப்பட்டார். அவருடைய வற்றி உலர்ந்த கண்கள், அவரை அறியாமலே அந்தப் பூந்தொட்டியின் பக்கம் திரும்பியது. அங்கே அழகிய சிகப்பு ரோஜாக்கள் பூத்துக் குலுங்கி இனிமையாய் ஆடிக் கொண்டிருந்தன. பாரும் போதகரே, கிறிஸ்தவர்கள் பூமிக்கு உப்பாக மட்டுமல்ல, சிறந்த உரமாகக் கூட இருக்கிறார்கள் என்று பரியாசம் செய்தான் அந்த அதிகாரி.

தன் மகனின் மார்பில் மலர்ந்த செந்நிறமான மலர்களைக் கண்டார். ஆ! அந்த சிகப்பு மலருக்குக் கீழே தன் மகனது சோக தியாக சரித்திரம் இருக்கிறதல்லவா? அவரது கண்களிலிருந்து பொங்கிய கண்ணீர்த் துளிகள் மலர்களின் மேல் விழுந்தது. அவர் எண்ணங்கள் அவரை கொல்கதாவுக்கு நேரே இழுத்துச் சென்றன.

இயேசு கொல்கதாவில் வதைக்கப்பட்ட போது, பிதாவாகிய தேவன் அதை எப்படி கண்டு சகித்துக் கொண்டிருந்தார்? தன்னுடைய ஒரே பேரான குமாரன், தன் செல்லப் பிள்ளை, பாடு அனுபவித்துப் பழக்கப்பட்டிராத தேவ குமாரன், அடிகளையும் நிந்தைகளையும், முள்முடியையும் ஏற்று கொண்டு சிலுவையில் தொங்குவதை பிதாவால் எப்படி தாங்கிக் கொள்ள முடிந்தது? பரலோகம் அந்தத் தருணங்களில் எந்த நிலையில் இருந்திருக்கும்? தேவதூதர்களின் தவிப்பை எப்படி வர்ணிக்க முடியும்?

மனமே, சிந்தித்துப்பார். ஆத்துமாவே, உன் மனக் கண்கள் அந்த காட்சியை தியானிக்கட்டும். இன்று நீ கிறிஸ்துவின் இரத்தத்தால் மீட்கப்பட்டு சந்தோஷம் பொங்குதே, சந்தோஷம் பொங்குதே என்னில் பொங்குதே என்று உற்சாகமாய் பாடுகிறாய். சிவந்த மலர்கள் காற்றில் அசைந்து ஆடுவதைப்போல உன் உள்ளம் மகிழ்ச்சியினால் பொங்குகிறது.

ஆ! அந்த மகிழ்ச்சிக்குக் கீழே ஒரு உச்சிதமான தியாகம் உண்டு. தன்னையே கல்வாரியில் ஒப்புக் கொடுத்த தேவக்குமாரனின் இரத்தத்தின் பெருந்துளிகள் உண்டு. தன் சொந்தக் குமாரனைக் காட்டிலும் நம்மை அதிகமாக நேசித்த பிதாவின் தியாக உள்ளம் உண்டு.

ஆம், கிறிஸ்தவ மார்க்கம் உல்லாச புரிக்குச் செல்லும் சுகபோகமான மார்க்கமல்ல, அது பலியின் உடன்படிக்கை மார்க்கம். கிறிஸ்துவின் தியாகத்தில் திளைத்த அன்பின் மார்க்கம், கிறிஸ்துவின் தழும்புகளுள்ள கரங்களுக்குள் முற்றிலும் அர்ப்பணமாகும் சுயவெறுப்பின் மார்க்கம்.

சீஷர்கள் இதை உணர்ந்தார்கள். கிறிஸ்துவின் கல்வாரி அன்பு அவர்களை நெருக்கி ஏவினது. பலியின் உடன்படிக்கை செய்த அவர்கள், கிறிஸ்துவுக்காக பானபலியாக வார்க்கப்பட்டு மடிவதையே பெரும் பாக்கியமாக கருதினார்கள்.

எவ்வளவு காலம் நம் தேசத்தில் வாசல்கள் திறந்திருக்குமோ தெரியாது. ஒருவனும் கிரியைச் செய்யக் கூடாத இராக்காலம் வருகிறது என்று கிறிஸ்து எச்சரித்தார் (யோவான் 9:4). தேசத்தில் அந்தகாரம் சூழுமுன்னே, உனக்காக மரித்த கிறிஸ்துவுக்காக உன் முழு பெலத்தோடு ஊழியம் செய்ய முன் வருவாயா?

# பலியின் உடன்படிக்கை!

''பலியினாலே என்னோடே உடன்படிக்கை பண்ணின என்னுடைய பரிசுத்தவான்களை என்னிடத்தில் கூட்டுங்கள் என்பார்" (சங் 50:5)

நம்முடைய ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து வரும் பொழுது தன் தூதர்களுக்குக் கட்டளை கொடுத்து சொல்லும் வார்த்தைகள்தான் இவைகள்! மீண்டும் மீண்டும் இந்த வசனத்தை கருத்தோடு வாசித்து தியானஞ் செய்யுங்கள்.

அவர் வருகையில் அவர் கண்கள், பலியினால் உடன் படிக்கை செய்யும் பரிசுத்தவான்களையே தேடுகிறது! கல்வாரி அன்போடு தங்களை இணைத்துக் கொண்டு, தியாகமாக ஊழியஞ்செய்து, அவரைப் பின்பற்றும் தேவபிள்ளைகளையே அவர் தம்மிடம் கூட்டிச் சேர்க்கிறார். (மத் 24:31)

அவரோடு பலியின் உடன்படிக்கை செய்திருக்கிறாயா? ஜெபத்தில் பலியின் சுகந்த வாசனையாய் உன்னை ஊற்றிக் கொடுக்கிறாயா? தியாக பலியாய் ஊழியஞ் செய்கிறாயா? கர்த்தருக்குக்கென்று ஜீவபலியாக வாழ்கிறாயா?

''என்னோடே'' உடன்படிக்கை பண்ணின

''என்னுடைய'' பரிசுத்தவான்களை

''என்னிடத்தில்" கூட்டுங்கள் என்பார்

மூன்று முறை ''என்னோடு" என்று உரிமை பாராட்டு வதின் இரகசியம்என்ன? பலியின் உடன்படிக்கை செய்தவர்

கள் மேல் அவர், அவ்வளவு அன்பு வைத்து, அவர்களுக்காக அன்பின் வைராக்கியம் கொண்டது ஏன்? ஏனென்றால் அவர் உடன்படிக்கையைக் காத்துக் கொள்வதில் உண்மையுள்ளவர். அவரை முற்றிலுமாக நமக்கு தந்ததால், நம் முழுமையையும் அவர் எதிர்பார்க்கிறார்!

1. பலியின் பிரதிஷ்டை:— பில்லி கிரகாம் அப்பொழுது 'ஒரு வாலிபனாக' இருந்தார். அந்த இளம் வயதில் தேவனுக்காக தான் ஏதாவது பெரிய காரியம் செய்யவேண்டும் என்ற ஆர்வம் அவருக்கு!

நண்பர்களோடு ஒரு நாள் கால் பந்தாடும்படி (Foot Ball) சென்றார். விளையாடிக் கொண்டிருந்த நேரத்திலும் அவர் உள்ளம் தேவனோடு உறவாடிக் கொண்டிருந்தது. உலகத்திலுள்ள மற்ற வாலிபர், வயோதியர், சிறியோர், பெரியோரின் ஆத்தும தேவைகளைப் பற்றி கர்த்தர் பில்லி கிரகாமின் உள்ளத்தில் பேசிக் கொண்டிருந்தார்.

விளையாட்டு முடிந்தது. கூட விளையாடினவர்கள் அவரவர் தம் தம் வீடுகளுக்குச் சென்றுவிட்டார்கள். ஆனால் பில்லி கிரகாமோ, அந்த கால்பந்து மைதானத்திலே முழங்காற் படியிட்டார். கண்களிலிருந்து தாரை தாரையாய் கண்ணீர் ஓடிக்கொண்டிருந்தது. "ஆண்டவரே என்னை நம்பும், என்னை நம்பும், உமது பார்வையிலே என்னை நம்பிக்கைக்கு உரியவனாக்கும்" என்று கதறி கதறி, மீண்டும் மீண்டும் அதே வார்த்தைகளைச் சொல்லி ஜெபிக்கலானார். அவரது உள்ளம் தேவனிடத்தில் கெஞ்சிக் கொண்டிருந்தது. ஏறத்தாழ நான்கு மணி நேரங்கள் மிகுந்த சத்தத்தோடு அதே வார்த்தைகளைச் சொல்லி ஜெபித்தார். "ஆண்டவரே என்னை நம்பும்" என்பதுதான் அவர் ஆத்துமா தேவனை நோக்கியிட்ட ஓலம். முழங்காலிலேயே அந்த மைதானம் முழுவதும் சுற்றி வந்தார். ஆம். கர்த்தருடைய

ஆவியானவர் அவர்மேல் அசைவாடி, அன்றிலிருந்து ஒரு பெரிய திருப்பத்தைக் கட்டளையிட்டார். பலியின் பிரதிஷ்டை, விளையாட்டு வீரனுன அவரை மாபெரும் சுவிசேஷ வீரனுக்கிற்று.

நம் தேசத்தின் தேவைகள் மகா அதிகம். கிறிஸ்துவை அறியாத இலட்சக்கணக்கான கிராமங்கள், ஏழையும் பேதமையுமான மக்கள். அந்த காரத்திலும், அறியாமையிலும், இருளிலும், விக்ரக ஆராதனையிலும் புழுக்களைப் போல தவித்து ஏங்குகிருர்கள்! உன் மனம் உருகவில்லையா? ஆண்டவரே என்னை உபயோகியும் என்று கதறமாட்டாயா?

''ஆண்டவரே, ஸ்காட்லாந்தை எனக்குத் தாரும். அல்லது என் உயிரை எடுத்துக் கொள்ளும்'' என்று கதறி, ஸ்காட்லாந்தில் பெரிய எழுப்புதலை உண்டாக்கிக் காண்பித்த பக்தனின் வாழ்க்கையை நீ வாசித்ததில்லையோ?

சுகபோகமான வாழ்க்கைக்கும், சுகபோகமான ஊழியத்திற்கும் ஒரு முற்றுப்புள்ளி வை! சிலுவை சுமந்தவருக்காக, தேசத்தை அசைக்க தியாக பாதையிலே அடியெடுத்து வை! பலியினுல் அவரோடு உடன்படிக்கை செய்யும் பரிசுத்தவான்களை அவர் ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிருர்.

2. கிறிஸ்துவின் உடன்படிக்கை:— உலகத் தோற்றத்திற்கு முன்பே, தேவக்குமாரன் மனுமக்களோடு ஒர் உடன்படிக்கை செய்தார். அதன் பலனுக, ''உலகத் தோற்றத்திற்கு முன் அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டி" எனப் பெயர் பெற்ருர். (வெளி5:6, எபி 7:1-3)

காலம் நிறைவேறின் போது, தம்மைத்தாமே தாழ்த்தி, மாம்சமாகி, தான் மரண பரியந்தம் கீழ்ப்படிந்தவராகி, நமக்கு மீட்புண்டாக தமது சரீரத்தைச் சிலுவையிலே பலியிட

ஒப்புக் கொடுத்தார். தன் ஆத்துமாவை மரணத்திலே ஊற்றினர். (ஏசாயா 53:12)

''தம்முடைய சொந்தக் குமாரனென்றும் பாராமல், நம்மெல்லாருக்காகவும் அவரை ஒப்புக் கொடுத்தவர், அவரோடுகூட மற்ற எல்லாவற்றையும் நமக்கு அருளா திருப்பது எப்படி?" (ரோமர் 8:32) இதுவே பிதாவும், குமாரனும், ஆவியானவரும் நம்மோடு செய்யும் உடன் படிக்கை!

தேவ பிள்ளையே, அவரது அன்புக்கும் தியாகத்திற்கும் தகுதியான வாழ்க்கை வாழ்கிருயா? ஜீவனைக் கொடுத்த கிறிஸ்துவுக்காக, அவரது தியாகத்தின்படி, நாங்களும் பலி யாக ஜீவிப்போம் என்று பிரதிஷ்டை செய்கிருயா?

3. இரண்டுவித பலிகள்:— பலிகளில் இரண்டு வகை உண்டு. முதலாவது பலி கட்டாயமாக ஒவ்வொருவரும் செலுத்தவேண்டிய பலி. இது பாவ நிவாரண பலி அல்லது குற்ற நிவாரண பலி எனப்படும். ஏனெனில் இரத்தம் சிந்துதலில்லாமல் பாவமன்னிப்பு இல்லை என்று வேதம் திட்ட மாய் சொல்கிறது. இந்த கட்டாய பலியாக, கிறிஸ்து தாமே முன்வந்து நமக்காக அடிக்கப் படும்படி ஒப்புக் கொடுத்தார். நாம் மெய்மனஸ்தாபத்தோடு நம் பாவங்களுக்காக கதறி அழுது ஜெபிக்கும் போது, எனக்காக அல்லவா மரித்தீர் என்று உள்ளத்தின் ஆழத்திலிருந்து உணரும்போது கிறிஸ்துவின் பலியில் நாம் பங்கு பெறுகிறேம். அவரது இரத்தம் பாவங்களற நம்மைக் கழுவி சுத்திகரிக்கிறது.

இரண்டாவது பலி உற்சாகபலி! கர்த்தர்மேல் உள்ள அன்பினல் உற்சாகமாக போஜனபலி, பானபலி! சமாதான பலி என்ற பலிகளைச் செலுத்தலாம். இவை உன் பொருத்தனைகளைக் குறிக்கும். கட்டாயமாக அல்ல, விசன மாக அல்ல, உன் தியாகமான காணிக்கைகளைச் செலுத்த

லாம். தியாகமாக ஒரு பொழுது உணவை கர்த்தருக்கென்று விட்டுவிடலாம். வாரத்தின் சில நாட்களில் உபவாசித்து ஜெபிக்கலாம். 'எதைச் செய்தாலும் கர்த்தருக்கென்றே செய்வாயாக' கல்வாரி அன்பே உன்னை நெருக்கி ஏவட்டும்.

சாது சுந்தர் சிங் ஒருமுறை சொன்னார், "இந்த உலகத்தில் வாழும்போதுதான் கிறிஸ்துவுக்காக சிலுவை சுமக்கும் பாக்கியம் நமக்குக் கிடைக்கிறது" ஆம் எனக்காக சிலுவை சுமந்த அவருக்காக, அவரோடு நானும் சிலுவை சுமப்பேன் என்று பிரதிஷ்டை செய்து காலில் செருப்புகூட அணியாதபடி பலியின் உடன்படிக்கை செய்தார், அந்த பக்தர்!

"பலியினால் என்னோடே உடன்படிக்கை செய்த என்னுடைய பரிசுத்தவான்களை என்னிடத்தில் கூட்டுங்கள்" என்று ஆண்டவர் நம்மை அழைக்கும் நாள் எவ்வளவு ஆனந்தமான நாள்! இக்காலத்துப் பாடுகள் இனி நம்மில் வெளிப்படும் மகிமைக்கு ஒப்பானவைகள் அல்லவே. அவரோடு பாடுபடுகிறவர்கள், அவரோடு அரசாளுவார்கள். அல்லேலூயா!

★★
★

## அத்தியாயம் 4

# பலியின் தீர்மானம்

மரணமானாலும், ஜீவனானாலும்... ... கர்த்தாகிய கிறிஸ்து இயேசுவிலுள்ள தேவனுடைய அன்பைவிட்டு நம்மைப் பிரிக்கமாட்டாது. இதுதான் பலியின் தீர்மானம். (ரோமர் 8:37-39). இந்தத் தீர்மானம் கிறிஸ்துவிலே உன்னை உறுதிப்படுத்துவது மட்டுமல்ல, சோதனைக் காற்றுகளில் நீ நின்று பிடிக்க தேவபெலத்தை உனக்குத் தந்து உதவும்.

வாச்மேன் நீ (Watchman Nee) என்ற பக்தனின் வாழ்க்கையை உங்கள் முன் நான் சமர்ப்பிக்கட்டும். இருண்ட சீனா தேசத்திற்காக திறப்பின் வாசலில் நின்று அங்கேயே தன் ஜீவனை பான பலியாக வார்த்தவர்!

எனக்கென்று ஒன்றுமே வேண்டாம்;

என் தேவனுக் கென்று எல்லாமே வேண்டும்!

என்று பலியின் உடன்படிக்கை செய்து முழங்கியவர் இவர்!

சிறுவயதிலேயே சாமுவேலைப் போல ஜெபவீரனாக தேவனுடைய சமூகத்தில் அர்ப்பணித்து, மற்றவர்கள் தூங்கும் போது அவர்களுக்காக ஜெபத்தில் விழித்திருக்கவும், தேவனுடைய ஆசாரியனைப் போல, ஆபத்து நேரத்தில் தேவ ஜனத்தை எச்சரிக்கவும், புதிய நாளுக்காக மக்களைத் தட்டி எழுப்பவும், ஆயத்தப்படுத்தவும், ஜாமக்காரனாக தன்னைப் பிரதிஷ்டைச் செய்து கொண்டார். வாச்மேன் என்ற பெயருக்கு 'ஜாமக்காரன்' என்று தானே பொருள்?

4.11.1903 ஆம் ஆண்டு அஞ்ஞானமும் காரிருளும் சூழ்ந்த சீனா தேசத்தில் கவாட்டோ என்ற இடத்தில் இவர் பிறந்தார். 18 ஆம் வயது வந்தது. அந்த வயதே கர்த்தருக்கென்று தான் தீர்மானம் செய்ய வேண்டிய வயது என்று அறிந்து, "இயேசுவே, நான் இனி உலகத்தை வெறுத்து என் புறம்பே தள்ளுவேன். உம் சிலுவையோடு ஒரு புதிய வாழ்க்கைக்குள் பிரவேசிக்கிறேன். மரணமானாலும், ஜீவனானாலும் நீரே என் பங்கு." என்று பலியின் தீர்மானஞ் செய்தார்.

காலம் தாழ்த்தாமல், கிறிஸ்துவின் இரத்தம் தோய்ந்த கரங்களை தன் கைகளில் பிடித்துக் ககாண்டு, தெருக்களில் இறங்கி பிரசங்கத்தைத் தொடங்கினார். அதோடு கூட கிராம ஊழியங்களை ஆரம்பித்தார். அநேக வாலிபர்களை கிறிஸ்துவின் சேவைக்காக திரட்டி எழுப்பி உற்சாகப்படுத்தினார். ஆலயங்களில் தேவ செய்தியளித்தபின், அங்கு ஒரு ஜெபக்குழுவை ஏற்படுத்தினார். சீஷத்துவம் என்றால் என்ன? கிறிஸ்துவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றுவது எப்படி? என்று வாலிபர்களுக்குப் போதித்து, கல்வாரி அன்பை அவர்கள் உள்ளத்தில் ஊற்றினார். இடைவிடாமல் புத்தகங்களை எழுதினார். பிரசங்கங்களை உருவாக்கினார். பசி, தூக்கம், ஓய்வு என்று பாராது சீனாவின் பல பகுதிகளில் ஓடி ஓடி உழைத்தார். பகல் காலம் இருக்குமட்டும் நான் என்னை அனுப்பினவருடைய கிரியைகளைச் செய்யவேண்டும். ஒருவனும் கிரியைச் செய்யக் கூடாத இராக்காலம் வருகிறது என்ற கிறிஸ்துவின் வார்த்தைகள் அவரைத் துரிதப்படுத்திக் கொண்டே வந்தது.

காலம் மிக வேகமாகச் சுழன்றது. சீனா, மாசேதுங் தலைமையில் ஒரு பெரிய புரட்சியைக் கண்டது. கிறிஸ்தவர்கள் எதிர் நீச்சல்போட்டு, இரத்த சாட்சிகளாய் மாறவேண்டிய இருண்டநேரம் வந்தது. ஆலயங்கள் தகர்க்கப்பட்டன. கிறிஸ்தவர்கள் சிதறடிக்கப்பட்டார்கள். கைது செய்யப்பட்ட

போதகர்களுக்குள் ''வாச்மேன் நீ" யும் ஒருவர். 1951 ஆம் ஆண்டு அவருக்கு இருபது ஆண்டுகள் கடுங்காவல் தண்டனை என்ற கொடூரமான தீர்ப்பு வழங்கப்பட்டது. விலங்கிடப்பட்ட வராக, அவரது மனைவியின் கண்களுக்கு முன்னால் அடித்து இழுத்துச் செல்லப்பட்டார். அவர் மனைவி பசியாலும், பட்டினியாலும வறுமையினாலும் நோயினாலும் சிறைக்கு வெளியே பாடனுபவிக்கும் பொழுது.. இவர் சிறைச்சாலைக்குள்ளே நிர்ப்பந்திக்கப்பட்டு, மலத்தைப் புசிக்கவும், மூத்திரத்தைக் குடிக்கவும், குளிரிலே தவிக்கவும், சவுக்கடிகளால் இரத்தம் சிந்தவும் தாங்கமுடியாத சித்திரவதைகளை அனுபவித்தார்.

சிறையிலும் இவர் தன் அருமை இரட்சகரை மகிழ்ச்சியோடு ஆடிப்பாடி துதிப்பதைக் கண்ட சீன அரசாங்கம், இவரது நாக்கைப் பிடித்து வெளியே நீளமாக இழுத்து, அறுத்து துண்டித்துப் போட்டார்கள். ஆனால் அவருக்கு ஒரு மகிழ்ச்சி, தனக்கு நாக்கு இருந்தவரையிலும் தன்னை நேசித்த கிறிஸ்துவுக்காக ஊழியம் செய்யவும், பிரசங்கம் பண்ணவும், மனமாற துதிக்கவும், தேவன் கொடுத்திருந்த தருணங்களுக்காக நன்றியுடன் தேவனைத் துதித்தார். நாக்கு இல்லாமற் போனால் என்ன? நன்றியுள்ள உள்ளம் போதுமே! இயேசுவோடு பேச, அவரோடு உறவாட! மரித்தவர்களும், மவுனத்திலிறங்குகிற அனைவரும் கர்த்தரைத் துதியார்கள். நாமோ இதுமுதல் என்றென்றைக்கும் கர்த்தரை ஸ்தோத்தரிப்போம்" அல்லேலூயா என்ற உறுதியோடிருந்தார் (சங் 115:17) ஜீவனானாலும், மரணமானாலும், விடுதலையானாலும்' சிறைவாசமானாலும், நாக்கு இருந்தாலும், அறுக்கப்பட்டுப் போனாலும், துதியின் மகிழ்ச்சி அவர் உள்ளத்திலிருந்தது.

இருபது ஆண்டுகள் கடுமையான சிறைவாசம். வெளியே சொல்லமுடியாத வேதனைகள்! 1971 ஆம் ஆண்டு அவர் விடுதலையாக வேண்டிய ஆண்டு. அவர் மனைவி அவரது விடுதலைக்காக ஆவலோடு எதிர்பார்த்து ஏக்கத்துடன் காத்திருந்

தார்கள். இருபது ஆண்டு பிரிவு! ஐயோ, தாங்கமுடியாத வேதனையான பிரிவு அது. ''வாச்மேன் நீ" விடுதலையாகி வீடு வருவார் என்று வழியையே பார்த்துக் கொண்டிருந்த அவர் மனைவி, திடீரென்று நாற்காலி முறிந்து கீழே விழுந்தார்கள். கணவனைக் காணுமலே உயிர் பிரிந்தது.

இந்தச் செய்தி சிறையிலேயே இருந்த் "வாச்மேன் நீ"க்கு எட்டினபோது அவர் புழுவாய்த் துடித்துப்போனுர். எனினும் பூமியில் சந்திப்பதைவிட பரலோகத்தில் சந்திப்பதே மிகுந்த மகிழ்ச்சியைத் தரும் என்று அந்த நாளுக்காக ஏங்கிக் கொண்டிருந்தார்.

வெளி 6:9, 10, 11 வசனங்கள் இவ்விதமாய்ப் பேசுகின்றன. ''வேத வசனத்தினிமித்தமும், தாங்கள் கொடுத்த சாட்சியினிமித்தமும் கொல்லப்பட்ட ஆத்துமாக்களை பலிபீடத்தின் கீழே கண்டேன். அப்பொழுது தங்கள் சகோதரரானவர்களின் தொகை நிறைவாகுமளவும் இன்னும் கொஞ்சகாலம் இளைப்பாற வேண்டும் என்று அவர்களுக்குச் சொல்லப்பட்டது".

தொகை நிறைவாகும்படி ஒரு பங்காக 1.6.72ல் 'வாச்மேன் நீ" இவ்வுலகத்தில் தன் நேசருக்காக மகிழ்ச்சியோடு அனுபவித்த நேச பாடுகளின்று விடுபட்டு, நித்திய மகிமைக்குள், மகிழ்ச்சியோடு, பிரவேசித்தார். நாம் அநேக உபத்திரவங்களின் வழியாய்த் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்க வேண்டும் என்று (அப் 14:22) அப்போஸ்தலனுகிய பவுல் ஆலோசனை சொல்கிருர்.

★ ★ ★

அத்தியாயம் 5

# பலியாக வேண்டிய சுபாவங்கள்

பலியைக் குறித்து விளங்கிக் கொள்ள வேண்டுமானல் ஆவியானவரின் வெளிச்சத்தில் லேவியராகமம் முழுவதையும் கருத்தோடு படிப்பது நல்லது. பழைய ஏற்பாட்டில் பலியாகும் ஜீவன்கள், புதிய ஏற்பாட்டில், பலியினுல் உடன் படிக்கை செய்யும் பரிசுத்தவான்களுக்கு நிழலாட்டமாய் இருக்கின்றன.

அசுத்தமான பிராணிகள் பலி செலுத்தப்படுவதில்லை. சுத்தமான பிராணிகளுக்குள்ளும் பழுதற்றவைகளையே கர்த்தருக்கென்று தெரிந்து கொண்டு பலி செலுத்தவேண்டும். காளை, செம்மறி ஆடு, வெள்ளாடு, புரு ஆகியவை பலி செலுத்த தெரிந்தெடுக்கப்பட்டவை. இரட்சிக்கப்பட்ட தேவனுடைய பிள்ளையே, உன் வாழ்க்கையிலும் பலியாக்கப் படவேண்டிய சுபாவங்கள், குணதிசயங்கள் உண்டு. மனுஷீக சுபாவங்களை நீ பலி செலுத்த ஒப்புக் கொடுக்கும் போது தெய்வீக சுபாவங்கள் உன்னில் வளரும். பரிசுத்தத்தின்மீது பரிசுத்தமடைவாய்!

1. காளை:— இது மாம்சீகமாக உழைத்துக் கொண்டே இருக்கும். உழைப்பைத் தவிர வேறு ஒன்றும் அறியாதது. அநேக கிறிஸ்தவர்களும் கூட வேலை, வேலை என்று இரவு பகலாக உழைத்து, கர்த்தருக்கு நேரம் கொடுப்பதில் தவறி விடுகிறார்கள். விளக்கைக் கொளுத்தி, மரக்காலினுள் மூடி வைத்ததைப் போல, இரட்சிப்பின் சந்தோஷத்தை வியாபாரத்திற்குள், தொழில்களுக்குள் மூடி மறைத்துக் கொள்கிறார்கள். உலக வேலையில் அளவுக்கு மீறி மூழ்கிக்கிடப்பதை காளை எச்சரிக்கிறது. பலி செலுத்து. அன்று மார்த்தாள் தன் வீட்டு வேலைகளைச் செய்து, செய்து சோர்வடைந்தாள்.

கர்த்தருடைய பாதத்தில் அமர்ந்திருக்க நேரமில்லாதிருந்த அவளைப் பார்த்து, கர்த்தர், ''மார்த்தாளே மார்த்தாளே, நீ அநேக காரியங்களைக் குறித்துக் கவலைப்பட்டுக் கலங்குகிறாய், தேவையானது ஒன்றே," என்று எச்சரித்தார். உலகத்திற்காக செலவழிக்கும் நேரங்களை பலி செலுத்தி கர்த்தருக்கு என்று செலவழி. தூக்க நேரங்களின் ஒரு பகுதியை பலி செலுத்தி ஜெபத்தில் அமர்ந்துவிடு. ஓய்வு நேரங்களையும் உல்லாச நேரங்களையும், குறைத்துக் கொண்டு, கர்த்தருடைய ஊழியத்திலும், ஆராதனைகளிலும் கலந்து கொள்.

2. செம்மறி ஆடு:— செம்மறி ஆடுகளுக்கு மந்தை சுபாவமுண்டு. ஒரு செம்மறி ஆடு ஓடினால் மற்ற எல்லாம் அவற்றைப் பின்செல்லும். இன்னும் நமது கிறிஸ்தவத்தில் செம்மறி ஆட்டின் சுபாவங்கள், ஜாதி வித்தியாசங்கள், குலம் கோத்திரம் பார்க்கும் வழக்கங்கள் இருப்பது எத்தனை வேதனையானது! சிலர் ஜாதி வித்தியாசம் பார்ப்பதில்லை. ஆனால் சபை வித்தியாசத்தை அதிகமாய்ப் பார்ப்பார்கள். தேவபிள்ளையே, ஜாதியோ, சபை பிரிவுகளோ உனக்காக ஜீவனைக் கொடுக்கவில்லை. உனக்குள் ஜாதி வித்தியாசங்களும், ஜாதிப் பெருமைகளும் இருந்தால் உடனே அவற்றைப் பலிசெலுத்து. கிறிஸ்துவைவிட உன் சபைப்பிரிவை மேன்மைப்படுத்தாதே அநேகருடைய வீழ்ச்சிக்குக் காரணமாயிராதே! இந்த சிறியரில் ஒருவனுக்கு இடறலுண்டாக்கினால் அவன் கழுத்தில் இயந்திரக் கல்லைக் கட்டி சமுத்திரத்தின் ஆழத்தில் போட்டு விடுவது நலமாயிருக்கும் என்று இயேசு எச்சரித்தார். கிறிஸ்து உன்னை நேசித்து அன்பு கூர்ந்ததைப்போல, நீயும் ஜாதி வித்தியாசமில்லாமல் சபை பாகுபடில்லாமல் நேசிக்கக் கற்றுக் கொள். அதற்கு விரோதமாய் உன் உள்ளத்தில் எழும்பும் சகல மேட்டிமையான மந்தை சுபாவமுள்ள செம்மறியாடுகளையும் பலி செலுத்த தயங்காதே!

வெள்ளாடு:— வெள்ளாடு காணுமிடமெல்லாம் தாவும். மேய்ப்பனுக்கு அடங்காது. ஒரு இடத்தில் நின்று மேயாது. உள்ளத்தை ஒருமனப்படுத்தி, ஜெபத்தில் அமரமுடியாத சுபாவம், எந்த ஐக்கியத்திலும் நிலைத்திருக்க முடியாத ஒரு

தன்மை, கர்த்தருடைய மேய்ப்பர்களை அலட்சியம் செய்யும் சிந்தை இவை பலி செலுத்தப்படவேண்டும். தேவ பிள்ளையே, சபைகூடி வருதல் தேவனுடைய ஒழுங்கு. அதை அலட்சியம் செய்யாதே! வெள்ளாட்டைப் போல காலமெல்லாம் தர்விக் கொண்டே திரியாதே!

நின்று யுத்தம் செய். தேவன் உனக்கு வெளிப்படுத்திய சத்தியத்தில் உண்மையுள்ளவனாயிரு. கர்த்தருக்கென்று சகல சோதனைகளிலும் வெற்றி பெற்று, உத்தமனாய் உன்னை விளங்கச் செய். தாவும் வெள்ளாட்டு சுபாவங்களை பலி செய்து உன்னைச் சீர்ப்படுத்திக் கொள்.

புரு:- சுயாதீன ஆவியால் பறந்து திரியும் ஒரு பறவை சுய சித்தம் செய்ய, உன் மனசும் மாமிசமும் விரும்பினதை நிறைவேற்ற நீயே கிரியை செய்து கொண்டிருந்தபோதும் உன் சுயம் உன்னை நடத்த வேண்டாம். கர்த்தரே உன்னை நடத்தட்டும். அன்று பேதுருவைப் பார்த்து கர்த்தர் சொன்னார். ''நீ இளவயதுள்ளவனாயிருந்தபோது உன்னை நீயே அரை கட்டி உனக்கு இஷ்டமான இடங்களிலே நடந்து திரிந்தாய், நீ முதிர் வயதுள்ளவனாகும்போது, உன் கைகளை நீட்டுவாய், வேறொருவன் உன் அரையைக் கட்டி உனக்கு இஷ்டமில்லாத இடத்திற்கு உன்னைக் கொண்டு போவான் என்றார்." பரிசுத்தாவியானவர் உன்னைக் கொண்டு போகும் பாதை ஒரு வேளை உனக்குப் பிரியமில்லாததாய் இருக்கலாம். ஆனால் உன் இஷ்டத்தையும், உன்னை நீயே அரைகட்டி சுயாதீனமாய்ப் பறந்து செய்வதையும் பலி செலுத்தினால் நீ தேவனை மகிமைப்படுத்துவாய் (யோ 21:18,19)

தேவபிள்ளையே, ஒவ்வொரு நாளும் கல்வாரியின் அடிவாரத்தில் உன்னை அர்ப்பணித்து, பரிசுத்தாவியானவரின் ஒத்தாசையால் உன் வாழ்க்கையை ஆராய்ந்துபார்த்து தேவனுக்குப் பிரியமில்லாத எந்த சுபாவத்தையும் உன்னை விட்டு அகற்றி, பலி செலுத்தி பரிசுத்தமடைவாயாக! கறை, திரையில்லாத பரிசுத்தவான்களைக் கூட்டிச் சேர்க்க கர்த்தர் சீக்கிரமாய் வருகிறார். ஆமென்.

அத்தியாயம் 6

# எது வரைக்கும்?

''தேவனே, எதுவரைக்கும் சத்துரு நிந்திப்பான்? பகைவன் உமது நாமத்தை எப்பொழுதும் தூஷிப்பானோ?" (சங் 74:10)

''எது வரைக்கும் தேவனே?" என்று 'சங்கீதக்காரன் மட்டுமல்ல, சீனாவில் சிறையில் வாடும் அநேக தேவனுடைய பிள்ளைகளும் கூட அவ்வாறே ஜெபித்து வருகிறார்கள். சிறைச்சாலையின் பாடுகள், சவுக்கடிகள், நிந்தைகள் ஒருபக்கமிருக்கட்டும்; மறுபக்கத்தில் அவர்களுக்கு வேத புத்தகங்கள் இல்லை. விசுவாசிகளின் ஐக்கியமில்லை. போதகர்கள் இல்லை. துதிப் பாடல்கள் இல்லை. எங்கு நோக்கினாலும் கடவுள் இல்லை என்று வலு சர்ப்பம் தலைவிரித்து ஆடும் அவதூறுகளும், அரசாங்கத்தின் பிரச்சாரங்களும் தான். போதாக்குறைக்கு கிறிஸ்தவர்கள் பழியையும், நிந்தையையும், அவமானத்தையும், சிறைவாசத்தையும் சித்திரவதையையும் வேறு சுமக்க வேண்டும்!

''தேவனே, எதுவரைக்கும்?" என்ற பெருமூச்சு இளம் விசுவாசியான மின்சின் உள்ளத்தின் ஆழத்திலிருந்து ஏக்கத்தோடு வெளி வந்தது.

கடைசியில் அவள் ஒரு தீர்மானத்திற்கு வந்தாள். வேத வசனத்திற்கும் ஆராதனைகளுக்கும் தடையான இந்த தேசத்தைவிட்டுவிட்டு சுயாதீனமாக, விடுதலையோடு தேவனை ஆராதிக்கும் ஏதாவது தேசத்துக்குச் சென்று விடவேண்டும் என்பதே அவளது முடிவு. தன் கிராமத்தை விட்டு, இரவும் பகலுமாக நடக்க ஆரம்பித்தாள். அவள் உள்ளத்தை ஊக்கு

வித்ததெல்லாம் வேத புத்தகத்தை பெறுவேன் என்ற விசுவாசமே! கடைசியாக கடற்கரையை வந்தடைந்தாள், கடற்கரையில் துப்பாக்கி ஏந்திய பாதுகாப்புப்படையினரும், ராணுவத்தினரும், போலீசாரும் ரோந்து சுற்றி சுற்றி வந்து கொண்டிருந்தார்கள்.

மின்சின் என்ற அந்த இளம் விசுவாசிக்கு நடுக்கம் பிடித்தது; எனினும் தன் உள்ளத்தை உறுதி படுத்திக் கொண்டு இருளிலே பதுங்கிபதுங்கி வந்து, யாரும் கவனிக்காத வேளை திடீரென்று கடலில் பாய்ந்து நீந்த ஆரம்பித்தாள். சீனாவிற்கும் ஹாங்காங் தேசத்திற்கும் இடையிலுள்ள கடலுக்கு மிர்ஸ் வளைகுடா என்று பெயர். இந்த வளைகுடாவை நீந்திக் கடந்து விட்டால்—ஆ! எனக்கு வேத புத்தகம் கிடைத்து விடும்— ஆ நான் மகிழ்ச்சியோடு கிறிஸ்தவ ஆராதனைகளில் கலந்து கொள்ள முடியும்.

மின்சின் உள்ளத்தை தேவ அன்பு நிரப்பியது. புது பெலத்தோடு நீந்த ஆரம்பித்தாள். பகல் வந்தது. இரவும் வந்தது. தொடர்ந்து நீந்தியதால் கை, கால்கள் சோர்வடைந்தன. பசி, தாகம் வயிற்றைக் கிள்ளியது. எங்கு நோக்கினாலும் கடல், உப்புத் தண்ணீர்தான்! ஆங்காங்கு பயங்கரமான சுரு மீன்கள் வாலை வளைத்து ஓடிக் கொண்டிருந்தன. மறுநாள் விடிந்தது. பின் சூரியன் மறைந்தது. மீண்டும் இரவு; இப்படி பல நாட்கள் நகர்ந்தன.

கடைசியில் புது தேசத்தை— ஹாங்காங் தேசத்தை வந்தடைந்தாள். பொதுவாக அந்தக் கடலை நீந்திக் கடப்பது எளிதானதல்ல. கை கால்களின் சோர்வினால் நடுக்கடலில் மரணமடையக் கூடும். அல்லது சுருமீன்களின் கோரப் பற்களுக்கு இரையாகி மடியக் கூடும். ஆனால் மின்சின் நீந்தி மறுகரை அடைந்தது, தேவன் செய்த பெரிய அற்புதமே!

தரையில் வந்து விழுந்த மின்சின் நடந்தாளோ, உருண்டாளோ அல்லது தவழ்ந்தாளோ தெரியவில்லை. ஆனால் அவள் கேட்டு, விசாரித்து ஓடோடி வந்தது ஒரு வேதாகமக் கடைக்குத்தான்! அங்கே ஏராளமான வேத புத்தகங்களை அடுக்கி வைத்திருந்தனர். அவற்றை ஓடிப்போய் அணைத்துக் கொண்டு கதறிக் கதறி அழ ஆரம்பித்தாள். ''என் அன்பு இரட்சகர் அருளிச் செய்த ஜீவவார்த்தைகளல்லவா இவைகள்! என் தேசத்தில் வேத புத்தகத்தின் ஒரு தாளைக்கூடக் காண முடியாதே? இங்கோ, அடுக்கியல்லவா வைத்திருக்கிறார்கள்?" கண்ணீர் ஆறாய் ஓடிக் கொண்டிருந்தது.

''ஐயா, எனக்குச் சில வேத புத்தகங்களைத் தருவீர்களா? அவைகளை தண்ணீர் புகாத பிளாஸ்டிக் பைகளில் அடைத்து மீண்டும் இதே கடலை நீந்திப்போய், சீன தேசத்து விசுவாசிகளுக்குக் கொடுப்பேன்." என்றாள் அந்த இளம்பெண், மின்சின்!

இந்த வார்த்தைகள் அங்குள்ள விசுவாசிகளின் உள்ளங்களை உலுக்கிற்று! ஆம் உண்மையான கல்வாரி அன்பு, தியாகஞ் செய்ய அழைக்கிறது!

ஆயிரமாயிரம் மின்சின்கள் நம் தேசத்தில் எழும்புவார்களாக!

ஃ ஃ ஃ

# வேதத்தின் கிரயம் என்ன?

விலையேறப் பெற்ற வேதம் நம் கையில் கொடுக்கப்பட்டிருக்கிறது! ஆனால் நமக்கோ அதன் விலைக் கிரயம் தெரியவில்லை. எத்தனை உயிர்ப் பலிகளின் வழியாய், இரத்தச் சாட்சிகளின் இரத்தத்தில் தோய்ந்து நமது கைகளில் இன்று தவழ்கிறது தெரியுமா? வேதத்தின் விலை மதிப்பை அறிந்து, பலியினால் உடன்படிக்கை செய்து, நமது கரங்களில் கிடைக்கும்படிச் செய்த ஒவ்வொரு தேவனுடைய பிள்ளைகளின் வாழ்க்கையையும் நன்றியோடு நினைவு கூறுவது நம் கடமை. இதோ, திரளான தண்ணீர்கள் நேசத்தை அவித்துப்போடமாட்டாது (உன் 8:6) என்பதற்குச் சில ஆதாரங்கள்.

1. அக்கினித்தழல்கள்:-பதினைந்தாம் நூற்றுண்டின்ஆரம்ப காலம் அது! வேத புத்தகத்தை அச்சிடுவதோ, பரப்புவதோ, அல்லது வினியோகிப்பதோ, பயங்கரமான குற்றங்களாகக் கருதப்பட்டது. மத குருக்களைத் தவிர வேறு யாரும் வைத்திருக்கக் கூடாது என்ற சட்டம் அமுலில் இருந்தது.

ஆனால் வில்லியம் திண்டேல் என்ற வாலிபர் கர்த்தருக்கு முன் ஒரு சபதம் ஏற்றுர். ''இங்கிலாந்தில் ஏர் உழும் வாலிபன்கூட வேத வாக்கியத்தை ஆராய்ந்து அறிய வழி செய்வேன்!" என்று மார்தட்டிய அவர் இடைவிடாது வேதத்தை மொழி பெயர்க்க அரம்பித்தார். கண் அயராது உழைத்தார்.

மதகுருக்கள் திண்டேலை வேட்டையாடித் துரத்தினர். கொலை வெறியோடு அவரைப் பிடிக்க முயற்சித்தனர். ஆனல் அவரோ, தப்பி ஜெர்மனியில் போய் ஒளிந்து கொண்டார்.

அங்கிருந்து ஆயிரம் ஆயிரமான ஆங்கில வேதாகமங்கள் அச்சிட்டார். அவைகளை துணி மூட்டைகளில் சுற்றினர். மாவு பைகளில் மாவோடு மாவாக அடைத்து அனுப்பினர். வேத புத்தகம் என்று யாரும் அறியாதபடி அவைகளை கடத்தல் போல இங்கிலாந்திற்குக் கொண்டு வந்தார்.

சில வேத பிரதிகள் மதகுருக்களிடம் கிடைத்தன. அவர்கள் அதைத் தீ வைத்துக் கொளுத்தினர். அப்படிக் கொளுத்துவது தேவனுக்குப் பிரியமான சுகந்தபலி என்று பிரச்சாரமும் செய்தனர்.

எல்லா எதிர்ப்புகளுக்கும் அஞ்சாமல், இரவும் பகலுமாக வேத புத்தகத்தை அச்சிட்டு, வினியோகித்து வந்ததின்டேல், கடைசியில் மத குருக்களின் கைகளில் சிக்கிக் கொண்டார்.

அவரை ஒரு மரத்தூணில் கட்டி வைத்து, கீழிருந்து நெருப்புப் போட ஆரம்பித்தனர். தீ ஜுவாலை அவரது கால்களை தீண்டியது. பாதங்கள் வெடித்தன. இரத்தம் கசிவுண்டது. கொஞ்ச நேரத்தில் கொடூரமான தீப்பிளம்புகள் அவர் உடலை அணைத்து உயிரை உறிஞ்ச ஆரம்பித்தது. அப்பொழுது அவர் வாயிலிருந்து வந்த ஜெபம், "என் தேவனே இங்கிலாந்து தேச மன்னனின் கண்களைத் திறந்தருளுவீராக!" என்பதுதான்.

அவர் எரிக்கப்பட்டுப் போனாலும் அவர் இரத்தத்துளிகள் அழிந்து விடவில்லை. அவை இன்றும் பேசுகின்றன. கர்த்தர் ஜேம்ஸ் அரசனின் மூலம் அநேக வேதசங்கங்களை நிறுவி, வேதம் அனைவருக்கும் கிடைக்க வழி செய்தார்.

2. சிறை வாசகங்கள்:- பர்மா தேசந்திற்குச் சென்று மிஷனெரியாக ஊழியஞ் செய்தவர் Dr ஜட்சன். அவர் இரவு பக

லாக பல ஆண்டுகள் உழைத்து, வேத புத்தகத்தை பர்மீய மொழியில் மொழி பெயர்த்தார். அதை முடித்த உடனே கைது செய்யப்பட்டுக் கொடுமையாக சிறையிலடைக்கப் பட்டார்.

அந்த மொழி பெயர்ப்பு பிரதியை அரசாங்கம் கைப்பற்றி எரித்து விடுமோ என்ற பயம் மிஷனெரியின் மனைவிக்கு எழுந்தது. எனவே அவர்கள் அதை சிலகாலம் பூமியில் புதைத்து வைத்தார்கள். ஆனால்ஜட்சனுக்குஅந்தக்கையெழுத்துப் பிரதியை மீண்டும் வாசிக்க வேண்டும் என்ற ஆசை. எனவேமனைவிக்கு ரகசியமாய்சொல்லியனுப்பினார் மனைவி ஒரு வழியைக் கடைப்பிடித்தார். அந்தப் பிரதியை பஞ்சிலே சுற்றி பெரிய தலையணையாக்கி சிறையிலிருந்த ஜட்சனுக்கு கொடுத்தனுப்பினார்கள். நீண்ட நாட்கள் அந்த தலையணை ஜட்சனோடு இருந்தது.

ஜட்சனை ஒரு சிறையிலிருந்து மறு சிறைக்கு மாற்றும் போது அங்கே தலையணை அனுமதிக்கப்படவில்லை. சிறை அதிகாரி அதை தூர வீசி எறிந்தான். அது வெளியே போய் விழுந்து மிதியுண்டது. ஜட்சனுக்கு இருந்த வேதனை சொல்லி முடியாதது. தேம்பித் தேம்பி அழுதார்.

ஆனால் கர்த்தர் ஒரு பர்மீயனை அந்த வழியில் அனுப்பினார். அவன் தன்னையறியாமலேயே அந்தத் தலையணையைப் பிரித்துப் பார்த்த போது, அவன் உள்ளம் பரவசமடைந்தது தனது மொழியிலேயே வேதபுத்தகம் எழுதப்பட்டிருந்ததைக் கண்டு வேதாகமச் சங்கத்தாரிடம் கொடுத்து அச்சிடச் செய்தார்.

வேதத்திற்காக செலுத்தப்பட்ட கிரயம், சிந்தப்பட்ட வேர்வை, வடித்த இரத்தம் சொல்லி முடியாதது. வேதத்தை நீ நேசிக்கிறாயா? கர்த்தர் புலம்புகிறார். ''என் வேதத்தின் மகத்துவங்களை அவர்களுக்கு எழுதிக் கொடுத்தேன். அவை களை அந்நிய காரியமாக எண்ணினார்கள்" (ஓசியா 8:12),

தாவீது ராஜா கர்த்தருடைய வேதனேயை அறிந்தார். ''உம்முடைய வேதத்தை மனுஷர் காத்து நடவாதபடியால் என் கண்களிலிருந்து நீர்த்தாரைகள் ஓடுகிறது" (சங்119:136) என்று கண் கலங்குகிருர். தேவபிள்ளேயே, இதையெல்லாம் உன் உள்ளத்தில் நிறுத்தி, சிந்தனே செய், தேவ ஆவியானவர் தாமே உன்னே ஏவி எழுப்புவாராக.

2. கப்புல் பிரயாணங்கள்:- இந்தியாவில் பேசப்படும் மொத்த மொழிகள் ஏறக்குறைய 850. அவைகளில் முதன் முதலில் வேதாகமம் மொழி பெயர்க்கப்பட்டது எந்த மொழியில் தெரியுமா? தமிழ் மொழியில்தான். மொழி பெயர்த்தவர், டேனிஷ் மிஷனெரியாகிய சீகன் பால்கு என்பவர் (Zeigen Balg)

இந்தியா தேசத்தைப் பற்றியும், தமிழ் மொழியைப் பற்றியும் ஒன்றுமே அறியாத அவரின் உள்ளத்தைக் கல்வாரி நேசம் நெருக்கி ஏவீயது. ஸ்பெயின் தேசத்திலிருந்து ஏழு மாதங்கள் கப்பற் பிரயரணம் பண்ணி, தரங்கம்பாடி அருகில் வந்து சேர்ந்தார். ஆனுல் தரையில் இறங்க அனுமதி கிடைக்கவில்லே. ஒரு சிறு அறையில் நான்கு மாதங்கள் அடைக்கப்பட்டிருந்தார். தேசத்தின் பழக்க வழக்கங்கள், உணவு வகைகள், சீதோஷ்ண நிலேகள் மாறுபாட்டிஞல் வந்த போராட்டங்கள், சோதனேகள் கொஞ்சமல்ல. மொழி தெரியாமல் தவித்தார். சிறு பாலகர்களோடு தரையில் அமர்ந்து அ, ஆ, இ, ஈ என்று எழுதிப்படித்தார். அவரது கரம்தான் வேதத்தை தமிழில் மொழி பெயர்த்தது. வேதம் இன்று நம் கைகளில் தவழ்கிறது. ஆனுல் இதற்காக கொடுக்கப்பட்ட கிரயத்தைச் சிந்திக்கிறேமா?

சிலுவையில் தியாகமே முழுவதும் நிறைந்திருக்கிறது. அங்கு சுயநலத்திற்கு எள்ளளவும் இடமே இல்லே. ஆனுல் மனிதனிடம் குறிப்பாக இந்தியாவில் கிறிஸ்தவர்களாகிய நம்மிடம் சுயநலமே முழுவதும் நிறைந்திருக்கிறது. இங்கு

தியாகமில்லே. ஆனால் மனிதன் சிலுவையண்டை வரும் பொழுது, சிலுவை நாயகரை ஏறிட்டுப் பார்க்கும்போது அவன் சுயநலங்கள் நீங்கி, தியாக வாழ்க்கை அவன் உள்ளத்தில் ஆரம்பிக்கிறது. அப். பவுல் சொல்கிருர், ''கிறிஸ்துவின் அன்பு எங்களே நெருக்கி ஏவுகிறது" (ரோமர் 1:14)

இன்னும் இந்தியாவில்—நீ வாழும் உன் தேசத்தில் 800 மொழிகளில் வேத புத்தகம் இல்லே. வெளிநாட்டை நம்பியது போதும்! ஏன், உனக்காகவும் இயேசு இரத்தம் சிந்தினுரே! முன்வருவாயா? ஜெபிப்பாயா? உன் உள்ளத்தையும் கல்வாரி அன்பு நெருக்கி ஏவட்டும்.

''ஆ, என் தலே தண்ணீரும் என் கண்கள் கண்ணீரூற்றுமானல் நலமாயிருக்கும்!"

★ ★ ★

அத்தியாயம் 8

# யோனத்தானே! யோனத்தானே!

"போர் முகத்தில் பராக்கிரமசாலிகள் விழுந்தார்களே, யோனத்தானே, உயரமான ஸ்தலங்களில் வெட்டுண்டு போனுயே. என் சகோதரனுகிய யோனத்தானே, உனக்காக நான் வியாகுலப்படுகிறேன்; நீ எனக்கு வெகு இன்பமாய் இருந்தாய்; உன் சிநேகம் ஆச்சரியமாய் இருந்தது; ஸ்திரீகளின் சிநேகத்தைப் பார்க்கிலும் அதிகமாய் இருந்தது. பராக்கிரமசாலிகள் விழுந்து போனுர்களே; யுத்த ஆயுதங்கள் எல்லாம் அழிந்து போயிற்றே!" (II சாமு 1:25, 26)

உயரமான ஸ்தலங்களில் யோனத்தான் வெட்டுண்டு மரித்தபோது, நண்பருன தாவீது இருதயம் கலங்கி புலம்பிய வார்த்தைகள் இவைகள்: யோனத்தானே! ஏன் உமக்கு இந்த தோல்வி? ஏன் இந்த அகோர மரணம்?

1. உடன்படிக்கையின் யோனத்தானே! யோனத்தானே, ஒருநாள் நீர் தாவீதோடே உடன்படிக்கை செய்தீரல்லவா? உம் இருதயமும் தாவீதின் இருதயமும் ஒன்ருய் இருந்த தல்லவா? நீர் உயிரைப்போல தாவீதை நேசித்த நாட்கள் உண்டல்லவா? நீர் போர்த்திக் கொண்டிருந்த சால்வையை யும், வஸ்திரத்தையும், பட்டயத்தையும், வில்லையும், கச்சை யையும் கூட கழற்றி தாவீதுக்கு கொடுத்தீரல்லவா? (I சாமு 1 :1-4) அந்த ஆதி அன்பை நினைத்துப் பாரும்!

யோனத்தானே, நீர் தாவீதை இவ்வளவு நேசிக்கக் காரணம் என்ன? நீர் சவுல் ராஜாவின் மகனுயிருந்தும், பட்டத்திற்கு வரவேண்டிய இளவரசனுயிருந்தும், உம் மனம்

ஆடுமேய்க்கிற தாவீதின் மனதோடே இணைக்கப் பட்டதின் இரகசியம் என்ன?

அது என்ன வென்றால், உங்களுக்கு விரோதமாக ஒரு நாள் கோலியாத் என்ற இராட்சசன் எதிர்த்து வந்தான். உம் தகப்பனையும், தேசத்தினரையும், தேவனையும் நிந்தித்தான். உம் குடும்பத்தினரை கூண்டோடு அழிக்கத் தீர்மானித்தான். உம்மால் அவனை எதிர்க்கத் தைரியம் இல்லை. நீர் பயத்தால் நடுங்கினீர். அப்பொழுது—

ஏழை தாவீது, உமக்காக, உமக்குப் பதிலாக உம் யுத்தத்தைச் செய்தானல்லவா? தன் உயிரையும் பொருட்படுத்தாது, பாளையத்திற்கு வெளியே கோலியாத்தை தனியனாய் எதிர்த்து நின்று, வெற்றி சிறந்தானல்லவா? அந்த நன்றியால் நீர் தாவீதை உயிரைப்போல் நேசித்தீர்! அப்படித்தானே?

தேவனுடைய பிள்ளையே, நீ இயேசுவை நேசிக்கக் காரணம் என்ன? அவர் உன் யுத்தத்தைச் செய்யும்படியாக, உன் பாவங்களை மன்னிக்கும்படியாக, உன்னை விடுதலை செய்யும்படியாக கொல்கதாமேட்டிலே கல்வாரிச்சிலுவையில் பிசாசின் கிரியைகளை அழித்தாரல்லவா? தன் விலையேறப் பெற்ற இரத்தத்தைச் சிந்தி உன்னை விசேஷித்தவனாக்கினாரல்லவா? தன் உயிரைப் பார்க்கிலும் உன்னை அதிகமாய் நேசித்ததினால்தானே, பாடுகளையும் நிந்தைகளையும் மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொண்டார்?

தேவனுடைய பிள்ளையே, கல்வாரி அன்பு உன் உள்ளத்தை நிரப்பியபோது, உன் கண்களில் ஆனந்தக்கண்ணீர் பெருகவில்லையா? உன் உள்ளம் கொழுந்துவிட்டு எரியவில்லையா? வேதம் வாசிக்கவும் ஜெபிக்கவும் தீர்மானம் செய்தாயே

கிறிஸ்துவின் அன்பைவிட்டுப் பிரிப்பவன் யார் என்று நெஞ்சைத் தட்டி, உறுதியாக சொன்னாயே, உன் ஆதி அன்பை— உன் உடன்படிக்கையின் நாட்களை—உன் நேசரோடு செய்த தீர்மானங்களை—பொருத்தனைகளை நினைத்துப்பார்.

2. சிங்காசனத்தை விரும்பிய யோனத்தானே! யோனத்தானே, நீர் ஓர் நாளில் காட்டிற்குச் சென்று உம் தந்தையிடமிருந்து தப்ப, ஒளிந்து கிடந்த தாவீதைக் கண்டு, உடன்படிக்கைச் செய்ததை உம் நினைவுக்குக் கொண்டுவாரும். தாவீதே, நீர் இஸ்ரவேலின் மேல் இராஜாவாயிருப்பீர்; அப்பொழுது நான் உமக்கு இரண்டாவதாயிருப்பேன். அப்படி நடக்கும் என்று என் தகப்பனாகிய சவுலும் அறிந்திருக்கிறார்!" என்று சொன்னீரே. (I சாமு 23:27).

யோனத்தானே, உம் தரிசனம் பெரியது; உம் எதிர்பார்ப்பும் பெரியது; உன்னதமான வெளிப்பாடு உம் கண்களில் இருக்கிறது. தாவீதோடு மகா பெரிய சிங்காசனத்தைப் பகிர்ந்து கொண்டு அரசாள விரும்பியிருக்கிறீர். தாவீதும் அதை உமக்குத் தர உம்மோடு உடன்படிக்கைச் செய்திருக்கிறார்.

அதைவிட மேலாக, இயேசு கிறிஸ்துவும் தம்முடைய பிள்ளைகளோடே ஓர் அன்பின் உடன்படிக்கையைச் செய்திருக்கிறார். ''நான் ஜெயங் கொண்டு என் பிதாவினுடைய சிங்காசனத்தில் அவரோடே கூட உட்கார்ந்ததுபோல ஜெயங்கொள்கிறவன் எவனோ, அவனும் என்னோடே கூட உட்காரும்படி அருள் செய்வேன்" (வெளி 3:21) என்பது அவரது வாக்கு!

ஆ! தேவன் நமக்குக் கொடுத்திருக்கும் வாக்குத்தத்தங்கள் எவ்வளவு இனிமையானவை!

3. சுகபோகத்தை விரும்பிய யோனத்தானே! யோனத்தானே, வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட சிங்காசனத்தை நீர்

ஏன் சுதந்தரித்துக் கொள்ளவில்லை? ஏன் உயரமான ஸ்தலங்களிலே வெட்டுண்டு விழுந்தீர்?

வேதம் உம்மை எங்களுக்கு முன்பாக நிறுத்தி, எங்களை எச்சரிக்க, எங்களுக்குப் பாடம் கற்றுத்தர உம்மில் ஏற்பட்ட குறை என்ன? உமது குறை I சாமு 23:28ல் அல்லவோ இருக்கிறது!

''தாவீது காட்டில் இருந்தான்; யோனத்தானோ தன் வீட்டிற்குப் போனான்'' (I சாமு 23:28)

யோனத்தானே, உம் இருதயம் தராசாக இயங்கியது. தாவீதோடே காடுகளில் பாடு அனுபவிப்பதா? அல்லதுஉம் வீட்டில் அரண்மனையின் சுகம் அனுபவிப்பதா? தாவீதின் ஆத்ம சிநேகிதம் ஒரு பக்கம் உம்மை இழுக்க, உலக சிற்றின்ப சிநேகிதம் மறுபக்கம் உம்மை இழுத்தது.

உள்ளக்கதவை அடைத்துக் கொண்டு, மனச்சாட்சியை மழுக்கிக் கொண்டு, உம் வீட்டிற்குப் போய் விட்டீர். ஏன் விலகினீர்? ஏன் தாவீதை புறக்கணித்தீர்? உமது உடன்படிக்கை எங்கே? தாவீதின் சிங்காசனம் வேண்டும்; பாடுகள் வேண்டாமோ?

சுகம் வேண்டும், வியாதி தீர வேண்டும், நல்ல வேலை வேண்டும், பரலோகம் வேண்டும், ஆனால் ஜெபம் வேண்டாம், உபவாசம் வேண்டாம், அவர் நாமத்தினிமித்தம் அனுபவிக்கும் நிந்தை வேண்டாம், பாடுகள் வேண்டாம், சிலுவை வேண்டாம், அப்படித்தானே?

ஒரு தாயின் ஆசையும் இதுதான்! அவர் இயேசுவிடம் வந்து, ''உம்முடைய இராஜ்யத்திலே என் குமாரராகிய இவ்விரண்டு பேரில் ஒருவன் உமது வலது பாரிசத்திலும் ஒருவன் உமது இடது பாரிசத்திலும் உட்கார்ந்திருக்கும்படி அருள்

செய்ய வேண்டும் என்றாள்" (மத் 20:21). பெரிய ஆசை தான்! ஆனால் இயேசு கிறிஸ்து பாரமான சிலுவையை தோள்களிலே தூக்கிக் கொண்டு எருசலேம் வீதியிலே தள்ளாடி தள்ளாடி விழுந்தபோது அவர்கள் ஓடிப்போய் சிலுவையை சற்றே சுமந்து உதவி செய்யவில்லையே?

''தன் சிலுவையைச் சுமந்துகொண்டு எனக்குப் பின் செல்லாதவன் எனக்கு சீஷனாயிருக்க மாட்டான்." (லூக் 14:27)

கல்வாரியைத் தியானிக்கும்யோனத்தானே, உமக்கு சிலுவையை சுமக்க விருப்பமில்லையே? எழுப்புதலைக் குறித்துப் பேசும் யோனத்தானே, எழுப்புதலின் கிரயத்தைச் செலுத்த நீர் தயாராயில்லையே? தேவ பிள்ளையே, உன் உடன்படிக்கை சுயநலஉடன்படிக்கையா, அல்லது பலியின்உடன்படிக்கையா? கிறிஸ்துவின் சுவிசேஷம் இன்று பாடுகட்குள்ளாய் போகிறது. கிராமங்கள் இருளில் பாழாய்ப் போகிறது. ஜெப வீரர், ஊழியருககாக கர்த்தருடைய இருதயம் தவிக்கிறது. யாரை அனுப்புவேன்? யார் என் காரியமாய்ப்/போவான் என்று கர்த்தர் கதறும் போது உம் காதை அடைத்துக்கொண்டு செவிட்டு விரியனாய் இருக்கிறீர்!

4. உல்லாச வீட்டில் யோனத்தானே! ''தாவீது காட்டிலிருந்தான்; யோனத்தானோ தன் வீட்டிற்குப் போனான்'' ஆ எவ்வளவு துக்கமான காரியம்! உண்மையான உடன்படிக்கையென்றால் தாவீது செல்லுமிடமெல்லாம் யோனத்தான் செல்ல வேண்டியது தானே! துணிக்கையை வாங்கிக் கொண்டு யூதாஸ் காரியோத்துப் புறப்பட்டுச் சென்றது போலல்லவா இருக்கிறது.

தேவனுடைய பிள்ளையே, இன்று நீ எங்கே இருக்கிறாய்? ஊழியத்தின் அழைப்பை அல்லத்தட்டிவிட்டு, ஆத்தும பார

மில்லாமல், ஆத்தும நேசரின் சமூகமில்லாமல் நீ பின்மாற்றக்காரரோடு உட்கார்ந்திருக்கிருயா? கிராமங்கள், சேரிகள், ஆஸ்பத்திரிகள், உன்னை அழைக்கும் சத்தம் உன் செவிகளில் ஏறவில்லையா?

மாட்டுக்கொட்டகையில் பிறந்த இயேசுவை அறிவிக்க ஏன் மாளிகையை தேடுகிருய்? உனக்காய் பகிரங்கமாய், அனைவரும் காணும்படி சிலுவையிலறைவுண்ட தேவனைப் பற்றி சாட்சி கூற உனக்கு ஏன் வெட்கம்? ஆவிக்குரிய சகோதரனே, அற்புதங்களையும் அடையாளங்களையும் செய்ய விருப்பப்பட்ட யோனத்தானே, உன் ஆதி அன்பு எங்கே? உன் தியாகம் எங்கே? உன் பிரதிஷ்டை எங்கே?

மோசே தான் பெரியவனானபோது, பார்வோனுடைய குமாரத்தியின் மகன் என்னப்படுவதை வெறுத்து, அநித்தியமான பாவ சந்தோஷங்களை அனுபவிப்பதைப் பார்க்கிலும் தேவனுடைய ஜனங்களோடே துன்பத்தை அனுபவிப்பதையே தெரிந்து கொண்டு எகிப்திலுள்ள பொக்கிஷங்களிலும் கிறிஸ்துவினிமித்தம் வரும் நிந்தையை அதிக பாக்கியம் என்று எண்ணினானே! (எபி 11:24,25)

யோனத்தானே, உன் கண்களைத் திருப்பி முற்பிதாக்களின் மகனாகிய ஏசாவை நோக்கிப்பார்! தேவ ஆசீர்வாதங்களை அசட்டை பண்ணியதால் அவன் ஆகாதவனாய்த் தள்ளப்பட்டான் (எபி 12: 17) அவன் கண்கள் இச்சித்தது சிகப்பு நிறக் கூழை! நீர் இச்சித்தது உம் ஆதி தகப்பன் வீட்டை! சவுலின் அரண்மனையான பாரம்பரியங்களை! மேன்மையான கல்லறையையும் அந்தஸ்தையும் விரும்பி, அதிமேன்மையான உயிர்த்தெழுதலை இழந்துவிட்டாயே, யோனத்தானே உனக்காக வியாகுலப்படுகிறேன்.

யோனத்தானே, ஒரு நிமிடம் சிந்தித்து உன் தகப்பனாகிய சவுல் யார் என்பதை உணர்ந்து கொள். அவர் கர்த்தரால் புறக்கணிக்கப்பட்டவர். உன் ஐக்கியம் பின் மாற்றக்காரரான

ஐசுவரியவான்களோடு இருக்கிறதா, அல்லது கிறிஸ்து வினிமித்தம் வெறுமையான தேவனுடைய பிள்ளைகளோடு இருக்கிறதா?

5. யோனத்தானே உனக்காக வியாகுலப்படுகிறேன்: இக்காலத்துப் பாடுகள் இனிவரும் மகிமைக்கு ஒப்பானவைகள் அல்ல என்பதை அறியாமல் இருக்கும் யோனத்தானே, அவரோடு பாடு அனுபவிப்பவர்கள் அவரோடு அரசாளுவார்கள் என்னும் தரிசனமில்லாத யோனத்தானே, உனக்காக வியாகுலப்படுகிறேன். இக்காலத்து அரண்மனையைத் தேடும் யோனத்தானே, மறுமையிலே உமக்கு ஒன்றுமில்லையே, அந்திக் கிறிஸ்துவின் ஆட்சியில் சிக்கிவெட்டுண்டு போகாதே. உனக்காக வியாகுலப்படுகிறேன்.

சாது சுந்தர் சிங் ஒரு முறை சொன்னார்; கிறிஸ்துவுக்காக சிலுவை சுமக்கும் பாக்கியம் இந்த உலகில் இருக்கும் வரை தான் நமக்குக் கிட்டுகிறது என்றார்! காலமெல்லாம் வேகமாய் ஓடி விட்டது. இயேசு கிறிஸ்து சீக்கிரமாய் வருகிறார். 'பலியினாலே என்னோடே உடன்படிக்கை பண்ணின என்னுடைய பரிசுத்தவான்களை என்னிடத்தில் கூட்டுங்கள் (சங் 50:4) என்பார். நீ அன்று காணப்படுவாயா?

உடனே தீர்மானம் செய். தனி இடம் தேடி இயேசுவின் பாதங்களில் விழுந்து அழு. ஆண்டவரே! நீர் காட்டிலும் நான் வீட்டிலும் இருக்க விரும்பமாட்டேன். நீர் விரும்பாத படக் காட்சி, சினிமா, உலக ஆடம்பரங்கள், உலக நண்பர்கள் எனக்கு வேண்டாம். நீர் இருக்குமிடத்தில் நாங்களும் இருக்கும்படி சீக்கிரமாய் வந்து பார்த்துக் கொள்வேன் என்று சொன்னீரே, அந்த நாளில் உம்மோடு அரசாள என்னை தகுதிப்படுத்தும்; ஆயத்தப்படுத்தும் என்று கண்ணீரோடு ஜெபி!

தேவ சித்தம் உன்னில் நிறைவேறுவதாக! ஆமென்.

அத்தியாயம் 9

# பொன் வாத்தின் மதுர கீதம்

''புஷ்யோக்" இளமை ததும்பும் உற்சாகமான ரஷ்ய வாலிபனின் பெயர் அது! அந்த வட்டாரத்தில் அவனது பெயரை அறியாதவர்கள் யாரும் இருக்கமாட்டார்கள். அவனது, அன்பு, புன்சிரிப்பு, கள்ளங்கபடில்லாத உள்ளம் யாவரையும் அவன் பக்கம் இழுத்தன. மட்டுமல்ல, இனிமையாக பாடி, வாத்தியக் கருவிகளை இசைப்பதில் அவனுக்கு இணை அவன் தான்.

எனவே அவனது பெற்ருேர் இசைக் கல்லூரியில் சேர்த்தனர். சங்கீதத்தை முறைப்படி கற்றது மட்டுமல்ல, எல்லா இசைக் கருவிகளையும் திறமையாக மீட்டுவதிலும் பிரசித்தி பெற்றவனாக விளங்கினான். ஒரு நாள் தன்னோடு கூட படிக்கும் சகமாணவன் மூலமாக கிறிஸ்து தம் ஜீவனை கல்வாரியில் எப்படி ஊற்றிக் கொடுத்தார் என்பதை அறியவே, அவன் உள்ளம் கிறிஸ்துவுக்காக பொங்கியது. கிறிஸ்துவின் ஒரே ஜீவனை எனக்காக அர்ப்பணித்தாரென்றால் ஏன் நான் என் திறமை, தாலந்துகள், எல்லாவற்றையும் அவருக்காக அர்ப்பணிக்கக் கூடாது? பலியின் உடன்படிக்கையை மகிழ்ச்சியோடு செய்தான் அந்த வாலிபன்.

இசைக் கல்லூரியில் அவன் பட்டம் பெறுவதற்கு முன்பு, தன் திறமைகளையெல்லாம், இசைகளிலும், பாடல்களிலும் வெளிப்படுத்த வேண்டும் என்றும், பின்பு அரசாங்க உத்தரவின்படி கடவுள் இல்லை என்ற உறுதி மொழி எடுத்துக் கொள்ளவேண்டும் என்றும் அவனுடைய ஆசிரியர்கள்

அவனுக்கு அறிவுறுத்தினர்கள். அவனுக்காக பெரிய உத்தியோகமும் காத்துக் கொண்டிருந்தது!

அவன் பட்டம் பெறும் நாள் வந்தது! அவனது அருமையான பெற்றோர்கள் மகிழ்ச்சியோடு ஒழுங்கு செய்யப்பட்ட பெரிய மண்டபத்தில் காத்துக் கொண்டிருந்தனர். புஷ்யோக் என்ற அந்த வாலிபன் மிகவும் புகழ் பெற்று விளங்கினதால் திரளான கூட்டம் பல மணிநேரங்களுக்கு முன்பே அங்குகூடி விட்டனர். அவனைப் பயிற்றுவித்த ஆசிரியர்கள் பெருமையோடு தம் தம் ஆசனங்களில் வந்து அமர்ந்தார்கள்.

ரஷ்யாவிலே பாரம்பரியமான பழைய பாடல் ஒன்று உண்டு. அந்த பாடலுக்கு 'பொன்வாத்தின் மதுர கீதம்' என்று பெயர். அந்த வாத்து தன் ஆயுளில் ஒரே ஒருமுறை தான் பாடுமாம். அதனுடைய பாடலோடு அதன் ஜீவனையும் இணைத்து, உச்ச குரலில் பாடும்போது காடு, மலைகள் எல்லாம் அப்படியே அசைவற்று நின்று அந்த பாடலை ரசிக்கும். பாடலை நிறுத்த முடியாத அந்தவாத்து தொடர்ந்து பாடிக் கொண்டே தன் மூச்சை விட்டுவிடுமாம்.

அந்த நாட்டோடிப் பாடலான ''பொன்வாத்தின் மதுர கீதம்'' என்ற பாடலையே தான் பட்டம் பாடலாக தெரிந்தெடுத்து, தன் முழு உள்ளத்தையும் அந்த பாடலில் ஊற்றி, உணர்ச்சி வசப்பட்டு, உருக்கமாக பாடிக்கொண்டே வந்தான். வந்திருந்த மக்கள் அனைவரின் கண்களிலும் கண்ணீர் பொங்க ஆரம்பித்தது. அந்தப் பாடலோடு கூட அப்படியே கல்வாரியின் கீதத்தையும் இணைத்து, இயேசுவின் அன்பை, அவர் தியாக உள்ளத்தை, கல்வாரி நேசத்தை ததும்பும் குரலிலே பாடி முடித்தான்; கல்போலுள்ள உள்ளங்கள் மெழுகைப் போல உருகினது. அவனது ஆசிரியர்கள் திகைத்தார்கள். அரசாங்க அதிகாரிகள் உறுமினர்கள். அவன் மெதுவாய் மேடையில் எழுந்து நின்று, உரத்த சத்தத்தோடே ''பாரமான சிலுவையை தன் தோள்களிலே தூக்கிக்

கொண்டு, எருசலேம் வீதி வழியாக இரத்த வியர்வையோடு நடந்து, எனக்காக ஜீவனைக் கொடுத்து, தன் ஜீவனைப் பார்க்கிலும் என்னை அதிகமாக நேசித்தவரை எப்படி மறுதலிப்பேன் நான்! நானும் அவருக்காக தியாகம் செய்ய வேண்டாமா? நான் இனி வாழ்ந்தால், அவருக்காக என் நெஞ்சை இரத்தக்களமாக்கி, என் குரலை பலியின் காணிக்கையாக்கி அவர் ஒருவருக்காகவே பாடுவேன். அவர் ஒருவருக்காகவே மரிப்பேன்" என்றான் உறுதியான குரலில்.

அப்பொழுதே அவன் கைகளில் விலங்குகள் மாட்டப் பட்டன. அவனது துணிகளைக் கழற்றி வெளியே இழுத்துக் கொண்டு வந்தனர். அவன் பெற்றோர் கலங்கித் தவித்தனர். அவன் அவர்கள் பக்கமாக திரும்பினான், "அம்மா எனக்காக தயவு செய்து அழாதீர்கள். கிறிஸ்துவை நான் ஒருபோதும் மறுதலிக்க மாட்டேன். கல்வாரி கீதத்தோடு என் வாழ்க்கையின் கீதத்தையும் இணைத்துக் கொண்டதில் நான் பெருமைப் படுகிறேன்.

மரண தண்டனைக்காக அவன் நடந்து சென்றான். அந்த நடையில் ஒரு கெம்பீரம் இருந்தது. அது ராஜ நடை. "திரளான தண்ணீர்கள் நேசத்தை அவிக்க மாட்டாது. வெள்ளங்களும் அதைத் தணிக்க மாட்டாது. நேசம் மரணத்தைப் போல் வலிது! (உன் 8:7).

பொன் வாத்தின் மதுரகீதம். காற்றில் கரைந்தது!

# சிலுவையை குறித்தே!

"நானோ, நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சிலுவையைக் குறித்தேயல்லாமல், வேறொன்றையுங் குறித்து மேன்மை பாராட்டாதிருப்பேனாக; அவரால் உலகம் எனக்குச் சிலுவையில் அறையுண்டிருக்கிறது. நானும் உலகத்திற்குச் சிலுவையிலறையுண்டிருக்கிறேன்" (கலாத்தியர் 6:14)

அப். பவுல் திடமான தீர்மானம் செய்து, தன் மேன்மையோடு ஓர் உடன்படிக்கையும் செய்தார். அதையே இந்த வசனங்களில் வாசிக்கிறோம்.

இன்றைய நாகரீக படிப்புகளினால் பவுல் அப்போஸ்தலனின் அன்றைய படிப்பை கணிக்க நினைத்தால் அவர் இரண்டு மூன்று எம். ஏ. பட்டங்கள்பெற்றவராகவோ, அல்லது ஆராய்சியின் மூலமாக டாக்டர் பட்டம் பெற்றவராகவோ தான் நாம் கருத முடியும். அவர் அத்தனை ஆழமாக, கருத்துச்செறிவோடு தமது நிருபங்களைத் தீட்டியிருக்கிறார். அவர் கமாலியேலின் பாதத்தண்டை அமர்ந்து கற்றுத் தேறினவர். இஸ்ரவேல் வம்சத்தில் வந்தவர். எபிரேயனுக்கு பிறந்த எபிரேயன். பெஞ்சமீன் கோத்திரத்தார். நியாயப் பிரமாணத்தின்படி குற்றம் சாட்டப்படாதவர் (பிலிப்பியர் 3:4—6). ஆயினும் அவர் எழுதுகிறார் "எனக்கு இலாபமாயிருந்தவைகளெவைகளோ, அவைகளைக்கிறிஸ்துவுக்காக நஷ்டமென்று எண்ணிக்கொண்டிருக்கிறேன்" ஆ! கல்வாரிச் சிலுவை எவ்வளவு பெரிய மன மாறுதலை அவரது வாழ்க்கையில் கொண்டு வந்தது.

ஒரு காலத்தில் கிறிஸ்தவர்களை வேட்டையாடுவதே தான் கர்த்தருக்குச் செய்யும் தொண்டு என்று நினைத்துக் கொண்டிருந்த இவரை தமஸ்குவுக்குச் செல்லும் வழியில் இயேசு கிறிஸ்து சந்தித்தார். "நீ துன்பப்படுத்துகிற இயேசு நானே" என்று கர்த்தர் தம்மை அறிமுகம் செய்து கொண்டார்.

சிந்தித்துப் பாருங்கள். கிறிஸ்து யார்? அவர் ஒளியானவர், வழியானவர், சத்தியமானவர், ஜீவனானவர், இரட்சிப்பானவர், கன்மலையானவர். வேதம் அவருக்கு ஏறக்குறைய 272 பெயர்களைச் சூட்டுகிறது. ஆனால் அவரோ தன் பெயரை "நீ துன்பப்படுத்துகிற இயேசு" என்று அழைத்துக் கொண்டார்.

ஆம், நீ பாவஞ் செய்யும்போது, அவரைத் துன்பப்படுத்துகிறாய். உன் வீண் வார்த்தைகளினால் அவரைத் துன்பப்படுத்துகிறாய். உன் அக்கிரம செய்கைகளால் அவரைத் துன்பப்படுத்துகிறாய், மட்டுமல்ல, நீ தேவ ஜனங்களை துன்புறுத்தும்போது அவரைத் துன்புறுத்துகிறாய்.

கிறிஸ்துவின் வார்த்தைகள் அப்பொழுது பவுலுக்கு ஆச்சரியமாயிருந்திருக்கும். கிறிஸ்து தன்னை தன் பிள்ளைகளோடு இணைத்துக் கொண்டு பலியின் உடன்படிக்கை செய்திருக்கிறார். ஆகவேதான் உன்னைத் தொடுகிறவன் அவரது கண்மணியைத் தொடுகிறான் என்று வேதம் சொல்கிறது. ஏசாயாவில் வாசிக்கிறோம் "அவர்களுடைய எல்லா நெருக்கத்திலும் அவர் நெருக்கப்பட்டார். அவர் தமது அன்பினிமித்தமும், தமது பரிதாபத்தினிமித்தமும் அவர்களை மீட்டு, பூர்வ நாட்களிலெல்லாம் அவர்களைத் தூக்கி சுமந்து வந்தார்" (ஏசாயா 63:9) இதுவே கிறிஸ்து நம்மோடும், தேவ பிள்ளைகள் அனைவரோடும் செய்திருக்கும் அன்பின் உடன்படிக்கை.

துன்பப்படும் இயேசு, தன்னை பாடு சகிக்கும் தேவபிள்ளை களோடு இணைத்துக் கொள்கிறதைக் கண்ட பவுல் தன் மேன்மை இனி சிலுவையே என்பதை திட்டமாக அறிந்து கொண்டார், அந்த தியாக செம்மலான கிறிஸ்துவுக்காகவே தான் ஜீவிக்க அந்த கல்வாரிச் சிலுவையே உயர்த்திக்காட்ட திடமான தீர்மானம் செய்தார். ''வேறொன்றையுங்குறித்து நான் மேன்மை பாராட்டாதிருப்பேனாக" என்று தன் உள்ளத் திற்குக் கட்டளையும் கொடுத்தார். தேவ பிள்ளையே! உன் மேன்மை பாராட்டல் எப்படிப்பட்டது? இரதங்களையும், குதிரைகளையும், உன் அந்தஸ்துகளையும், உன் ஜாதிப் பெருமைகளையும், உன் பிள்ளைகளின் படிப்பு வேலைகளையும் குறித்து மேன்மை பாராட்டி வருகிறாயா? இப்பொழுதே, அவற்றை கல்வாரி சிலுவைக்கு முன்பு உதறிப்போடு!

உலகத்தின் பெரும்பகுதியை அரசாண்ட மகா அலெக் ஸாண்டர், பல யுத்தங்களிலே வெற்றி வாகை சூடிய சக்கர வர்த்தி, தான் போரிட்டு மேற்கொள்ள வேறு நாடுகளில்லையே என்று அலுத்துக் கொண்ட அந்த வீரன், தன் வாலிப வயதில் மரிக்கும்போது தன் தளபதிகளிடம் தன் கடைசி ஆசையை வெளியிட்டார். ''என் பிரேத ஊர்வலம் செல்லும்போது சவப் பெட்டிக்குள்ளிருந்து என் இரண்டு கைகளையும் வெளியே நீட்டி வையுங்கள். மனுஷன் ஒன்றும் கொண்டு வருவதில்லை ஒன்றும் கொண்டு போகப் போவதுமில்லை. அவன் மேன்மை யெல்லாம் மாயையே என்பதை உலகம் அறிந்து கொள்ளட் டும்'' என்று கேட்டுக் கொண்டாராம்.

ஆனால் தேவபிள்ளையே, நீ சிலுவையை உன் மேன்மை யாக சுதந்தரித்துக் கொள்ளும் போது நீ வெறுங்கையாக அல்ல; உன் கல்வாரி நேசரோடு, நித்திய ஜீவனையும், பரலோக ஆசீர்வாதங்களையும், ஊழியத்தில் சந்தித்த ஆத் துமாக்களின் மேன்மையையும் உன்னோடு கூட நீ எடுத்துச் செல்லுவாய்.

ஆம், நீ உனக்கென்று வைத்திருப்பதை இழந்து போகிருய். கிறிஸ்துவுக்கென்று இழப்பதை நித்திய நித்தியமாக பெற்றுக் கொள்கிருய். சிலுவையின் மேன்மையை உணர்ந்த சீன தேசத்து இரத்த சாட்சியான "வாச்மேன் நீ" முழங்கிஞர், "எனக்கென்று ஒன்றுமே வேண்டாம், என் கல்வாரி நாதருக்காக எல்லாவற்றையுமே அர்ப்பணிக்கிறேன் கல்வாரிச் சிலுவையைக் குறித்தே அல்லாமல் வேருென்றையுங் குறித்து மேன்மை பாராட்டாதிருப்பேஞக". கல்வாரியின் மேன்மையைக் குறித்து சற்றே சிந்திப்போமா?

1. தெய்வீகத்தைக் காணுமிடம்: தெய்வீகத்தின் பரிபூரணமெல்லாம் கல்வாரிச் சிலுவையில் வெளிப்பட்டது. வான வெளியில் சிறிது நேரம் நடந்த ரஷ்ய விண்வெளி வீரனை நிக்கோலாய், "நான் ஆகாய மண்டலத்திலே நடந்தேன் அங்கே இறைவன் என்று ஒருவரும் இல்லே" என்று மமதையாகக் குறிப்பிட்டார். இது மண்புழு நடு இரவில் மனிதனேத் தேடுவதைப் போல இருக்கிறது. ஆம் இறைவனேத் தேட வேண்டுமென்ருல் கல்வாரிக்கு வா, அங்கு பகைவரையும் மன்னிக்கும் தெய்வீக அன்போடு கிறிஸ்து உனக்கு தம்மை வெளிப்படுத்த காத்துக் கொண்டிருக்கிருர். நீ அவரைத் தேடி அங்கும் இங்கும் புண்ணிய ஸ்தலங்களுக்குச் செல்லவேண்டியதில்லே. நீ உன்னே ஒப்புக் கொடுத்தால் நீ இருக்கும் இடத்தில்லேயே அவரைக் கண்டு கொள்ளலாம். சிலுவையில் தெய்வீகம் வெளிப்பட்டபடியால் சிலுவையைக் குறித்தே மேன்மை பாராட்டுவோமாக!

2. பாவங்கள் மன்னிக்கப்படும் இடம்: சிலுவை ஒரு பலிபீடம்! முழு மனுக்குலத்துக்காக தேவக்குமாரன் தம்மையே பலியாக ஒப்புக் கொடுத்த இடம்! என் அன்பு இரட்சகர் தம் இரத்தத்தை ஊற்றி பாவமன்னிப்பை எனக்கு சம்பாதித்துத் தந்த இடம்! இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களேயும் நீக்கி இரட்சிப்பதாலும், வேறு எந்த வழியிலும் இரட்சிப்பே இல்லேயாதலாலும், சிலுவையைப் பற்றியே

மேன்மை பாராட்டுவோமாக! (I யோவான் 1:7)

3. தேவபெலனைப் பெற்றுக் கொள்ளுமிடம்: கல்வாரிச் சிலுவையில் சத்துருவின் தலை நசுக்கப்பட்டது. என் தேவன் எனக்கு ஜெயத்தைத் தந்த இடம். உலகம், மாமிசம், பிசாசு என் பாதபடியாகுமிடம். இரத்தத்தின் வல்லமையை உலகுக்குப் பறை சாற்றுமிடம். "சிலுவையைப் பற்றிய உபதேசம் கெட்டுப் போகிறவர்களுக்குப் பைத்தியமாயிருக்கிறது!" (I கொரி 1:18)

4. பகை தகர்ந்த இடம்: இஸ்ரவேலருக்கும் புறஜாதியருக்கும் காலா காலங்களாயிருந்த பகை தகர்ந்து போன இடம். நம்மைக் கிறிஸ்துவின் காணியாட்சிக்குள்ளே கொண்டு வந்த இடம் எப்படியெனில் அவரே நம்முடைய சமாதானகாரணராகி, இரு திறத்தாரையும் ஒன்ருக்கி, பகையாக நின்றபிரிவினையாகிய நடுச்சுவரைத்தகர்த்து, பகையைச் சிலுவையினுலே கொன்று, அதினுலே இருதிறத்தாரையும், ஒரே சரீரமாக தேவனுக்குள் ஒப்புரவாக்கினுர் (எபேசியர் 2:16-14.)

5. நியாயப் பிரமாணத்தை நீக்கி, அன்பின் பிராமணத்தைக் கொண்டுவந்த இடம்:— சிலுவையிலே அன்பின் பிரமாணத்தை நம் தேவன் ஏற்படுத்தித் தந்தார். பழைய அடிமைத்தனத்தின் நியாயப்பிரமாணம் நீங்கிப்போனது. பயந்து பயந்து தேவனைப் பின்பற்றிய காலம் மாறி, சிலுவையின் மூலம் நேசித்து நேசித்து ஊழியஞ் செய்யும் காலம் தோன்றியது. நமக்கு எதிரிடையாகவும், கட்டளைகளால் நமக்கு விரோதமாகவும் இருந்த கையெழுத்தைக் குலைத்து, அதை நடுவிலிராதபடி எடுத்து சிலுவையின்மேல் ஆணியடித்து, துரைத்தனங்களையும், அதிகாரங்களையும் உரிந்து கொண்டு, வெளியரங்கமான கோலமாக்கி, அவைகளின் மேல் சிலுவையிலே வெற்றி சிறந்தார் (கொலோ 2:14-15)

6. பிதாவோடு ஒப்புரவாக்கும் இடம்:— ஒருபக்கம் தீமையைப் பார்க்க மாட்டாத சுத்தக்கண்ணணுகிய பிதாவாகிய தேவன். மறுபக்கம் தீமையே நிறைந்த மனுஷன்! ஒரு பக்கம் பரிசுத்தர், மறுபக்கம்பாவி! ஒருபக்கம் நியாயாதிபதி, மறுபக்கம் குற்றவாளி. ஆனால் இயேசுவே இரண்டு பக்கத்திற்கும் மத்தியஸ்தராக, பாவபரிகாரியாக பிணையாளாக நின்று நம்மை பிதாவோடே ஒப்புரவாக்கினார். அவர் சிலுவையில் சிந்தின இரத்தத்தினாலே சமாதானத்தை உண்டாக்கி, பூலோகத்திலுள்ளவைகள், பரலோகத்திலுள்ளவைகள் யாவையும் அவர் மூலமாய்த் தமக்கு ஒப்புரவாக்கிக் கொள்ளவும் அவருக்குப் பிரியமாயிற்று. (கொலோ 1:20)

7. தெய்வீக வல்லமை ஈர்க்குமிடம்:— சிலுவை வரலாற்றின் மையத்தில் நிற்கும் மாபெரும் காந்தசக்தி. ஆம், கிறிஸ்து உயர்த்தப்படும்பொழுது சகலரையும் தன் பக்கமாக இழுத்துக் கொள்கிறார். சட்டமும் சமுதாயமும் திருத்தமுடியாதவர்களை திருத்திக் காண்பிப்பது சிலுவை. கல் போலுள்ள உள்ளங்களை உருக்கிக் காண்பிப்பது சிலுவை. மறுரூபமாக்கும் கிருபை நிறைந்தது சிலுவை. இழுக்கும் வல்லமை, ஈர்க்கும் சக்தி சிலுவைக்கு உண்டு. அது சிலுவையில் அறையப்பட்ட கள்ளனையும் கிறிஸ்துவின்பால் இழுத்துக் கொண்டது. நூற்றுக்கதிபதியை "மெய்யாகவே இவர் தேவனுடைய குமாரன்" என்று சாட்சி கொடுக்க வைத்தது (மாற்கு 15: 9, லூக்கா 23.42)

தேவபிள்ளையே, சிலுவையின் மேன்மையைப் பார்த்தாயா? எப்பொழுதும் சிலுவையில் மரித்த கிறிஸ்துவையே உயர்த்துவாயாக! சிலுவையின் உபதேசம் ஆத்துமாக்களைக் கொண்டு வரும். உன்னை பிரதிஷ்டையின் பாதையிலே நடத்தும். முழு இருதயத்தோடும் கர்த்தரிடத்தில் மீண்டும் உடன்படிக்கை செய்வோமாக! சிலுவையைக் குறித்தேயெல்லாமல் வேறொன்றையும் குறித்து மேன்மை பாராட்டாதிருப்போமாக!

## அத்தியாயம் 11

# பலியின் எழுத்துக்கள்.

வேதத்திலே எத்தனை வசனங்கள் இருக்கின்றன என்று கேட்டால் ஒருவேளை நீங்கள் இரவும் பகலும் எண்ணி சொல்லிவிடுவீர்கள். ஆனால் வேதத்தில் எத்தனை எழுத்துக்கள் இருக்கின்றன என்று கேட்டால் திகைத்துப் போவீர்கள். உதாரணமாக முதலாம் சங்கீதம் முதல் வசனத்தில் மட்டும் 62 எழுத்துக்கள் இருக்கின்றன. முழுவேதாகமத்திலும்...?

ஒரு இளவரசன் எண்ணி முடித்தான். பழையஏற்பாட்டில் 27,28,100 எழுத்துக்களும் புதிய ஏற்பாட்டில் 8,38,380 எழுத்துக்களும் மொத்தம் 35,66,480 எழுத்துக்களும் இருக்கின்றன என்று எழுதினான்.

ஸ்பானிய தேசத்து இளவரசனின் உள்ளம் கிறிஸ்துவோடு ஒன்றாக இணைந்திருந்தது. மிகவும் கல்விமானாகவும், தேவ பக்தியுள்ளவனாகவும், கல்வாரி அன்பினால் நிறைந்தவனுமாய் இருந்தான். அவன் தேசத்து மக்கள் அவன் மேல் அளவில்லாத அன்பை வைத்திருந்தார்கள். அவ்வளவு கிருபையும், ஞானமும் உள்ளவன், எப்பொழுது அந்த இளவரசன் தங்கள் தேசத்தின் ஆட்சிப் பொறுப்பை ஏற்று தங்களை நீதியோடு அரசாட்சி செய்வான் என்று ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

அந்தோ, திடீரென்று அங்கு ஒரு ராணுவப் புரட்சி ஏற்பட்டது. ராணுவ தளபதி ஆட்சியை கைப்பற்றி, இந்த இளவரசனை சிறையில் தள்ளும்படி உத்தரவிட்டான். அந்த

ரவின் அந்தகாரவேளையில் இளவரசன் தன் வீட்டு றைக்குள் ஓடி எதையோ தேடினான். தன்னைப்பாதுகாக்க ட்டயத்தையா? தன்னை கைது செய்ய வந்தவர்களுக்கு ஞ்சமாகக் கொடுக்க வைரங்களையா? இல்லை, அவன் ஆவலோடு தேடியது வேத புஸ்தகத்தைத்தான்! அதை மார் பாடு அணைத்து மறைத்துக் கொண்டு, வெளியே வந்தான். கைது செய்தனர். சித்திரவதைகள், பாடுகள் தொடர்ந்தன.

பழைய, நாற்றம் பிடித்த பயங்கரமான சிறையில் தனிமை யாய் தள்ளப்பட்டான். அந்த சிறைச்சாலையை மண்டை ஓடு களின் கிடங்கு என்று அழைப்பதுண்டு. காற்றும் வெளிச்சமு மற்ற அந்த இருண்ட அறையில் தனிமையாய் நாட்களைக் கழிப்பது எத்தனை வேதனையானது என்பதை சிந்தித்துப் பாருங்கள். காலையும், மாலையும் மாறிமாறி வந்தது, ஆனால் அவன் வாழ்க்கையிலோ மாற்றமே இல்லை. நான்கு சுவர் களைத்தான் இடைவிடாமல் பார்த்துக் கொண்டே இருக்க வேண்டும்.

நாட்களும், மாதங்களும், வருடங்களும் நத்தை வேகத்தில் நகர்ந்தன. 33 ஆண்டுகள் கடந்தன. அவனோ எந்த முறுமுறுப்பும் இல்லாதபடி அமைதியாய் தியானத் தோடு தன் நாட்களைக் கடத்திக் கொண்டு வந்தான். அவன் சரீரம் நோய்வாய்ப்பட்டது. அவனுக்கு ஆறுதல் சொல்ல வோ, தேற்றவோ, மருத்துவம் செய்யவோ யாரும் இல்லை. கடைசியில் அவன் ஆத்துமா அவன் சரீரத்தினின்றும், சிறை யினின்றும் விடைபெற்றுக் கொண்டது. எலும்பும் தோலு மாய் உலர்ந்துபோய் மரித்துக் கிடந்த அவன் சரீரத்தை எடுத்து அடக்கம் செய்யும்படி சில கிறிஸ்தவர்கள் அந்த சிறை அறைக்கு வந்தார்கள். அவர்களை ஆச்சரியப் படுத்தினது என்னவென்றால் அந்த சிறையின் சுவர்களிலே ஒரு பழைய ஆணிகொண்டு அந்த இளவரசன் எழுதிவைத்த வேதாகமக் குறிப்புகள்தான்.

வேதத்திலிருக்கும் புஸ்தகங்கள் எத்தனை, வசனங்கள் எத்தனை, வார்த்தைகள் எத்தனை, எழுத்துக்கள் எத்தனை, என்று எல்லாம் அங்கே செதுக்கப்பட்டிருந்தன. மட்டுமல்ல வேதத்தில் மத்திய, வசனம், மிகச் சிறிய வசனம், கர்த்தர் என்று வரும் இடங்கள், ஒன்றுபோல் இருக்கும் அதிகாரங்கள் வசனங்கள் என்ற எத்தனை எத்தனையோ அரும்பெரும் ஆராட்சிகள் அங்கிருந்தன.

கடைசியாக இளவரசன்தான்நேசிக்கும் நான்கு வாக்குத் தத்த வசனங்களை எழுதியிருந்தார். யோவான் 14:2. யோவான் 6:37 மத் 11:28, சங்கீதம் 37:4 கடைசி வசனத்தின் மூலம் அவர் நமக்கு ஒரு அறிவுரையை தருகிறார். ''கர்த்தரிடத்தில் மன மகிழ்ச்சியாயிரு; அவர் உன் இருதயத்தின் வேண்டுதல்களை உனக்கு அருள் செய்வார்" (சங்கீதம் 37:4) என்பதே அவர் நமக்குக் கொடுக்கும் செய்தி!

எல்லா சூழ்நிலைகளிலும் மனரம்மியமாக இருப்பாயா?

★

அத்தியாயம் 12

# வெடிப்புள்ள தொட்டியும், பிளக்கப்பட்ட கன்மலையும்

''என் ஜனங்கள் இரண்டு தீமைகளைச் செய்தார்கள். ஜீவ தண்ணீர் ஊற்றாகிய என்னை விட்டு விட்டார்கள். தண்ணீர் நிற்காத தொட்டிகளாகிய வெடிப்புள்ள தொட்டிகளை தங்களுக்கு வெட்டிக் கொண்டார்கள்" (எரேமியா 2:13)

கர்த்தர் எவ்வளவு அங்கலாய்ப்போடும், வேதனையோடும் இந்த வார்த்தைகளைச் சொல்லியிருக்கிறார்! அவர் உள்ளம் எவ்வளவு துக்கத்திலிருந்திருக்கும் என்று சிந்தித்துப்பார். அவருடைய ஜனங்களே அவரை விட்டு விலகும் போது, அவருடைய நாமம் தரிக்கப்பட்டவர்களே அவரது நாமத்தை வியாபாரமாக்கும் போது, அவர் தன் தவிப்பை யாரிடம் போய் சொல்லுவார்? ஜீவ ஊற்றாகிய அவரை விட்டு விட்டு, பண ஆசை, மாம்ச இச்சை, பெருமை, புகழ் என்று வெடிப்புள்ள தொட்டிகளை தேவ ஜனங்கள் வெட்டிக் கொண்டிருந்தால் கர்த்தர் புலம்பாமல் வேறு என்ன செய்வார்?

இயேசு சொன்னார். ''என்னில் நிலைத்திருங்கள், நானும் உங்களில் நிலைத்திருப்பேன். கொடியானது திராட்சைச் செடியில் நிலைத்திராவிட்டால் அது தானாய் கனி கொடுக்க மாட்டாதது போல, நீங்கள் என்னில் நிலைத்திராவிட்டால் கனி கொடுக்க மாட்டீர்கள்". (யோ 15:4)

1. வெடிப்புள்ள தொட்டி:-பாலஸ்தீனா தேசத்தில் மழைத் தண்ணீரை சேமித்து வைக்க தொட்டிகளை வெட்டுவதுண்டு.

மண்ணினால் கட்டும் தொட்டிகளும், பூமியில் தோண்டி வெட்டும் தொட்டிகளும், மெல்லிய சுண்ணாம்புக் கற்களாலான தொட்டிகளும் அங்கு சாதாரணமாய் இருக்கும். ஆற்றின் பாசனம் இல்லாத இடங்களில், இந்தத் தொட்டியில் சேரும் மழை நீர், வருட முழுவதற்கும் குடிநீராக பயன்படுகிறது.

ஆனால் ஒரு ஊற்று அருகில் இருக்கும்போது, அந்த ஊற்றில் சுரக்கும் சுத்தமான தண்ணீரைப் பானம் பண்ணாமல், தனக்குப் போய் ஒரு தொட்டியைக் கட்டி, அதில் தேங்கிய நீரின் மேல் நம்பிக்கை வைத்தால் அவன் புத்தியீனன். கோடைக் கால வெயிலால் அவன் வெட்டிய தொட்டி வெடித்துப் போகும்; அவன் சேமித்த தண்ணீரும் ஒழுகிப் போகும்.

தேவனுடைய அன்பைக் கண்டும், அவரது நன்மைகளை அனுபவித்தும் வந்த இஸ்ரவேலர், தேவனை விட்டு விலகி, விக்ரக ஆராதனைக்குச் சென்று விட்டபோது, தேவன் அந்தத் துரோகத்தைக் கண்டு வேதனைப்பட்டு, வெடிப்புள்ள தொட்டியின் உதாரணத்தை அவர்கள் கண்முன் நிறுத்துகிறார். தேவனற்ற மக்களுக்கு அடைக்கலம் எங்கே? பாதுகாப்பு எங்கே? ஆறுதல் எங்கே? எங்கே?

எரேமியா 2 ஆம் அதிகாரம் முழுவதையும் முழங்காலில் நின்று கருத்தோடு வாசித்துப் பாருங்கள். ஒரு தேவனுடைய பிள்ளை தேவனை விட்டுப் பின்வாங்குவானானால் தேவன் எவ்வளவாய் அங்கலாய்த்துப் பரிதபிக்கிறார், புலம்புகிறார்!

அவர் அன்புள்ளவர் மட்டுமல்ல; அன்புக்காக ஏங்குகிறவரும் கூட! ''என்னை விட்டுத் தூரப்பட்டு மாயையைப் பின்பற்றி வீணராய்ப் போகிறதற்கு என்னிடத்தில் என்ன

அநியாயத்தைக் கண்டார்கள்" (எரே 2:6) என்று கண்ணீ ரோடு நம்மிடம் வாதாடுகிறார்.

ஆ! எத்தனைக் காருண்யத்தோடு எகிப்தாகிய பாவ அடிமைத் தனத்திலிருந்து அவர் விடுவித்து, வனாந்திரத்திலே போஷித்து வழி நடத்தி செழிப்பான கானானாகிய தேவ சமூகத் திற்குக் கொண்டு வந்தாரே, உனக்காக இரத்தஞ் சிந்தினாரே, உன் பாவங்களையெல்லாம் மன்னித்தாரே! உன்னை பின் தொடர்ந்த சாபத்தின் முதுகெலும்பைத் தகர்த்தாரே! உனக்காக வழக்காடி யுத்தஞ் செய்தாரே.

அவர் உன்னை நற்கனி தரும் உயர்குல திராட்சைச் செடி யாக நாட்டியிருக்க, நீ அவருக்கு காட்டு திராட்சைச் செடி யின் ஆகாத கொடிகளாய் மாறிப்போனதென்ன? உன் வாழ்க்கை வெடிப்புள்ள தொட்டியின் நிலைக்கு வந்து விட்டது என்ன? ஆசீர்வாதம் தங்காமல் மீண்டும், மீண்டும் சண்டை களும், பிரிவினைகளும், வெடிப்புகளும் வரக் காரணம் என்ன? எவ்வளவுதான் வருமானம் வந்தாலும் வழிந்தோடிப் போய் விடுவது ஏன்?

ஜீவத் தண்ணீர் ஊற்றான கிறிஸ்துவை விட்டுவிட்டு வெடிப்புள்ள தொட்டியை வெட்டிக் கொண்டாயோ? கர்த்த ரில் மனமகிழ்ச்சியாய் இருப்பதை விட்டு விட்டு உலக சிற்றின் பங்களை நாடிப் போனாயோ?

எனக்கு ஒரு சகோதரியைத் தெரியும். ஒரு ஏழ்மையான குடும்பத்திலிருந்து கர்த்தர் உயர்த்தி அவளை ஆசீர்வதித் தார். நல்ல ஓரிடத்தில் திருமணம் நடந்தது. வாழ்க்கையின் வசதிகள் பெருகினது. கணவனையே பிரியப்படுத்த நினைத்த அவள், தன் வாழ்வில் தன்னை உயர்த்தின தேவனை மறந்து விட்டாள். கணவனுக்கு ஜெபம், வேதம் பிரியமில்லை என்று சொல்லி தானும் சபை கூடுதலை விட்டுவிட்டாள். திரளான

பணம் இருந்தது. ஆனால் கர்த்தரையோ புறக்கணித்தாள். ஒருநாள் அவள் உள்ளத்தை உலுக்கும்செய்தி ஒன்று கிடைத்தது. அவள் கணவன் வேறு ஒரு பெண்ணோடு தொடர்பு கொண்டிருக்கிறார் என்ற செய்தியே அது! மனம் உடைந்த அவள் தற்கொலைக்குள்ளாகி பாதாளத்திற்குள் கடந்து போனாள்.

தொட்டி வெடித்தது! தண்ணீர் சிதறியது!!

பணத்தொட்டி வெட்ட நினைத்து கிறிஸ்துவை விற்றும் போட்ட யூதாஸ் காரியோத்தின் கூக்குரல் உங்கள் காதுகளில் விழவில்லையா?

தேவனோடு உலாவுவதைப் பார்க்கிலும், தேவன் தடுத்த கனியை அதிகமாக விரும்பி "பேராசைத் தொட்டியைக் கட்டிய" ஆதாம், ஏவாள் தோட்டத்தை விட்டு துரத்தப்பட்ட பரிதாபமான காட்சி உங்கள் கண் முன் வரவில்லையா? (ஆதி. 3:24)

தேவனுக்கு செவி கொடுப்பதைப் பார்க்கிலும், ஆடு மாடுகள் மேல் இச்சை வைத்து "வெடிப்புள்ள தொட்டி" வெட்டிய ராஜாவாகிய சவுல் புறக்கணிக்கப்பட்டதை வேதம் உங்களுக்கு விளக்கவில்லையா? (I சாமுவேல் 15:23)

சேஷ்ட புத்திர பாகத்தைக் காட்டிலும், ஒரு வேளை போஜனத்தைத் தெரிந்து கொண்ட ஏசாவுக்கு, பிற்பாடுதான் "வெடிப்புள்ள தொட்டியின்" வேதனை தெரிந்தது. பிற்பாடு அவன் கண்ணீர் விட்டு கவலையோடு தேடியும் மனம் மாறுதலைக் காணாமற் போனானே! (எபிரே 12:17)

"என் ஜனங்கள் இரண்டு தீமைகளை செய்தார்கள். ஜீவ தண்ணீர் ஊற்றாகிய என்னை விட்டுவிட்டார்கள். தண்ணீர்

நிற்காத தொட்டிகளாகிய வெடிப்புள்ள தொட்டிகளைத் தங்களுக்கு வெட்டிக் கொண்டார்கள்." (எரேமியா 2:13)

2. பொத்தலான பை:. வெடிப்புள்ள தொட்டியின் குடும்பத்தைக் குறித்துச் சிந்திக்கும்பொழுது பொத்தலான பை மனக்கண்முன் வருகிறது. கூலியைச் சம்பாதிக்கிறவன் பொத்தலான பையிலே போடுகிறவனாய் அதைச் சம்பாதிக்கிறான். உங்கள் வழிகளைச் சிந்தித்து பாருங்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்" (ஆகாய் 1:6).

தேவன் வானத்தின் பலகணிகளைத் திறந்து இடங்கொள்ளாமற் போகுமட்டும் ஆசீர்வாதத்தை வருஷிக்கப் பண்ண வேண்டுமென்றால், தேவனுடையதை தேவனுக்குக் கொடுக்க வேண்டும் (மல் 3:10). அப்பொழுதுதான் நூறத்தனையாய் தேவனிடமிருந்து பெற்றுக்கொள்ள முடியும்! கர்த்தருக்குக் கொடுக்காமல் ஊழியங்களைக் கைதாங்காமல் 'தேவனை வஞ்சித்து, வீடுகட்டவும், ஆஸ்திகளைச் சேர்க்கவும் உல்லாசங்களை நாடவும் உன் மனது சென்றால் வெடிப்புள்ளத் தொட்டியையும், பொத்தலான பையையும் ஒரு நிமிடம் உன் மனக் கண்முன் நிறுத்தி சிந்தனை செய்து சீர்திருந்து!

3. கிழிந்த வலை:- வெடிப்புள்ள தொட்டியின் மற்றொரு சகோதரிதான் கிழிந்த வலை! உன் ஊழியமாகிய மீன் பிடித்தலில் ஆத்துமாக்கள் சேராமல், ஆசீர்வாதம் இழந்து வருகிறதா? கிடைப்பதும் வழுவி, நழுவிப் போய்விடுகிறதா?

மாற்கு 1:19-ஐவாசித்துப்பார்! யாக்கோபும், யோவானும் படகிலே வலைகளைப் பழுது பார்த்துக் கொண்டிருந்தபோது இயேசு கண்டு தமது ஊழியத்திற்கு அழைத்தார் என்று காண்கிறோம். ஆம் வலைகளைப் பழுது பார்த்தார்கள். இயேசு அழைத்தார், கிழிந்த வலையில் மீன் தங்காது. பாவமுள்ள ஜீவியத்தில் ஆசிர்வாதம் தங்காது. எனவே இப்

பொழுதே உன் ஜீவியத்தைப் பழுது பார்த்து, செப்பனிட்டு தேவ வல்லமை உன்னில் இறங்க ஒப்புக்கொடு.

4. தகர்க்கப்பட்ட பலிபீடம்:- வெடிப்புள்ள தொட்டியின் சகோதரன்தான் தகர்க்கப்பட்ட பலிபீடம்! பலிபீடம் என்பது தேவனும், மனிதனும் செய்யும் உடன்படிக்கையின் அடையாளம். துணிகரமான பாவத்திற்குள் நீ பிரவேசிக்கும் போது உன் இருதய பலிபீடத்தைத் தகர்க்கிறாய். சிலுவையை அவமதிக்கிறாய் என்றுதான் பொருள். அப்படியானால் தேவனுடைய வல்லமையரான அக்கினி எப்படி உன்மேல் இறங்க முடியும்? அந்தகார சக்திகளை எப்படி நீ முறியடிக்க முடியும்?

தன்னந்தனியனாய் அந்தகார சக்திகளை கர்மேல் பர்வதத்தின்மேல் எதிர்த்த எலியா, முதல் செய்த காரியம் தகர்க்கப்பட்ட பலிபீடத்தைச் செப்பனிட்டதுதான் (1 இராஜா 18:30) தேவனுடைய பிள்ளையே, வெடிப்புள்ள தொட்டியை விட்டு விலகி, உன் ஜீவியத்தைச் செப்பனிட்டு, கல்வாரியண்டை ஓடிவா!

5. பிளக்கப்பட்ட கன்மலை:- (உன். 2:17) ஆம்! நமக்கு அடைக்கலம் தரும்படியாக கிறிஸ்துவாகிய கன்மலை பிளக்கப்பட்டார்! அவர் சரீரம் பிளக்கப்பட்டது! ! அவர் காயங்களில் பாயும் ஜீவ ஊற்று பாவங்களற நம்மைக் கழுவும். தாகத்தைத் தீர்க்கும்! நித்திய ஜீவனைத்தரும்! கன்மலையின் வெடிப்புகளிலும் சிகரங்களின் மறைவிடங்களிலும் தங்குகிற என் புறாவே என்று கர்த்தர் உன்னை அழைக்கட்டும், (உன் 2:14)

வெடிப்புள்ள தொட்டிகளில் தண்ணீர் நிற்காது! பொத்தலான பைகளில் ஆசீர்வாதம் தங்காது! கிழிந்த வலையில் மீன் சேராது! தகர்க்கப்பட்ட பலிபீடத்தில் அக்கினி இறங்காது. எனவே பிளக்கப்பட்ட கன்மலையான கிறிஸ்துவிடம் வா! பலியின் உடன்படிக்கைச் செய்! அப்பொழுது ஜீவதண்ணீர் ஊற்றில் அனுதினமும் பானம் செய்வாய். அல்லேலூயா!

## அத்தியாயம் 13

# மகா ஞானமுள்ளவைகள்

பூமியில் சிறியவைகளாயிருந்தும் மகா ஞானமுள்ளவைகள் நான்குண்டு; அவையாவன அற்பமான ஜெந்துவாயிருந்தும் கோடைகாலத்திலே தங்கள் ஆகாரத்தைச் சம்பாதிக்கிற எறும்பும், சத்துவமற்ற ஜெந்துவாயிருந்தும் தங்கள் வீட்டைக் கன்மலையிலே தோண்டி வைக்கும் குழி முசல்களும், ராஜா இல்லாதிருந்தும் பவுஞ்சு பவுஞ்சாய்ப் புறப்படுகிற வெட்டுக்கிளிகளும், தன் கைகளினால் வலையைப் பின்னி, அரசர் அரண்மனையிலிருக்கிற சிலந்திப்பூச்சியுமே. (நீதி 30; 24—28)

சாலமோன் ராஜா வாலிபனாக இருந்த போது, அவனது உள்ளம் தேவனோடு இசைந்திருந்தது. தேவன் அவனுக்கு அளவில்லாத ஞானத்தைக் கொடுத்தார். அந்த ஞானத்தை கொண்டு ஆவிக்குரிய அநேக நீதிமொழிகளை அவன் எழுதி வைத்தது மாத்திரமல்ல, ஊரும் பிராணி; மிருக ஜீவன், பறவை இவற்றை ஆராய்ந்து அறிந்து அதின்மூலம் ஆத்துமாவுக்கு பிரயோஜனமான ஆலோசனைகளையும் எழுதி வைத்தார். அவைகளை நாம் தியானிப்பது நமது ஆத்துமாவுக்கு மிகவும் பிரயோஜனமாக இருக்கும்.

1. எறும்பு: வேதம் எறும்பை அற்பமான ஜெந்து என்று அழைக்கிறது. ஆம், பெலனற்ற அவைகள், தரையில் ஊர்ந்து செல்கின்றன. எல்லோராலும் மிதிக்கப்படுகிறது. வீடுகளில் எறும்புப்புற்று இருக்குமானால் அவற்றை தீவிரமாக ஒழித்துக் கட்ட என்னென்ன வழிகளையெல்லாமோ கையாளுகிறோம்.

ஆனால் அவைகள் மகா ஞானமுள்ளவைகள். மனுஷனுக்கும் போதிக்கும் அளவுக்கு முன் மாதிரியான வாழ்க்கையுடையவை. காலங்களை அறிந்து கொள்ளும் சுபாவமுள்ளவை. மட்டுமல்ல, மாரிகாலத்தை எதிர் கொள்ள, கோடைகாலத்திலேயே தங்கள் ஆகாரத்தை சம்பாதிக்கும் குணமுள்ளவை!

எறும்பின்மூலம் தேவன் கற்றுத்தரும் ஆலோசனை என்ன?

காலத்தை அறிந்துகொள்! காலத்தை ஆதாயப்படுத்திக் கொள் என்பதே! காலத்தின் அருமையை அறிந்து வாழா விடில் கண்ணீர் விடுவாயே என்று ஒரு பக்தன் பாடுகிறார்!

இயேசு கிறிஸ்துவின் இதயத் துடிப்பு அதுவாக இருந்தது. 'பகல் காலமிருக்கு மட்டும் நான் என்னை அனுப்பினவருடைய கிரியைகளைச் செய்ய வேண்டும்; ஒருவனும் கிரியை செய்யக் கூடாத இராக்காலம் வருகிறது" (யோவான் 9:4) காலத்தை இயேசு இரண்டாக பிரித்தார். கிரியைச் செய்யக் கூடிய பகல் காலம், மற்றது கிரியைச் செய்யக் கூடாத இராக் காலம்.

எறும்பைப்போல இயேசு தன்னைத்தாழ்த்தி பூமிக்கு வந்தார். எறும்பைபோல இரவு பகலாக அவர் உழைத்தார். மனதுருக்கமுள்ள அவரது கால்கள் கிராமங்கள் தோறும், பட்டணங்கள் தோறும் அவரைக் கொண்டு சென்றது. மேய்ப்பனில்லாத ஆடுகளைப்போல மக்கள் தோய்ந்து போய் இருப்பதைக் கண்டு மனதுருகினார். எருசலேமைக் கண்டபோது அவரது கண்கள் கண்ணீர் குளமாயிற்று. பிரசங்கித்தார், குணமாக்கினார். அணைத்துக் கொண்டார். கண்ணீர் வடித்தார். எச்சரித்தார். மலையில் ஏறி இராமுழுவதும் ஜெபித்தார்! காலங்களை உணர்ந்து கொள்வது மட்டும் போதாது, எறும்பைப் போல அதை ஆதாயப்படுத்தி முழுவதும் பயன்படுத்தி கொள்ள வேண்டும்.

நீ வாழுகிற இந்த காலம் எப்படிப்பட்டது என்பதை நீ அறிந்திருக்கிறாயா? இயேசு கிறிஸ்து துயரத்தோடு கேட்டார். ''வானத்தின் தோற்றத்தை நிதானிக்க உங்களுக்குத் தெரியுமே, காலங்களின் அடையாளங்களை நிதானிக்க உங்களால் கூடாதா? (மத் 16:3)

கிருபையின் வாசல்கள் அடைபடும் காலத்திற்கு வந்திருக்கிறோம். வலுசர்ப்பம் தன் வாலினால் நட்சத்திரங்களை கீழே இழுத்து வீழ்ச்சியடையப் பண்ணும் நாட்களுக்கு வந்திருக்கிறோம். உலகத்தைக் காரிருள் மூடப்போகும் நேரம் இது!

''சோம்பேறியே, நீ எறும்பினிடத்தில் போய் அதின் வழிகளைப் பார்த்து ஞானத்தைக் கற்றுக் கொள். அதற்கு பிரபுவும், தலைவனும், அதிகாரியும் இல்லாதிருந்தும் கோடை காலத்தில் தனக்கு ஆகாரத்தைச் சம்பாதித்து அறுப்பு காலத்தில் தனக்குத் தானியத்தைச் சேர்த்து வைக்கும் (நீதி 6:6)

எறும்பு என்றால் உழைப்பு, முயற்சி, அயராத தளராத ஊக்கம் என்று பொருள். அநேக நாடுகளில் எறும்பின் சின்னம், ஊக்கமான உழைப்பின் சின்னமாகக் காணப்படுகிறது. மிகப் பெரிய அளவில் வரையப்பட்ட எறும்பின் சித்திரத்தை தொழிற்சாலைகளுக்கு முன் நிறுத்தி வைத்து வேலையாட்களை ஊக்கப்படுத்துகிறார்கள்.

எறும்பு ஆகாரத்தைச் சேகரிக்கிறது. சரிதான்; நாம் கிருபையின் காலமாகிய இந்த நாட்களில் எதைச் சம்பாதிப்பது?

முதலாவது உனது இரட்சிப்பைச் சம்பாதித்துக் கொள்.

D. L.மூடிப் பிரசங்கியார் சிகாகோ நகரத்தில் கூட்டங்கள் நடத்திக் கொண்டிருந்தபோது ஒரு பெரிய வியாபாரி கூட்டங்களில் மிகவும் ஈடுபாடு காட்டினார். ஆனால் இயேசுவை

ஏற்று கொள்ளத் தயங்கினர். ஒவ்வொரு நாளும் மூடிப்பிர சங்கியார் கண்ணீரோடு கூட ஆலோசனை கூறி வற்புறுத்தும் போது, ''ஐயா கொஞ்சம் தருணம் கொடுங்கள்; வியாபாரத் திலே என்னோடு பங்குதாரராயிருப்பவர் இரட்சிக்கப்படாதவர். என்னைக் கேலி செய்வார். நானும் வியாபாரியாய் இருப்பதால் இயேசுவை ஏற்றுக் கொள்ள முடியாது" என்று சொல்லி விடு வார். திரும்பத் திரும்ப மூடிப்பிரசங்கியார் வற்புறுத்திக் கேட்கவே அவர் ஆலயத்திற்கு வருவதையே விட்டு விட்டார்.

சில நாட்கள் கழித்து அவர் மிகவும் நோய்வாய்பட்டார். D.L.மூடியை ஜெபிக்கும்படி அழைத்தார். மரணத்தருவாயி லிருந்த அவருக்காக மூடிப்பிரசங்கியார் ஊக்கமாக ஜெபித் தார். குணமடைந்ததும் இயேசுவை ஏற்றுக் கொள்வதாக அவர் வாக்களித்தார். ஆனல் குணமடைந்த போதோ, மறுத்துவிட்டார்.

திடீரென மீண்டும் அவர் வியாதிக்குள்ளானர். மூடிப் பிரசங்கியார் விரைந்து சென்று அவருக்காக ஜெபித்தார். ஆனல் ஜெபிக்க முடியாதபடி இருள் சூழ்ந்திருந்தது. வியா பாரி கண்ணீர் விட்டார். ''என்னை தேவன் மன்னிக்கவே மாட்டார். ஏனெனில் எனக்கு தேவன் தந்த தருணங்களை யெல்லாம் வீணாக்கி விட்டேனே'' என்றார். மரணம் தன் கோரமான பற்களால் அவரது ஆத்துமாவை உலுக்கி உயிரை உறிஞ்சியது.

அந்த வியாபாரி மரணத்திற்கு முன் சொன்ன கடைசி வார்த்தைகள் இதுதான். ''அறுப்புக்காலம் சென்றது. கோடைக்காலமும் முடிந்தது. நானோ இரட்சிக்கப்பட வில்லை" (எரேமியா 8:20). எவ்வளவு பரிதாபம். இரட் சிப்பை அலட்சியம் செய்பவரின் நிலை பரிதாபம்தான்!

தேவனுடைய பிள்ளையே, ஒரு நிமிடம் உன் ஜீவியத்தைப் பற்றி நீ உண்மையாகவே சிந்தித்துபார்! நீ இரட்சிக்கப்பட்டி

ருக்கிருயா? உன் உள்ளத்தின் ஆழத்திலிருந்து வரும் பதிலென்ன? இன்று இயேசுவின் வருகை இருக்குமென்ருல் நிச்சயமாகவே நீ காணப்படுவாயா?

"இதோ, இப்பொழுதே அனுக்கிரக காலம், இப்பொழுதே இரட்சணிய நாள்" (II கொரி 6:2)

அப்போஸ்தலணுகிய பவுல் எச்சரிக்கிருர். "இரவு சென்று போயிற்று. பகல் சமீபமாயிற்று, ஆகையால் அந்தகாரத்தின் கிரியைகளை நாம் தள்ளிவிட்டு ஒளியின் ஆயுதங்களைத் தரித்துக் கொள்வோம்" (ரோமர் 13:12)

கர்த்தர் தன் மணவாட்டியை துரிதப்படுத்துகிருர், "மாரி காலம் சென்றது, மழை பெய்து ஒழிந்தது, பூமியிலே புஷ்பங்கள் காணப்படுகிறது, என் பிரியமே! என் ரூபவதியே! நீ எழுந்துவா" (உன் 2:11, 12)

மாரி காலத்தில் எறும்புக்கு தானியங்கள் கிடைப்பதில்லை. அதைபோலவே கர்த்தர் சொல்கிருர்; "இதோ நான் தேசத்தின் மேல் பஞ்சத்தையும் அனுப்பும் நாட்கள் வரும்; ஆகாரக்குறைவினுல் உண்டாகிய பஞ்சமல்ல; ஜலக் குறைவினுல் உண்டாகிய தாகமுமல்ல; கர்த்தருடைய வசனம் கேட்கக் கிடைக்காத பஞ்சத்தை அனுப்புவேன் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிருர்" (ஆமோஸ் 8:11)

எறும்பாயிரு, உன் உள்ளத்தில் வசனங்களை சேகரித்துப் பக்குவப்படுத்து! ருமானியா தேசம் ரஷ்யர்களால் பிடிக்கப்படுமுன், ஆவியானவர் அநேக தேவப் பிள்ளைகள் மூலம் வசனம் கிடைக்கக் கூடாத பஞ்சம் வரப்போகிறது என்று எச்சரித்துக் கொண்டே வந்தார். எனவே விசுவாசிகள் முழுமுழு அதிகாரங்களாக மனப்பாடம் செய்தனர். சிலர் சுவிசேஷபுஸ்த

கங்கள் முழுவதையும் நினைவில் வைத்தனர். திடீரென்று கிருபையின் காலம் முடிந்து கம்யூனிச ஆட்சி ஏற்பட்டது. வேதப் புத்தகங்கள் பிடுங்கப்பட்டு எரிக்கப்பட்டன.

வேதத்தின் ஒரு தாள், ஒரு பக்கம்கூட கிடைக்காமற் போயிற்று. ஆனால் வேதத்தைக் கற்றவர்கள் சித்திரவதை நேரங்களில் பெலன் ஊட்டும் வேத வசனங்களை மீண்டும் மீண்டும் சொல்லிச் சொல்லி தேவ பெலத்தைப் பெற்றுக் கொண்டனர். சத்துருவால் அவர்களது விசுவாசத்தை அழிக்க முடியவில்லை. எனவே வேத வசனங்களை ஆவலோடு கற்று நினைவில் நிறுத்து.

எறும்பாயிரு! ஆத்துமாக்களை சம்பாதித்து, பரலோகத்தில் சேர்த்து வை! வேதம் சொல்கிறது! "நீங்கள் மாளும்போது உங்களை நித்தியமான வீடுகளிலே ஏற்றுக் கொள்வாருண்டாகும்படி அநீதியான உலகப் பொருளால் உங்களுக்கு சிநேகிதரைச் சம்பாதியுங்கள்" (லூக்கா 16:9)

ஆத்துமாக்களை சேகரிக்க இது அருமையான நேரம். தேசத்தில் சுவிசேஷ வாசல்கள் அடைபடும்முன், எறும்பைப் போல் சுறுசுறுப்பாய் இயங்கி, ஆஸ்பத்திரிகளுக்கும், ஜெயிலுக்கும், சந்தை வீதிகளுக்கும் சென்று ஆத்துமா ஆதாயம் செய்வாயாக!

2. குழி முசல்கள் சத்துவமற்ற ஜெந்துதான். அதற்கு தற்காப்புக்கான உபகரணங்கள் ஒன்றும் இல்லை. அதற்கு பாம்பின் விஷமில்லை. தேளின் கொடுக்கு இல்லை. முட்டுவதற்கு கொம்பு இல்லை. கடிக்காது. உதைக்காது. எந்தத் தீமையும் செய்யாது. ஆனாலும் அந்த பேதையான முயலுக்கு மகா ஞானமுண்டு. தன்னைப் பாதுகாத்துக் கொள்ளும்வழியை புத்தியாய் அறிந்திருக்கிறது. என்ன அதுதெரியுமா? தங்கள் வீட்டை கன்மலையிலே தோண்டி வைப்பதுதான்.

தன் பெலவீனத்தை உணர்ந்து கன்மலையிலே அடைக்கலம் புகுந்து கொள்கிறது. அது கன்மலையில் அடைக்கலமாயிருக்கும் வரை எந்த சாத்தானின் தந்திரங்களும் அதைச் சேதப்படுத்தமாட்டாது. சங்கீதம் 104:18 சொல்கிறது, "உயர்ந்த பர்வதங்கள் வரையாடுகளுக்கும், கன்மலைகள் குழி முசல்களுக்கும் அடைக்கலம்."

தேவனுடைய பிள்ளையே, உன் அடைக்கலம் என்ன? பணமா, செல்வமா, செல்வாக்குகளா? அல்லது கன்மலையான கிறிஸ்துவா?

கன்மலையிலே உன் அடைக்கலத்தை வைத்திருக்கிறாயா? அந்தக் கன்மலை கிறிஸ்துவே. II கொரி 10:4. பெருங்காற்றுக்குப் புகலிடம். கொடுமையானவர்களின் சீறலுக்கு மறைவிடம்.

கன்மலையிலே வெடிப்புகளிலே தங்குகிற புருவாய் கிறிஸ்துவின் ஐங்காயங்களுக்குள் உன்னை மறைத்துக் கொண்டிருக்கிறாயா? "அவர் காற்றுக்கு ஒதுக்கிடமாகவும், பெரு வெள்ளத்துக்குப் புகலிடமாகவும், வறண்ட நிலத்துக்கு நீர்க் கால்களாகவும் விடாய்த்த பூமிக்குப் பெரும் கன்மலையின் நிழலாகவும் இருப்பார்" (ஏசாயா 32:2)

குழி முசல்களை வேட்டையாடும்படி பருந்துகள் மேலே வட்டமிடுகின்றன. நரிகள் புதர்களில் மறைந்து நிற்கின்றன. பாம்புகள் படமெடுத்து ஆடுகின்றன. ஆனால் குழி முசல்கள் கன்மலையில் தங்கள் வீட்டைக்கட்டியிருப்பதால் அவை அசைக்கப் படுவதில்லை.

குழி முசலுக்கு தீமை செய்ய நினைக்கிறவன் கன்மலையோடு மோதுகிறான். அது அவனுக்குத்தான் சேதம் விளைவிக்கும். அவன் நொறுங்கிப்போவான்.

அந்தக் கன்மலையின் மேல் தங்கள் வீட்டைக் கட்டுகிறவர்கள் பாக்கியவான்கள். பெரு வெள்ளங்கள் வந்து மோதி அடித்தாலும் அந்த வீடு விழுவதில்லை.

கர்த்தருடைய சபையும் அந்த ஞானக் கன்மலையின் மீது தான் கட்டப்பட்டிருக்கிறது. பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை (மத் 16:18) போடப்பட்டிருக்கின்ற அஸ்திபாரமாகிய கிறிஸ்துவேயல்லாமல் வேறு ஒரு அஸ்திபாரத்தைப் போட ஒருவனாலும் கூடாது. (I கொரி 3:10)

இதோ, அஸ்திபாரமாக ஒரு கல்லை நான் சீயோனிலே வைக்கிறேன். அது பரீட்சிக்கப் பட்டதும், விலையேறப் பெற்றதும், திட அஸ்திபாரமுள்ளதுமான மூலைக் கல்லாயிருக்கும். விசுவாசிக்கிறவன் பதறான் (ஏசாயா 26:16)

ஞானமுள்ள குழி முசலாயிருந்தால் நீ பதற வேண்டியதில்லை. கலங்க வேண்டியதில்லை. தொய்ந்து போகவேண்டியதில்லை தாவீது சொல்கிறார், ''என் இருதயம் தொய்யும்போது பூமியின் கடையாந்தரத்திலிருந்து உம்மை நோக்கிக் கூப்பிடுவேன். எனக்கு எட்டாத உயரமான கன்மலையில் என்னைக் கொண்டு போய் விடும்'' (சங் 61:2)

தாவீது கன்மலையில் தன் வாசஸ்தலத்தை அமைத்துக் கொண்டார். கன்மலையின் அடைக்கலத்தை தன் பாதுகாப்பாக மாற்றினார். கன்மலையின் பெலனை தான் சுதந்தரித்துக் கொண்டார். இஸ்ரவேலருக்கு முன்பாக சென்ற ஞானக் கன்மலையையும், ஞானக்கன்மலையிலிருந்து புறப்பட்ட ஜீவத்தண்ணீரையும் அவர் அறிந்திருந்தபடியால், அந்தக் கன்மலையையே தன் மார்கவசமாக அணிந்து கொண்டார். ''என் பெலனாகிய கர்த்தாவே, உம்மில் அன்பு கூறுவேன். கர்த்தர் என் கன்மலையும், என் கோட்டையும், என் இரட்சகரும், என் தேவனும் நான் நம்பியிருக்கிற என்

துருகமும் என் கேடகமும் என் இரட்சண்யக் கொம்பும், என் உயர்ந்த அடைக்கலமுமாயிருக்கிறார்" (சங்18:1,2)

என் கன்மலையாகிய கர்த்தாவே, உம்மை நோக்கிக் கூப்பிடுகிறேன். (சங் 28:1), நீர் எனக்குப் பலத்தத் துருகமும் எனக்கு அடைக்கலமான அரணுமாயிரும். என் கன்மலையும் என் கோட்டையும் நீரே (சங் 31:2)

ஆம் கர்த்தரின் அடைக்கலத்தில் இருப்பவன் பாக்கியவான். குழிமுசல்களுக்கு இருந்த அந்த மகா ஞானம் நம் ஒவ்வொருவருக்கும் இருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்!

ஒருமுறை ஒரு சுவிசேஷகர் மலைப்பகுதியில் ஊழியம் செய்துவிட்டு காட்டுப்பாதை வழியாக வந்து கொண்டிருந்தார். திடீரென்று ஒரு கரடி இவரைக் கண்டு துரத்த ஆரம்பித்தது. தன் உயிரை பிடித்துக் கொண்டு மிக வேகமாக சுவிசேஷகர் ஓடினார். கரடியும் விடாமல் துரத்திக் கொண்டுவந்து அவரை மிகவும் நெருங்கிற்று. இனி தப்ப முடியாது என்று உணர்ந்த சுவிசேஷகரின் கண்களில் ஒரு பாறையின் பிளவு தென்பட்டது. உடனே அந்த பிளவில் தன்னை சரித்து புகுந்து மறைந்து கொண்டார். காட்டு கரடியால் உள்ளே வரமுடியவில்லை. அந்தப் பாறையில் மோதி மோதிப் பார்த்துவிட்டு உறுமிக்கொண்டே ஓடிவிட்டது.

சுவிசேஷகருக்கு இருந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. பாறையிலிருந்த அந்தப் பிளவு கிறிஸ்துவின் காயங்களின் பிளவு என்பதை உணர்ந்தபோது அவர் உள்ளம் உருகிற்று. நன்றியால் ஆனந்தக் கண்ணீர் சொரிந்து, "பிளவுண்ட மலையே, புகலிடம் ஈயுமே" என்ற பாட்டை அவர் இயற்றினார்.

ஆம், கன்மலையின் குழிமுசல்கள், மறைந்து ஜீவிக்கும் பரிசுத்தவான்களுக்கும், அந்தரங்க ஜெப ஜீவியத்திற்கும்

நிழலாட்டமாய் இருக்கிறது. அந்தரங்க ஜெபம், கிறிஸ்துவுக்குள் மறைந்து செய்யும் ஊழியம், பெயரையோ புகழையோ எதிர்பார்க்காத சுவிசேஷப்பணி, இவற்றையே கிறிஸ்து விரும்புகிறார்! நான் சிறுகவும் அவர் பெருகவும் வேண்டும் என்று சொன்ன ஸ்நானகனைப்போல கன்மலைக்குள் நாம் அடங்கி ஜீவிப்போமாக!

3. வெட்டுக்கிளி:- ராஜா இல்லாதிருந்தும் பவுஞ்சு பவுஞ்சாய் வெட்டுக்கிளிகள் புறப்படுவதால் இவை மகாஞான முள்ளவை என்று அழைக்கப்படுகிறது. (நீதி 30:27)

எப்படி இவைகள் ஒன்றுபோல புறப்படுகிறது? இரைச்சலைக் கேட்டுத்தான்! அதன் பின்னங்கால்கள் இறகுகளோடு உராயும்போது ஏற்படுகிற ஒலியின் மூலமாய் ஒன்றுக்கொன்று புரிந்து கொள்கிறது. உடனே செயல்படுகிறது.

மட்டுமல்ல; இவை காற்றின் திசையிலேயே செல்லக் கூடியது (யாத் 10:13) காற்றின் திசையை உணரவும், அதை பயனபடுத்திக் கொள்ளவும் வெட்டுக்கிளிகளுக்கு மகா ஞான முண்டு.

எல்லாவற்றிற்கும் மேலாக வெட்டுக்கிளிகளிடம் காணப்படும் ஒற்றுமை, ஒருமனப்பாடு பவுஞ்சு பவுஞ்சாய் புறப்படுகிற ஏக ஐக்கியம் மனிதனுக்குச் சவாலாக அமைந்திருக்கிறது.

ஒருமனப்பாட்டின் வல்லமையை கிறிஸ்தவர்கள் இன்னும் அறியாததால்தான் தேசம் இன்னும் சந்திக்கப்படவில்லை. நமக்குள்ளே ஆயிரம் சபைப் பிரிவுகள். 'மார்க்க பேதங்கள், ஒருவர் மேல் ஒருவர் பிரிவினை சேற்றை வீசிக் கொண்டிருக்கிறோமே தவிர, அன்பின் ஐக்கிய சுவிசேஷ வாசனையை வீசவில்லை! ஆ! வெட்டுக்கிளிகளின் ஞானம் நமக்கிருந்தால் எவ்வளவு அருமையாக இருக்கும்.

வெட்டுக்கிளிகள் காற்றின் தன்மையை அறிந்து, அதே திசையில் புறப்படுவது தேவ சித்தத்தை அறிந்து செயல்படும் விசுவாசிக்கு அடையாளமாக இருக்கிறது. காற்றானதுதனக்கு இஷ்டமான இடத்தில் வீசுகிறது. அதின் சத்தத்தை கேட்கிறாய், ஆகிலும் அது இன்ன இடத்திலிருந்து வருகிறது என்றும் இன்ன இடத்திற்குப் போகிறது என்றும் உனக்குத் தெரியாது! ஆவியினால் பிறந்தவன் எவனோ, அவனும் அப்படியே இருக்கிறான்'' என்று இயேசு சொன்னார். (யோவான் 3:8) ஆவியானவர் உன்னில் கிரியை செய்ய நீ தேவ சித்தத்திற்கு இடங்கொடுக்கிறாயா?

இப்பொழுது காற்று வீசிக் கொண்டிருக்கிறது. ஆவியின் பின் மாரியின் காற்று, பெருமழை இரைச்சலின்காற்று.எழுப்புதலின் காற்று! வெட்டுக்கிளிகளைப்போல பவுஞ்சு பவுஞ்சாக எழும்பி தேசத்தை கர்த்தருக்கென்று ஆதாயம் பண்ண இது அருமையான நேரம். கர்த்தர் தாவீதோடு சொன்னார். ''முசுக் கொட்டைச் செடியின் நுனிகளிலே செல்லுகிற இரைச்சலை நீ கேட்கும் போது சீக்கிரமாய் எழும்பிப்போ; அப்பொழுது பெலிஸ்தியரின் பாளயத்தை முறியடிக்க, கர்த்தர் உனக்கு முன்பாகப் புறப்பட்டிருப்பார் என்றார்" (12 சாமு 5:24)

தேவ சித்தத்தை அறிந்து ஜெபிக்கும் ஜெப வீரனே, நீ கர்த்தருக்காய் கிரியை செய்ய இது அருமையான நேரம் கர்த்தர் அநேக ஊழியரை எழுப்பிக் கொண்டிருக்கிறார். ஜெப வீரரை உருவாக்கிக் கொண்டிருக்கிறார். இரத்த சாட்சிகளை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார். தமிழ்நாட்டிலிருந்து பவுஞ்சு பவுஞ்சாக மிஷனெரிகள் வடஇந்தியாவை நோக்கிப் பறந்து கொண்டிருக்கிறார்கள். முசுக்கொட்டைச் செடியின் இரைச்சல் பெருவெள்ளத்து இரைச்சலாகக் கேட்கிறது!

பவுஞ்சு பவுஞ்சாக புறப்படும் வெட்டுக்கிளிகள் எக்காள சத்தம் கேட்டு பூமியிலிருந்து கிறிஸ்துவின் வருகையை எதிர் நோக்கிப் புறப்படும் பரிசுத்தவான்களுக்கு அடையாளமாக

இருக்கிறது! சத்தம் கேட்டு ஒன்று போல் புறப்படும் இந்த வெட்டுக் கிளிகளின் தோற்றம் எவ்வளவு இனிமையானது! உலகமெங்குமுள்ள பரிசுத்தவான்கள், கூட்டம் கூட்டமாக திரளாக கூடி கிறிஸ்துவை மத்திய ஆகாயத்தில் சந்திப்பார்கள். ஏனெனில் அவர்களின் இருதயம் மணவாளனின் சத்தத்திற்கு ஆவலாய்க் காத்திருந்தது. அவருக்கே செவிகொடுத்து அவர் சித்தத்தை அறிந்து, அவரது பிள்ளைகளோடு ஒருமனதின் ஐக்கியத்தைக் காத்துக் கொண்டபடியால் எக்காள சத்தத்தில் மகிழ்ந்து, அல்லேலூயா பாடி, நித்திய மகிழ்ச்சிக்குள் பிரவேசிப்பார்கள். ஆ! அந்த நாள் எவ்வளவு மகிழ்ச்சியான நாள்! ஆம்! வெட்டுக்கிளிகளின் ஞானம் நமக்கு எவ்வளவு அவசியம்!

4. சிலந்தி: தங்கள் கைகளினால் வலையைப்பின்னி, அரசர் அரண்மனையிலிருக்கிற சிலந்திப் பூச்சி மகாஞானமுடையது என்று வேதம் சொல்கிறது! (நீதி 30:28)

ஆம்; பூமியிலிருந்தாலும் பரலோக ராஜாதி ராஜாவின் அரண்மனையில் தங்கள் நித்திய வாசஸ்தலத்தைக் கட்டி எழுப்புகிற தேவனுடைய பிள்ளைகள் பாக்கியவான்கள், மகா ஞானமுள்ளவர்கள்.

சிலந்திப் பூச்சி அற்பமானது. அதன் வலையும் அற்பமானது தான். அதன் நெசவுகள் வஸ்திரங்களுக்கு ஏற்றவைகளல்ல என்று வேதம் குறிப்பிடுகிறது (ஏசாயா 59:6) ராஜாதி ராஜாவின் அரண்மனையை சுதந்தரித்துக் கொள்ளும்படி தன் அற்ப முயற்சியினால் அரண்மனையில் தன் வலையைப் பின்னுகிறது!

இயேசு சொன்னார், "நான் ஜெயங்கொண்டு பிதாவினுடைய சிங்காசனத்திலே அவரோடே கூட உட்கார்ந்தது போல ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனும் என்னுடைய

சிங்காசனத்தில் என்னோடு கூட உட்காரும்படி அருள் செய்வேன்" (வெளி 3:21)

ஆம்; தேவபிள்ளையே, நீ பூமியில் வாழ்ந்தாலும் தேவாதி தேவனோடு அவரது சிங்காசனத்திலும், அரண்மனையிலும் நிலைக்க அழைக்கப்பட்டிருக்கிறாய் என்பதை மறந்து போகாதே!

பணமும் செல்வாக்கும் நிறைந்த ஒரு சகோதரி ஒருமுறை பரலோக வாசஸ்தலங்களைக் காணவேண்டும் என்று வாஞ்சித்தாள். அவள் விருப்பத்தை அறிந்த தேவதூதன் அவளைத் தரிசனத்தின் மூலம் பரலோக வாசஸ்தலங்களுக்கு அழைத்துச் சென்றான். அங்கே அழகிய வீதிகள், பொன்னிறமான ஒளி வீசும் தெருக்கள் கண்களைக் கவரும் மாளிகைகளைக் கண்டு அந்த சகோதரி, அதிசயித்துப் போனாள். ஒவ்வொரு அரண்மனையாக அந்த தூதன் காண்பித்து, இது இந்த பக்தனுக்காக, இது இந்த ஊழியருக்காக, இது இந்த பரிசுத்தவானுக்காக என்று விளக்கிக் கொண்டே வந்தான். என் வாசஸ்தலம் எது? என்று தன் வாஞ்சையை அடக்கிக்கொள்ள முடியாத சகோதரி, தூதனிடம் கேட்டாள். தூதன் அவளை கூட்டிக் கொண்டு போய் மிகவும் சிறிய வீட்டைக் காண்பித்தபோது அவளுக்கிருந்த அதிர்ச்சி கொஞ்சமல்ல; தேவதூதன் விளக்கினான். "அம்மா, இந்த வாசஸ்தலங்களெல்லாம் நீங்கள்பூமியிலிருந்து அனுப்பும் பொருட்களாலேயே கட்டப்படுகிறது. நீங்கள் பூமியில் எதைக் கட்டுவீர்களோ அதுவே பரலோகத்தில் கட்டப்படும். கர்த்தருக்கென்று நீங்கள் கொடுக்கும் காணிக்கைகள், ஊழியத்தின் மூலம் ஆதாயப்படுத்தும் ஆத்துமாக்கள், ஜெபத்தில் முழங்காலில் பெற்றுக்கொள்ளும் ஆசீர்வாதங்களே பரலோகத்தில் வாசஸ்தலமாக கட்டப்படுகிறது" என்றான்.

ஆம், பூமியில் உன் ஊழியங்கள், ஜெபங்கள், தியாகமான காணிக்கைகள் ஒருக்காலும் வீணாய்ப் போகாது. இயேசு சொன்னார், "பரலோகத்திலே உங்களுக்குப் பொக்கிஷங்

களைச் சேர்த்து வையுங்கள். உங்கள் பொக்கிஷம் எங்கேயிருக்கிறதோ அங்கே உங்கள் இருதயமும் இருக்கும்" (மத் 6:21)

பரலோகத்தில் உன் வாசஸ்தலத்தை உருவாக்கும் சிலந்திப் பூச்சியே, நீ பாக்கியவான்! ஏழைக்கு இரங்குகிறவன் கர்த்தருக்குக் கடன் கொடுக்கிறுன். கர்த்தருடைய நாமத்தில் வருகிறவர்களுக்கு ஒரு கலசம் தண்ணீர் கொடுப்பவனும் கூட அதன் பலனை அடையாமற் போவதில்லை!

ஆபிரகாமுக்கு அந்த தரிசனம் இருந்தது. ''விசுவாசத்தாலே அவன் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திலே பரதேசியைப்போல சஞ்சரித்து, அந்த வாக்குத்தத்தத்திற்கு உடன் சுதந்திரராகிய ஈசாக்கோடும், யாக்கோபோடும் கூடாரங்களில் குடியிருந்தான். ஏனெனில் தேவன் தாமே கட்டி உருவாக்கின அஸ்திபாரங்களுள்ள நகரத்துக்கு அவன் காத்திருந்தான்" (எபிரேயர் 11: 9,10)

வேறு சிலர் மேன்மையான உயிர்த்தெழுதலை அடையும்படிக்கு விடுதலை பெறச் சம்மதியாமல் வாதிக்கப்பட்டார்கள்!

ராஜாதி ராஜாவின் அரண்மனையில் தன் கூட்டைக் கட்டுகிற சிலந்தி சோர்ந்து போவதில்லை. சிலந்திப்பூச்சி விடா முயற்சிக்கு அடையாளம். எத்தனை முறை விழுந்தாலும், நூல் அறுந்தாலும் அமைதியாய், பொறுமையாய் தான் ஆரம்பித்த பணியை நிறைவேற்றி முடிக்கும்.

சோர்ந்து போகாதே, என்று சிலந்திப்பூச்சி நமக்கு அன்போடு ஆலோசனை கூறுகிறது. நீதிமான் ஏழு தரம் ,விழுந்தாலும் எழுந்திருப்பான். சிலந்திப்பூச்சியின் விடா முயற்சியைக் கண்டு பெரிய அரசர்களும் கூட பெலனடைந்திருக்கிறர்கள். எனவே, திடன் கொள். பெலப்படு.

''இதோ சீக்கிரமாய் வருகிறேன்; அவனவனுடைய கிரியைகளின்படி அவனவனுக்கு நான் அளிக்கும் பலன் என்னோடே கூட வருகிறது" என்று கர்த்தர் சொல்கிறுர் (வெளி 22:12)

## அத்தியாயம் 14

# பிறந்த நாள் பரிசு

இதோ ஒரு சாட்சி! அவரே நேரடியாக உங்களோடு பேசட்டும்!

கிறிஸ்தவர்களென்ருலே எனக்கு தாங்க முடியாத வெறுப்பு! என் உள்ளத்தில் ஒரு வெறி. கொலே வெறி உண்டாகும். நகங்களால் கிறிஸ்தவர்களேக் கிழித்து, என் பற்களால் கடித்துக் குதறி, கூறிய கத்தியால் துண்டு துண்டாய் வெட்டி...! அப்படியாலும் என் ஆவேசம் தீராது, என் கொதிப்பு அடங்காது.

என் ஆவேசத்தைச் செயல்படுத்த ரஷ்ய அரசாங்கம் எனக்கு சிறைச்சாலே மேலதிகாரி உத்தியோகத்தைக் கொடுத்திருந்தது. என் உருண்டு திரண்ட வலிமையான உடல் அமைப்பும் கரடி மீசையும் கொடூர முகத்தோற்றமும் பிசாசையுங்கூட பயமுறுத்தக் கூடியவை!

ஆ னாலும் எனக்கும், என்னால் கொடுக்கப்பட்ட பயங்கரமான சித்திரவதைகளுக்கும் பயப்படாமலும் இயேசுவை மறுதலியாமலும் இருந்த ஒரு கிறிஸ்தவ தம்பதிகளின் பொறுமை எனக்கு ஆச்சரியத்தைத் தந்தது. ஓராண்டுகாலம் உருண்டது. கடைசியாக ஒரு நாள், என் கையில் ஒரு குறுந்தடியையெடுத்து கொண்டு அந்தக் கிறிஸ்தவ தம்பதிகளே முகம், கன்னம், கண் என்று பாராமல் மூர்க்க வெறியோடு தாக்கினேன். அவர்கள் உடலிலிருந்து பீரிட்ட இரத்தம் என் கைகளிலும் கால்களிலும் தெரித்தது. உறுமிக்கொண்டு, கீழே விழுந்து கிடந்த அவர்களே பூட்ஸ் காலால் ஆசை தீர மிதித்தேன்.

சிறையை விட்டு வெளியேறி என் வீட்டை நோக்கி வந்து கொண்டிருக்கும் பொழுது ஒரு சிறுமி என்னை நோக்கி ஓடி வந்தாள். ஏறக்குறைய பத்து வயது இருக்கும். இனிமையான தோற்றம்! அவள் கிழிந்த ஆடைகளை அணிந்திருந்தாலும் முகம் பிரகாசமாகவும், தூய்மையாகவும் இருந்தது.

இந்தக் கள்ளங்கபடமற்ற குழந்தைகளைக் கண்டதும், என் கொடூரமான முகம் சற்று மாறி புன்னகை பூத்தது. அவள் கைகளில் அழகிய பூங்கொத்து பல மலர்களால் ஒழுங்காகச் சேர்க்கப்பட்டு, நிறம் கண்ணைக் கவர்ந்தது. வாசனை மூக்கைச் சுண்டி இழுத்தது.

''மாமா, உங்களுக்காக இந்த மலர் வளையத்தை நானே செய்தேன். இன்று என்னுடைய பிறந்த நாள்!"

ஆச்சரியத்தோடு குழந்தையைத் தூக்கி முத்தமிட்டேன். என்னை மாமா என்று அழைக்கிறாளே! ''மாமா, உங்களுக்குக் குழந்தைகளிருக்கிறார்களா? உங்கள் அன்பு மனைவி அவர்களுக்கு இந்த ரோஜா மலர்களைக் கொடுத்து என் வாழ்த்துகளையும் அன்பையும் சொல்வீர்களா?"

''அது சரி, நீ யார் என்பதை என்னிடம் சொல்லவில்லையே?" என்றேன்.

அதற்கு சிறுமியவள், ''மாமா இன்றைக்கு என் பத்தாவது பிறந்த நாள். கடந்த ஆண்டு என் தாய் தகப்பனார் என்னோடிருந்தார்கள். அவர்களுக்கு நான் பூக்களைக் கொடுத்தேன். ஆனால் இந்த ஆண்டு அவர்கள் என்னோடு இல்லை. இயேசுக்கிறிஸ்துவின் மேல் அவர்கள் வைத்திருந்த அன்பின் நிமித்தமும், விசுவாசத்தினிமித்தமும் கைது செய்யப்பட்டு சிறைச் சாலையில் இருக்கிறார்கள். எங்கள் வேதத்தில் ''சத்துருக்களைச் சிநேகியுங்கள்" என்ற அன்புக் கட்டளை இருக்

கிறது. நீங்கள் என் தாயையும் தகப்பனையும் தினந்தோறும் இரத்தம் பீறும்படி கட்டைகளால் அடிக்கிறீர்கள் என்று கேள்விப்பட்டு, உங்களையும் இயேசுக் கிறிஸ்து சொன்ன வார்த்தையின்படி நேசிக்க இந்த மலர் வளையத்தைச் செய்தேன். மாமா, நான் உங்கள் அருமைக் குழந்தைகளையும், உங்கள் மனைவியையுங்கூட நேசிக்கிறேன் மாமா!" அவள் சிரித்த முகத்தோடுதான் சொன்னாள்; ஆனால் அவளது அழகிய சிறு கண்களில் கண்ணீர்த் துளிகள் ததும்பியிருந்தன.

அப்பொழுது என் இருதயத்தை ஒரு பலமுள்ள கரம் உலுக்கியதை உணர்ந்தேன். என் கால்கள் தள்ளாட ஆரம்பித்தது. ஆயிரம் மின்னல்கள் என் தலையிலிருந்து கால் வரை வேகமாய் ஓடுவதைப் போலிருந்தது. வீட்டிற்கு வந்தேன். என் குழந்தைகளைப் பார்க்க என் கண்கள் கூசியது.

''சத்துருக்களைச் சிநேகியுங்கள்!" இந்த ஜீவ வார்த்தைகளுக்கு முன்னால் மண்டியிட்டேன். முழங்காற்படியிட்டேன். அழுதேன். ஒப்புக்கொடுத்தேன்.

மறு நாள், நான் கிறிஸ்தவனாகி விட்டபடியால் என் வேலையை ராஜினாமா செய்கிறேன் என்று எழுதிக் கொடுத்தேன். யார் யாரை அடித்து, சித்திரவதை செய்தேனோ அவர்களோடே நான் இப்பொழுது ஒரு உடன் கைதியாக, அவர்களின் உடன் சகோதரனாக, அவர்களோடு சேர்ந்து பாடனுபவிப்பதைப் பாக்கியமாகக் கருதுகிறேன்.

சத்துருக்களை சிநேகியுங்கள்!

★

அத்தியாயம் 15

# பலிகள் பலவிதம்!

தமிழ் நாட்டிலுள்ள ஒரு சுவிசேஷர், "கிறிஸ்துவுக்காக "தற்கொலைப் படையினர்" என்ற ஒரு இயக்கத்தை ஆரம்பித்தார், இதன் நோக்கம். நாங்கள் கிறிஸ்துவுக்காக இரத்த சாட்சிகளாய் மரிப்போம் என்பதே!

அநேக வாலிபர்கள் கூட நாங்கள் கிறிஸ்துவுக்காக இரத்த சாட்சிகளாக மரிக்க விரும்புகிறோம். அப்படியே பிரதிஷ்டை செய்திருக்கிறோம் என்று சொல்கிறார்கள். அவர்கள் இயேசுவின் மேல் வைத்திருக்கிற அன்புக்காக தேவனைத் துதிக்கிறேன்.

ஆனால் இரத்த சாட்சியாக மரிப்பதைவிட, இரத்த சாட்சியாக வாழ்வது மேல்! பவுலப்போஸ்தலன், "நான் அனுதினமும் சாகிறேன்" என்கிறார் (1கொரி 15:31). உன் துக்கங்களை, உன் ஓய்வு நேரங்களை, உன் பொருளை, உன் பணத்தை கர்த்தருக்கென்று தியாகமாய் செலவிட்டு, உயிருள்ள இரத்த சாட்சியாக வாழ்க்கை நடத்துவதே கர்த்தருக்குகந்த பலியின் உடன்படிக்கையாகும். ஒவ்வொரு நாளும் ஊழியத்தில் பாடு அனுபவிப்பதில் தீவிரமாக இறங்கு. இயேசு சொன்னார் ஒருவன் என்னைப் பின்பற்ற விரும்பினால், தன்னைத்தானே வெறுத்து தன் சிலுவையை அனுதினமும் எடுத்துக்கொண்டு, என்னைப் பின்பற்றக் கடவன்." (லூக் 9:23)

பாவத்திற்கு எதிர்த்து நிற்பதில் இரத்தம் சிந்தத்தக்கதாக போராடு. அனுதினமும் பாவத்துக்கென்று செத்து, நீதிக்கென்று பிழைத்துக்கொள். கர்த்தர் தம்முடைய வருகையில் பலியினால் என்னோடே உடன்படிக்கை பண்ணின என்னுடைய பரிசுத்தவான்களை என்னிடத்தில் கூட்டுங்கள் என்பார்.

(சங் 50:5) எப்படி பலியாய் ஜீவிப்பது என்பதைப்பற்றி சற்றே தியானிப்போமா?

1. ஜீவபலி:— "அப்படியிருக்க சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும். தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக் கொடுக்க வேண்டும் என்று தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு வேண்டிக் கொள்கிறேன்." (ரோமர் 12:1)

ஆம்; ஜீவ பலியாக!

உருவின கத்தியை உன் தொண்டையில் வைத்து, கிறிஸ்துவை மறுதலிக்கிறாயா இல்லையா என்று கேட்கும் போது, "மாட்டேன்" என்று கூறி ஜீவனைக் கொடுப்பது எளிதுதான். ஆனால் உயிருள்ள இரத்த சாட்சியாக, பலியாக ஒவ்வொரு நாளும் உன் ஆத்துமாவை' பலிபீடத்தில் வைத்து, ஆத்தும பாரத்தோடு மன்றாடி, உயிரை மதியாமல் ஊழியஞ் செய்து உன்னை நீயே பானபலியாக வார்த்துக் கொடுப்பதே ஜீவபலியாகும்.

ஜீவபலி என்றால் என்ன?

"கிறிஸ்துவோடு கூட சிலுவையில் அறையப்பட்டு உன் சுயத்திற்கு நீ மரிப்பதுதான்!"

ஐயா, சுயத்திற்கு மரிப்பது என்றால் என்ன என்று வாலிபன் ஒருவன் ஜார்ஜ் முல்லரிடம் கேட்டான். அதற்கு அவர், தம்பி நீ கல்லறைகளுக்குப் போய் அங்கே எழுதப் பட்டிருக்கும் மரித்தவர்களின் பெயர்களை வாசித்து அவர்களை உன மனம்போல வாய்க்கு வந்தபடி பழித்து வசைபாடு! பிறகு கொஞ்ச நேரம் கழித்து அவர்களை புகழ்ந்து பேசு. பிறகு என்னிடம் வா என்று சொன்னார்.

அப்படியே வாலிபர் போய் பழித்தும், புகழ்ந்தும் பேசி விட்டுத் திரும்பினான். போதகர் கேட்டார். நீ கடினமாய்—கோபமாய் பேசின போது கல்லறைக்குள் அடக்கம் பண்ணப் பட்டவர்கள் உன்மேல் சீறினார்களா?

''இல்லே, ஒரு பதிலும் பேசவில்லே!"

நீ புகழ்ந்த போது பெருமையடைந்து உன்னேப் பாராட்டினர்களா?

இல்லே, ஒன்றும் பேசவில்லே.

சுயம்மரித்தல், கிறிஸ்துவோடு சிலுவையிலறைப்படுவது என்பது அதுதான். மற்றவர்களின் புகழுரைகள் உன்னே பாதிக்கக் கூடாது. இந்த மனநிலேயை சிலுவையில் உயிர் தந்த கிறிஸ்துவின் உதவியோடு பெற்றுக் கொள்வது தான் சுயம் மரித்தல் என்று விளக்கினர்.

தேவனுடைய பக்தர்கள் எல்லோரும் தங்கள் சுய சித்தத்தை சிலுவையில் அறைந்திருந்தார்கள். அதனுல்தான் மார்ட்டின் லூத்தர் உற்சாகத்தோடு தன் மார்பில் தட்டிச் சொன்னுர். ''இங்கு மார்ட்டின் லூத்தர் இல்லே, இயேசுக் கிறிஸ்து இருக்கிருர்" அல்லேலூயா!

உன்னில் நீயே வாழ்கிருயா? அல்லது கிறிஸ்து வாழ் கிருரா? சுகபோகமாய் உல்லாசமாய் வாழ்கிருயா? அல்லது பலியின் உடன்படிக்கையோடு கர்த்தருக்கென்று வாழ்கிருயா?

2. நொறுங்குண்ட பலி: ''தேவனுக்கேற்கும் பலிகள் நொறுங்குண்ட ஆவிதான். தேவனே, நொறுங்குண்டதும், நறுங்குண்டதுமான இருதயத்தை நீர் புறக்கணியீர்." (சங் 51:17)

இந்த நாட்களில் கர்த்தர் நம் ஒவ்வொருவருக்கும் நொறுங்குண்ட இருதயத்தைத் தரும்படி மன்ருடுவோமா? ஏனென்ருல் ஏதோ கடமைக்காக தூக்க மயக்கத்தோடு ஏனே தானே என்று ஜெபிக்கிற ஜெபத்தால் எந்தவித பிரயோசனமு மில்லே, எந்த வித பலனேயும் எதிர்பார்க்கவும் முடியாது.

நம் ஜெபம் நம் இருதயத்தின் பலியாக இருக்கட்டும். சாதாரண நிலையில் நான்குமணிநேரம் ஜெபிப்பதைக் காட்டிலும், நொறுங்குண்ட இருதயத்தோடு அரைமணி நேரம் ஜெபிப்பது வல்லமையானது!

''தேவனுக்கேற்கும் பலி அதுதான்!" என்று தாவீது, ஆலோசனை சொல்கிருர். உடன் குடும்பத்தின் கலக்கங்கள் பிரச்சனைகள், கடன் தொல்லைகள், பிள்ளைகளால் வந்த சீரழிவு எல்லாவற்றிற்கும் ஒரு நிவாரணம், நொறுங்குண்ட பலியான ஜெபம்தான்.

ஆ! என் தலை தண்ணீரும், என் கண்கள் கண்ணீரூற்றுமாலுல் நலமாயிருக்கும் என்று புலம்பின ; எரேமியாவுடன் சேர்ந்து, நீயும் நொறுங்குண்ட இருதயத்தோடு ஜெபிக்கக் கற்றுக்கொள். கண்ணீரின் ஆவியையும் விண்ணப்பத்தின் ஆவியையும் மன்ருடிப் பெற்றுக் கொள்!

3. ஆவிக்கேற்ற பலிகள்: ''இயேசு கிறிஸ்து மூலமாய்த் தேவனுக்குப் பிரியமான ஆவிக்கேற்ற பலிகளைச் செலுத்தும் படிக்குப் பரிசுத்த ஆசாரிய கூட்டமாகவும் கட்டப்பட்டு வருகிறீர்கள்'' (I பேதுரு 2:5)

விசுவாசியின் வாழ்க்கையின் நோக்கமே, ஆவிக்கேற்ற பலிகளைச் செலுத்துவதுதான்! பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொள். ஆவியிலே நிரம்பியிரு. ஆவியினுல் நடத்தப்படு. ஆவியோடும் கருத்தோடும் பாடு, ஆவியால் நிறைந்து ஜெபி. ஆவிக்கேற்ற பலிகளைச் செலுத்து.

தேவனுடைய ஆவிடங்களில் வாசமாயிருந்தால், நீங்கள் மாமிசத்திற்குட் பட்டவர்களாயிராமல், ஆவிக்குட்பட்டவர்களாயிருப்பீர்கள். கிறிஸ்துவின் ஆவியில்லாதவன் அவருடைய வனல்ல (ரோமர் 8:9)

ரோமர் 7ஆம் 8ஆம் அதிகாரங்களை மீண்டும் மீண்டும் வாசித்துப் பாருங்கள். ஏழாம் அதிகாரத்தில் நான்கு பிர

மாணங்களைக் குறித்து பவுல் அப்போஸ்தலன் எழுதுகிறார். நியாயப் பிரமாணம், பாவப்பிரமாணம், மனதின் பிரமாணம், ஆவியின் பிரமாணம், என்பவைகள்.

ரோமர் 8ஆம் அதிகாரத்தில், நீ ஜெயங் கொள்ள வேண்டுமானால் ஆவியின் படியே நடந்து, ஆவிக்குரிய பிரமாணங்களை நிறைவேற்ற வேண்டும் என்று குறிப்பிடுகிறார்.

ஆம், ஆவிக்கேற்கும் பலிகளைச் செலுத்துவோமாக!

4. ஸ்தோத்திரப் பலி: "நீ தேவனுக்கு ஸ்தோத்திரப் பலியிட்டு உன்னதமானவருக்கு உன் பொருத்தனைகளைச் செலுத்து" ஸ்தோத்திர பலியிடுகிறவன் என்னை மகிமைப் படுத்துகிறான். (சங் 50:14, 23)

ஸ்தோத்திரத்தை 'உதடுகளின் பலி' என்று வேதம் வர்ணிக்கிறது. பலியின் சுகந்த வாசனையை முகர்கிற கர்த்தர் உன் துதியின் சத்தத்தில் அக மகிழ்கிறாரா?

உலகத்தார் தங்கள் பாவங்களால், அக்கிரமங்களால் கிறிஸ்துவை சவுக்குகளால் அடித்த வண்ணமாயிருக்கின்றனர், உன் ஸ்தோத்திரபலி ஒன்றே அவரை ஆறுதற்படுத்தும்; அவரது காயங்களைக் குணமாக்கும்.

பரலோகத்தில் இடைவிடாமல் துதியும் ஸ்தோத்திரமும் பாடப்படுகிறது. அவர் துதிகளின் மத்தியில்வாசம் பண்ணுகிற தேவன். நீ பரலோகத்தின் மகிழ்ச்சியில் பங்கு பெற வேண்டுமானால் இப்பொழுதே துதி ஸ்தோத்திர பலிகளை தேவனுக்குச் செலுத்து! இயேசுக் கிறிஸ்து சீக்கிரமாக வருகிறார்.

★

அத்தியாயம் 16

# திறப்பின் வாசலில் யார்? யார்?

காலங்கள் கடந்து செல்கின்றன; வருகையின் கடைசி நிமிடங்களுக்கு வந்து விட்டோம்!

நமது கண்கள் ஆவலோடு அவரது வருகையை எதிர் பார்க்கட்டும்; நமது முழங்கால்கள், அவரது மகிமையை பூமிக்கு இழுக்கட்டும்; நமது உள்ளங்கள் தேசத்துக்காக, ஆத்துமாக்களுக்காக மன்ருடட்டும்;

இந்த நாட்கள் திறப்பின் வாசலில் நமது முழங்கால்களை உறுதிப்படுத்துகிற நாட்களாக, நம் தேவனேடு நெருங்கி ஜீவிக்கிற நாட்களாக இருக்கட்டும்; கிறிஸ்துவின்கரம் பிடித்து ஆழமான அனுபவங்களுக்குள் தீர்மானமாய் முன்னேறிச் செல்கிற காலமாயிருககட்டும்!

''நான் தேசத்தை அழிக்காதபடிக்குத் திறப்பிலே நிற்கவும், சுவரை அடைக்கவுந் தக்கதாக ஒரு மனுஷனைத் தேடினேன்; ஒருவனையும் காணேன்" (எசே 22:30)

ஒரு மனுபுத்திரன் தன் சிநேகிதனுக்காக வழக்காடுகிறது போல, தேவனேடே மனுஷனுக்காக வழக்காடுகிறவர் ஒருவர் உண்டானல் நலமாயிருக்கும் (யோபு 16:21)

தேவனுடைய அங்கலாய்ப்பும், கதறுதலும் உன் செவிகளில் விழுகின்றதா? ''ஒருவனையும் காணேன்' என்று எவ்வளவு வேதனையோடு கூறுகிருர்!

தேவனுடைய பிள்ளையே! அவரது கண்கள் நம்பிக்கையோடு உன்னைப்பார்த்துக் கொண்டிருக்கிறது, தேவனுக்காக-தேசத்துக்காக - யுத்தக்களத்தில் நின்று கொண்டிருக்கும் அவரது ஊழியக்காரருக்காக, வலது கைக்கும் இடது கைக்கும் வித்தியாசம் அறியாத இலட்சக்கணக்கான ஆத்துமாக்களுக்காக, நீ திறப்பின் வாசலில் நிற்கமாட்டாயா என்று உள்ளம் எவ்வளவு ஏங்குகிறது! எதிர் பார்க்கிறது! உன் பதில் என்ன?

1. சத்துருவின் சதிகளை உடைக்க விழிப்போடு திறப்பின் வாசலில் நிற்பாயாக:- எதிரிகளின் தாக்குதலிருந்து தங்கள் நாட்டைப் பாதுகாக்க எல்லை ஓரங்களில் ‘‘ரடார்” (Radar) என்ற கருவியைப் பொருத்தியிருப்பார்கள். ஒவ்வொரு விமானத் தளத்துக்கும் பாதுகாப்பாக இந்த ரடார் நின்று கொண்டிருக்கும். இதன் வேலை என்ன? இது மின்சாரச் கதிர்களை ஆகாயத்தில் இடைவிடாமல் அனுப்பிக் கொண்டேயிருக்கும். எதிரியின் விமானம் ஏதாவது வருமானால் இந்த மின்சாரக் கதிர்கள் அதில்பட்டு மீண்டும் கீழே வரும். ஒரே வினாடி நேரம் தான்; அதற்குள் எதிராளி விமானத்தின் வேகம் பறக்கும் உயரம், செல்லும் திசை அனைத்தையும் கணித்துத் தானாக இயங்கி தன்னிடமுள்ள பீரங்கியால் சுட்டு வீழ்த்தி விடும்.

ஆவிக்குரிய ‘‘ரடாராக” இருக்கிறாயா? உன்னிலிருந்து இடைவிடாத ஜெபம் தேவனுடைய சமூகத்தை நோக்கிப் போய்க் கொண்டிருக்கிறதா? பிசாசானவன் உன் குடும்பத்துக்கு விரோதமாகவும் சபைக்கு விரோதமாகவும், தேசத்துக்கு விரோதமாகவும் எழும்பி வரும் போது நீ திறப்பின் வாசலில் நிற்பாயானால் தேவ பெலத்தோடு அவனது தந்திரங்களை முறியடிப்பாய்!

அப்படியே எஸ்தர் ராணி திறப்பின் வாசலில் நின்றாள். சத்துருவாகிய துஷ்ட ஆமானின் சதிகளை உடைக்க, எஸ்தர் அல்லும் பகலும் மூன்று நாள் புசியாமலும் குடியாமலும்

இருந்து தன் தாதிமாரோடு உபவாசம் பண்ணினுள். (எஸ்தர் 4:16)

மவுனமாயிருக்க அது காலமில்லை என்று உணர்ந்தாள். "என் ஜனத்தின் மேல் வரும் பொல்லாப்பை நான் எப்படிப் பார்க்கக் கூடும்? என் குலத்துக்கு வரும் அழிவை நான் எப்படிச் சகிக்க கூடும்? என்று ராஜாவின் சமூகத்தில் மன்ருடினுள்: புலம்பினுள்.

முடிவு? சத்துருவின் சதிகள் முறியடிக்கப்பட்டன.

ஏனெனில், மாம்சத்தோடும் இரத்தத்தோடுமல்ல; துரைத்தனங்களோடும் அதிகாரங்களோடும் இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும் வான மண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டமுண்டு. (எபேசியர் 6:2)

பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள். அப்பொழுது அவன் ஓடிப்போவான்.

பிசாசின் தலையைக்கல்வாரியில் நசுக்கின ஜெயக்கிறிஸ்து நம்மோடு கூட இருப்பதினுல் நாம் சத்துருவின் சதிகளைத் தகர்ப்போம்; விழிப்போடு திறப்பில் நிற்போம்! அல்லேலூயா! !

2. பாவத்தின் மிகுதியால் தேவன் தேசத்தை அழிக்காதபடி திறப்பின் வாசலில் நிற்பாயாக! "கோபாக்கினையின் மகா நாள் வந்து விட்டது; யார் நிலை நிற்கக் கூடும்" என்று வேதம் கேட்கிறது (வெளி 6:17)

சோதோம் கொமோராவின் கூக்குரல் பெரியதாயிருப்பதினுலும் அவைகளின் பாவம் மிகவும் கொடியதாயிருப்பதினுலும் தேவன் இறங்கி வந்தார். (ஆதி 18:20, 21) அங்கேயும் தேவன் இறங்கி வந்தார். திறப்பின் வாசலில் ஒருவன் நின்று கொண்டிருக்கிருன்!

யார்? ஆபிரகாம்!...பகலில் உஷ்ணவேளையில் கூடார வாசலிலே உட்கார்ந்திருந்து தன் கண்களை ஏறெடுத்துப் பார்க்கும் போது" என்று எழுதப்பட்டிருக்கிறது! என்ன மேன்மையான அனுபவம்!

உனக்கு ஒத்தாசை செய்யும் கன்மலையாகிய கிறிஸ்துவை நோக்கி உனது கண்கள் எப்பொழுதும் ஏறெடுத்துப்பார்த்துக் கொண்டிருக்கிறதா? இரவும் பகலும் உன் ஜெபத்தொனி ஜெப தூபம் தேவனுடைய சந்நிதியில் ஏறெடுக்கப்படுகிறதா?

''நான் செய்யப் போகிறதை ஆபிரகாமுக்கு மறைப்பேனோ?" (ஆதி 18:18.)

'கர்த்தராகிய ஆண்டவர் தீர்க்கதரிசிகளாகிய தம்முடைய ஊழியக்காரருக்குத் தமது இரகசியத்தை வெளிப்படுத்தாமல் ஒரு காரியத்தையும் செய்யார்' (ஆமோஸ் 3:7)

சோதோம் கொமோராவின் அழிவை ஆபிரகாமுக்கு மறைக்காமல் அறிவித்த தேவன், திறப்பின் வாசலில் நிற்கும் தமது பிள்ளைகளுக்கு தமது சித்தத்தைப் பூரணமாக வெளிப்படுத்துவார்.

ஆதியாகமம் 18:22ல் ஓர் ஆழமான முன்மாதிரியான காட்சியைக் காணகிறோம். ''ஆபிரகாமோ பின்னும் கர்த்தருக்கு முன்பாக நின்று கொண்டிருந்தான்'' மனைவி, வேலைக்காரர், ஆடுமாடுகள் உறங்குகிற வேளையிலே, அழிவு சோதோமுக்கு நிச்சயிக்கப்பட்டிருந்த அந்த தருணத்திலே ''ஆபிரகாமோ பின்னும் கர்த்தருக்கு முன்பாக நின்று கொண்டிருந்தான்" சுவிசேஷ ஊழியம் செய்யாத ''பேர் நீதிமானை'' லோத்துக்கு ஆத்துமபாரம் இருந்ததில்லை. திறப்பின் வாசலில் நிற்கவுமில்லை. பத்து பேரைக்கூட நீதிமான்களாக்க முடியவுமில்லை.

''ஆபிரகாமோ பின்னும் கர்த்தருக்கு முன்பாக நின்று கொண்டிருந்தான்" தேவனிடத்தில் மன்றாடினான்!! சர்வலோக நியாயாதிபதி நீதி செய்யாதிருப்பாரோ? துன்மார்க்கரோடே நீதிமானையும் அழிப்பீரோ! என தன்னை தாழ்த்தி தேவனிடத்தில் போராடினான்.

ஆபிரகாம் திறப்பின் வாசலில் நின்றபடியால் லோத்தும் அவனது குடும்பமும் அழிவினின்று காக்கப்பட்டது.

நமது குடும்பத்தைப் பற்றியும், நமது உறவினர்களைக் குறித்தும் நமக்கு பாரமுண்டா? திறப்பின் வாசலில் நிற்கிறோமா? நொறுங்குண்ட இருதயத்தோடும் கண்ணீரோடும் தேவ சமூகத்தில் நிற்போமாக!

3. இயேசு கிறிஸ்துவின் முன்மாதிரியினால் திறப்பின் வாசலில் நிற்பாயாக! பழைய ஏற்பாட்டு பரிசுத்தவான்கள் தங்கள் தங்கள் காலங்களில் சில காரணங்களுக்காக திறப்பின் வாசலில் நின்றார்கள். ஆனால் சர்வலோகத்துக்கும் எல்லா மக்களின் பாவங்களுக்காகவும், என்றென்றைக்குமாக நிற்க வேண்டிய ஒருவர் தேவைப்பட்டது. ''ஒருவனையும் காணேன்" என்ற பிதாவின் அங்கலாய்ப்பைக் குமாரனாகிய இயேசு கிறிஸ்து உத்தரவாதத்தோடு ஏற்றுக் கொண்டார்.

நமது முன்மாதிரியாயிருக்கும் நமது இயேசு ராஜா பூமியில் வாழ்ந்த போது இடைவிடாமல் ஜெபித்தார்! பசியாயிருந்தபோதும், புசித்தபோதும் ஜெபித்தார். துக்கத்தால் நிறைந்த போதும் ஜெபித்தார். பகலிலும் இரவிலும் ஜெபித்தார். மலையின் மேல் ஏறி இராமுழுவதும் ஜெபித்தார். அதிகாலையில் ஜெபிக்கும்படி வனாந்தரமான இடத்துக்குப் போனார். பலத்த சத்தத்தோடும், பெருமூச்சோடும், கண்ணீரோடும் ஜெபித்தார். யோவான் சுவிசேஷம் 17ஆம் அதிகாரம் முழுவதும் அவர் எப்படி தன் சீஷருக்காக தேவனிடம் மன்றாடினார் என்பதைக் காட்டும்.

இயேசு கிறிஸ்து திறப்பின் வாசலில் நின்றார்! திறப்பின் வாசல் எது? சிலுவை! பாரமான சிலுவை. வேதனையான சிலுவை! ஆனால் அதுதான் இரட்சிப்பின் வழி. குருதி வழிய, வெயில் சுட்டெரிக்க சரீரம் நொந்து, கண் இருண்டு, நா வறண்ட வேளையில் நமக்காகஅவர் ஏறெடுத்த ஜெபம் என்ன?

"பிதாவே இவர்களுக்கு மன்னியும்" உயிர்பிரிகிற வேளையிலும், தம் உத்தரவாதத்தை விட்டு விடவில்லை. இம்மகா நேசத்தை ஆன்மாவே நீ சிந்திப்பாய்! அவரோடுகூட திறப்பின் வாசலில் நிற்க தீர்மானிப்பாயாக!

திறப்பின் வாசலில் இயேசு நின்று கதறியபடியாலே, இஸ்ரவேலருக்கும், புற ஜாதியாருக்கும் இடையே நின்ற பகையைச் சிலுவையினால் கொன்று இரு திறத்தாரையும் ஒரே சரீரமாக தேவனுக்கு ஒப்புரவாக்கினார். (எபேசி. 2:3)

திறப்பின் வாசலில் இயேசு நின்று சமாதானத்தை உண்டாக்கி பூலோகத்திலுள்ளவைகள் பரலோகத்திலுள்ளவைகள் யாவையும் அவர் மூலமாய் தமக்கு ஒப்புரவாக்கிக் கொண்டார். (கொலோ 1:20)

அவர் திறப்பின் வாசலிலே நின்று, நமக்காகச் சாபமாகி, நியாயப் பிரமாணத்தின் சாபத்திற்கு நம்மை நீங்கலாக்கி கொண்டார். (கலாத்தியர் 3:21)

ஜெபவீரரான கிறிஸ்து பூமியில் வாழும் வேளை மக்களுக்காக பரிதபித்தார். பரிந்து பேசினார்; மனதுருகினார்; மன்றாடினார்; சிலுவையிலே திறப்பின் வாசலிலே நின்ற போதும் தம் ஜெபத்தை விடவில்லை. உயிர்த்தெழுந்த பின்பாவது தம் பிதாவோடும், ஆயிரமான தேவ தூதரோடும் மகிழ்ச்சியாய் இருந்தாரா? இல்லை.

"அவரே தேவனுடைய வலது பாரிசத்தில் இருக்கிறவர்; நமக்காக வேண்டுதல் செய்கிறவர் அவரே" ரோமர் 8:34 ஆவியானவர் தாமே வாக்குக்கடங்காத பெருமூச்சோடு நமக்காக வேண்டுதல் செய்கிறார்". ரோமர் 8:26

"நம்முடைய பலவீனங்களைக் குறித்து பரிதபிக்கக்கூடாத பிரதான ஆசாரியர் நமக்கிராமல் எல்லா விதத்திலும் நம்மைப்

போல் சோதிக்கப்பட்டும் பாவமில்லாதவராயிருக்கிற பிரதான ஆசாரியரே நமக்கிருக்கிறார்" எபிரேயர் 6:14

எத்தனையோ சோதனைகள் வந்த வேளைகளில் கால் சறுக்கும் நேரத்தில், துக்கங்கள் நம்மை விழுங்கப் பார்த்த போது இயேசு கிறிஸ்து நமக்காக பிதாவினிடத்தில் பரிந்து பேசியதாலல்லவோ இன்று விசுவாசப் பாதையில் நாம் நிற்கிறோம்!

நமக்காக வழக்காடுபவர் ஒருவர் உண்டு; உறங்காமலும் தூங்காமலும் நம்மைக் காப்பவர்ஒருவர் உண்டு என்ற நம்பிக்கையால் அல்லவோ நாம் நிமிர்ந்து நிற்கிறோம்.

நாம் கனிகொடுக்காத வருடங்களில், இந்த வருடம் இருக்கட்டும்; இந்த வருடம் நிற்கட்டும் என்று மன்றாடி நமது ஆயுளைக் கூட்டிக் கொடுத்தவர் இயேசு கிறிஸ்து அல்லவோ!

நன்றியால் நிறைந்து நம்மைத் தாழ்த்தி இந்த ஆண்டா கிலும் கனி கொடுப்போமா? திறப்பின் வாசலில் நிற்போமா? நமது தேவனை மகிழ்ச்சிபடுத்துவோமா? தீர்மானிப்போம்!

4. எல்லாவற்றிற்கும் முடிவு சமீபமானதால் திறப்பின் வாசலில் நிற்பாயாக! மணவாளன் வரும் நேரமாயிற்று; ஆத்ம நேசருக்காக ஆவலோடு காத்திருப்போம். உலக முடி வின் கடைசி வினாடி நேரத்தில் நின்று கொண்டிருக்கிறோம். "எல்லாவற்றிற்கும் முடிவு சமீபமாயிற்று. ஆகையால் தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருந்து ஜெபம் பண்ணுவதற்கு ஜாக்கிரதையாயிருங்கள்" என்ற எச்சரிப்பின் சத்தம் காதில் விழுகிறது. 1, பேதுரு 4:7

அவரது வருகையின் வாக்குத்தத்தங்கள் எல்லாம் நிறை வேறி வருகிறது. யூதரும் இஸ்ரவேலரும் தங்கள் கூடுகளில் வந்து சேர்கின்றனர். உலகம் அனைத்திலும் உள்ள பரிசுத்த வான்கள் அவரது வருகையை ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

கம்யூனிஸ்டு நாடுகளில் சித்திரவதைகளுக்குள் கொடுமையான சவுக்கடிகள் பட்டு, இக்காலத்து பாடுகள் இனிவரும் மகிமைக்கு ஒப்பானவைகள் அல்ல என்று கூறும் இரத்தச் சாட்சிகள், அவரது வருகைக்காக ஏங்கிக் கொண்டிருக்கிறார்கள்!

> ''எப்போ எப்போ வருவாரென்று ஏங்குதே உள்ளம்—
> என் அப்பன் முகம் காண அங்கலாய்க்குதே உள்ளம்''

என்ற இனிய பாடல் காதுகளில் ஒலிக்கிறது. பரலோகத்திலிருந்து ஒரு குரல் மெய்யாகவே நான் சீக்கிரமாய் வருகிறேன் என்று கேட்கிறது. நீ திறப்பின் வாசலில் நிற்பாயானால், ''ஆமென் கர்த்தராகிய இயேசுவே வாரும்; வாரும் இயேசு ராஜா'' என ஆவலோடு பதில் கொடுப்பாய்.

இனி நேரமில்லை. இருதயத்தைக் கிழிப்போம். வேற்றுமைகளை மறப்போம். கையோடு கைகோர்த்து சங்கிலியாவோம். தேவனுடைய ஜனங்களை ஒன்று கூட்டுவோம். ஒரு மனப்பட்ட இருதயத்தோடு திறப்பின் வாசலில் நிற்போம். மன்றாடுவோம். நமது ராஜா, இயேசு கிறிஸ்துவின் பாதங்களைப் பற்றிக் கொண்டு கதறுவோம். கண்ணீரால் நனைப்போம்.

★

# என்னிடத்தில் கூட்டுங்கள்!

''பலியினாலே என்னோடே உடன்படிக்கை பண்ணின என்னுடைய பரிசுத்தவான்களை என்னிடத்தில் கூட்டுங்கள் என்பார்" (சங் 50:5)

ஆ! எத்தனை ஆனந்தம்! ''என்னோடே", ''என்னுடைய", ''என்னிடத்தில்" என்று கர்த்தர் எத்தனை உரிமையோடு அழைக்கிறார். நம் ஆண்டவராகிய கர்த்தர் வருவார். நம் ஆத்தும நேசரின் மார்பில் சாய்ந்து, நம் வேதனைகளையெல்லாம் மறக்கும் நாள் சீக்கிரமாக வருகிறது. முட்கிரீடம் தரிக்கப்பட்ட அவர் தலையில் பொற் கிரீடம தரித்து அவர் சமூகத்தில் ஆனந்திக்கும் நாட்கள் மிகவிரைவில் வருகிறது. கவலையும் கண்ணீரும் மறையும் அந்த நாள் எவ்வளவு ஆசீர்வாதமான நாள்!

கிறிஸ்து யாருக்காக வருகிறார்? வந்ததும் அவர் யாரை அழைப்பார்? யாரை தன்னிடம் கூட்டிச் சேர்ப்பார்?

''பலியினாலே என்னோடே உடன்படிக்கை செய்த என்னுடைய பரிசுத்தவான்களே!' என்று கர்த்தர் சொல்கிறார்.

1. அன்பின் பரிசுகள்:— கிரிமியன் யுத்தத்தில் ஆங்கிலேயர் வெற்றி பெற்றதால் லண்டன் மாநகரமே விழாக் கோலம் பூண்டிருந்தது. விக்டோரியா மகாராணி காயப்பட்ட வீரர்களுக்குத் தங்கப் பதக்கம் வழங்கிக் கொண்டு வந்தார்கள்.

சில வீரர்கள் கைகளிலும் கால்களிலும் பெரிய கட்டுகளோடு வந்தார்கள். சிலர் கைத்தடியை ஊன்றிக் கொண்டு வந்தார்கள். விக்டோரியா மகாராணி, ஒரு புன்னகையோடு

அனைவரையும் ஊக்குவித்து, அவர்களுக்குப் பரிசுப் பொருள்களைக் கொடுத்தார்கள். அவர்கள் அடைந்த ஆனந்தத்திற்கு அளவே இல்லை!

கடைசியில் ஒரு மனிதனை நான்கு பேர் சுமந்து கொண்டு வந்தார்கள். அவன் வல்லமையாக, திறமையோடு போரிட்ட வீரன். யுத்தக் களத்தில் அவன் இரண்டு கால்களும் பறிபோயின. அவன் முகம் சிதைவடைந்து அருவருப்பாயிருந்தது. விக்டோரியா மகாராணி கெம்பீரத்தோடு அருகில் வந்தார்கள். மட்டுமல்ல, குனிந்து அவன் நெற்றியில் முத்தமிட்டு, ''நல்லது, உண்மையும் உத்தமுமுள்ள ஊழியனே!'' என்று வாயார வாழ்த்தினார்கள். அவன் உள்ளம் மகிழ்ச்சியால் நிரம்பினது. பட்ட பாடுகள், துயரங்களெல்லாம் ஓடி மறைந்தன.

ராஜாதி ராஜாவான இயேசு நம்மை அவரண்டை கூட்டிச் சேர்க்கும் போது நமக்கு ஏற்படும் மகிழ்ச்சியை வார்த்தைகளால் வர்ணிக்கவே முடியாது. ஆ! நம் கவலைகள், கண்ணீர்கள் பாடுகள் எல்லாம் மறைந்து போகும்!

2. கூட்டிச் சேர்ப்பார்:— என்னுடைய பரிசுத்தவான்களை என்னிடத்தில் கூட்டுங்கள்'' என்பார் (சங் 50:5)

''வலுவாய்த் தொனிக்கும் எக்காள சத்தத்தோடே அவர் தமது தூதர்களை அனுப்புவார். அவர்கள் அவரால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களை வானத்தின் ஒரு முனை முதற்கொண்டு மறுமுனைமட்டும் நாலு திசைகளிலுமிருந்து கூட்டிச் சேர்ப்பார்'' மத் 24:31.

''நான் அவர்கள் கிரியைகளையும், அவர்கள் நினைவுகளையும் அறிந்திருக்கிறேன். நான் சகல ஜாதியாரையும் பாஷைக்காரரையும் கூட்டிச் சேர்க்குங் காலம் வரும். அவர்கள் வந்து என் மகிமையைக் காண்பார்கள்'' (ஏசாயா 66:18)

ஆ! எத்தனை அருமையான காட்சி! உலகமெங்குமுள்ள பரிசுத்தவான்கள், பல தேசங்களிலிருந்து கிறிஸ்துவைச் சந்திக்க எதிர்கொண்டு போவார்கள். தேவ மக்களின் அந்த ஐக்கியம் எவ்வளவு இனிமையானது. ஆடல் பாடல்களோடு எக்காள சத்தத்தோடு துதியின் தொனியோடு ராஜாதி ராஜாவைக் காணச் செல்லும் காட்சிதான் எவ்வளவு அருமையானது.

3. மறுரூபமாவோம்:- கடைசி எக்காளம் தொனிக்கும் போது ஒரு நிமிஷத்திலே, ஒரு இமைப் பொழுதிலே நாமெல்லாரும் மறுரூபமாக்கப்படுவோம். (I கொரி 15:51)

"பின்பு உயிரோடிருக்கும் நாமும் கர்த்தருக்கு எதிர்கொண்டுபோக, மேகங்கள் மேல் அவர்களோடே கூட ஆகாயத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டு, இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனே கூட இருப்போம்". (I தெச 4:16)

"இப்பொழுது கண்ணாடியிலே நிழலாட்டமாய்ப் பார்க்கிறோம். அப்பொழுது முகமுகமாய்ப் பார்ப்போம்" (I கொரி 13:12)

"அவர் வெளிப்படும்போது, அவர் இருக்கிற வண்ணமாகவே நாம் அவரைத் தரிசிப்பதினால், அவருக்கு ஒப்பாயிருப்போமென்று அறிந்திருக்கிறோம்" (I யோ 3:2)

4. பாடுகளின் வழியாய் பரலோகம்:- இந்த வாஞ்சையாலும், நம்பிக்கையினாலும் நம் உள்ளங்கள் பொங்கட்டும். இக்காலத்துப்பாடுகள், இனி நம்மில் வெளிப்படும் மகிமைக்கு ஒப்பானவைகள் அல்லவே! நாம் அவரோடு பாடுகள் சகித்தால், அவரோடு அரசாளுவோம். பரலோக பாக்கியங்களை நினைக்கும்போது, கர்த்தருக்காக பாடுகளைச் சகிப்பது ஒரு சிலாக்கியமே என்பதை அறிந்துகொள்வாய். எபேசு சபையின் தூதனுக்கு கர்த்தர் எழுதும்போது, "நீ படப்போகும் பாடுகளைக் குறித்து எள்ளளவும் பயப்படாதே. இதோ நீங்கள் சோதிக்கப்படும் பொருட்டாகப் பிசாசானவன் உங்களில் சிலரைக் காவலில் போடுவான்; பத்துநாள் உபத்திரவப்

படுவீர்கள். ஆகிலும் நீ மரணபரியந்தம் உண்மையாயிரு. அப்பொழுது ஜீவ கிரீடத்தை உனக்குத் தருவேன். (வெளி 2:10)

நாம் அநேக உபத்திரவங்களின் வழியாய்த்தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்க வேண்டும் என்று அப்போஸ்தலனாகிய பவுலும் நமக்கு ஆலோசனை சொல்கிறார்.

பலியினால் உடன்படிக்கை செய்யும் பரிசுத்தவான்கள், கர்த்தருடைய நாளில் பரவசமடைவார்கள். கிறிஸ்துவை அரவணைத்துக்கொண்டு ஆனந்திப்பார்கள். தேவகுமாரனின் ஒவ்வொரு காயங்களிலும் தங்கள் முகங்களைப் பதித்து முத்தமிடுவார்கள். வெள்ளையங்கிகளைத் தரித்து தேவனை நித்தியம் நித்தியமாய்த் துதிப்பார்கள்.

அவர்களைக் குறித்து வேதம், "இவர்கள் மிகுந்த உபத்திரவத்திலிருந்து வந்தவர்கள். இவர்கள் தங்கள் அங்கிகளை ஆட்டுக் குட்டியானவருடைய இரத்தத்திலே தோய்த்து வெளுத்தவர்கள். ஆனபடியால் இவர்கள் தேவனுடைய சிங்காசனத்திற்கு முன்பாக இருந்து இரவும் பகலும் அவருடைய ஆலயத்திலே அவரைச் சேவிக்கிறார்கள். சிங்காசனத்தின் மேல் வீற்றிருக்கிறவர் இவர்களுக்குள்ளேவாசமாயிருப்பார்... தேவன் தாமே இவர்களுடைய கண்ணீர் யாவையும் துடைப்பார்." (வெளி 7:14—17)

5. பரலோகமே, என் சொந்தமே:-உலகத்தையும், உலகத்திலிலுள்ளவற்றின் மேலும் நம்பிக்கை வைக்க உலகத்தில் ஒன்றுமே இல்லையே. இந்த வானமும் பூமியும் சுருட்டப்பட்டுப் போகும். காண்கிற இந்த உலகம் அக்கினிக்கு இரையாக வைக்கப்பட்டிருக்கிறது. உலகத்திலும் உலகத்திலுள்ளவைகளிலும் அன்பு கூருதிருங்கள். (I யோவான் 2:15) இதுவே பலியின் உடன்படிக்கை. உலக சிநேகிதங்களை, மாமிசத்தின் இச்சைகளை, கண்களின் இச்சைகளை, ஜீவனத்தின் பெருமைகளை பலி செலுத்துங்கள்.

நமது குடியிருப்போ பரலோகத்திலிருக்கிறது (பிலி 3:20) நம் பிதா அங்கிருக்கிறார் (மத் 6:9) நம் இரட்சகர் அங்கிருந்து

வர நாம் ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம் (எபி 9:24) நம் பெயர்கள் பரலோகத்தில் எழுதப்பட்டிருக்கிறது (லூக்கா 10:20) நம் ஜீவன் பரலோகத்தில் கிறிஸ்துவுடனே தேவனுக்குள் மறைந்திருக்கிறது (கொலோ 3:3) நமது பொக்கிஷத்தை நாம் அங்கேயே சேர்த்து வைத்திருக்கிறோம், நமது இருதயமும் அங்கேயே இருக்கிறது. (மத் 6:19-21) நமது சுதந்திரமும் (inheritance) பரலோகத்தில் தான் வைக்கப்பட்டிருக்கிறது (I, பேதுரு 1:5) நமக்காக நம் அருமை இரட்சகர் ஆயத்தம் செய்யும் பரலோகவாசஸ்தலத்திலே (யோவான் 14:2) நாம் நித்திய நித்தியமாய் கர்த்தரைப் பாடி, ஆடி, துதித்து, மகிழ்வோம்.

6. ஜெயங் கொள்கிறவன் எவனோ!:-பலியின் உடன் படிக்கையின் மூலம் நம்மைத் நாமே தாழ்த்தி, தேவன் நமக்குச் சம்பாதித்த ஜெயத்தை சுதந்தரித்துக் கொள்கிறோம். நாம் ஜெயம் பெறவே அழைக்கப்பட்டிருக்கிறோம். ஜெயக் கிறிஸ்து நமக்கு முன்பாக கெம்பீரமாக நடந்து செல்கிறார். அவர் அடிச்சுவடுகளைப் பின்பற்றுகிறவர்கள் ஜெயத்தின் மேல் ஜெயம் அடைவார்கள்.

**"நான் ஜெயங் கொண்டு என் பிதாவினுடைய சிங்காசனத்திலே அவரோடேகூட உட்கார்ந்தது போல ஜெயங் கொள்கிறவனெவனோ அவனும் என்னுடைய சிங்காசனத்தில் என்னோடேகூட உட்காரும்படி அருள் செய்வேன்"** (வெளி 3 :21)

ஆ! அந்த நாட்கள் மிகச் சமீபமாய் இருக்கிறது; தீர்க்கதரிசனங்களெல்லாம் நிறைவேறி முடிகின்றன. எல்லாவற்றிற்கும் முடிவு சமீபமாயிற்று(I பேதுரு 4:7) இனி காலஞ் செல்லாது (வெளி 10:6) என் தேவனாகிய கர்த்தர் வருவார். தேவரீரோடே எல்லாப் பரிசுத்தவான்களும் வருவார்கள் (சகரியா 4:5)

ஆமென். கர்த்தராகிய இயேசுவே வாரும் (வெளி 22:20) என் நேசரே! தீவிரியும். (உன் 8:14)

# பலியின் காணிக்கை!

இந்த புத்தகம் உங்கள் கரங்களில் தவழுவதற்கு முக்கிய காரணமாயிருந்த ஒரு குடும்பத்தினருக்காக நீங்கள் நன்றியுடன் ஸ்தோத்தரித்து ஜெபிக்கும்படி உங்களைத் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன். ஈரோட்டில் நான் கூட்டங்கள் நடத்திக் கொண்டிருக்கும்போது, அத்தக் குடும்பத்தார்என்னை சந்திக்கும்படி முன் வந்தார்கள். அந்த சகோதரி தன் கரங்களிலிருந்த தங்க வளையலைக் கழற்றி, தன் கணவரோடும் பிள்ளைகளோடும் சேர்ந்து புத்தகம் எழுதும்படி, அந்த சபை போதகர் மூலம் என்னிடம் தந்தார்கள்.

பலியின் காணிக்கையாக, தங்களை ஒடுக்கி, தங்கள் மேன்மையைப் பாராமல், திருமண வயதில் தங்களுக்கு இரண்டு பெண்கள் இருப்பதையும் பொருட்படுத்தாமல் கொடுத்த அவர்களின் ஈவை, கர்த்தருடைய கரங்களில் புத்தகமான ஆபரணமாக மாற்றி கிறிஸ்துவின் கரங்களில் நான் தந்திருக்கிறேன். ஆம்; தங்கள் கைகளில் அழகாயிருப்பதை விட, கிறிஸ்துவின் சேவைக்கு ஊன்றுகோலாய் இருப்பது மேல் என்று தீர்மானஞ் செய்து, தியாகமாய்க் கொடுத்த, அவர்கள் குடும்பத்தைக் கர்த்தர் நூறத்தனையாய் ஆசீர்வதிப்பாராக! புதிதாக கிறிஸ்துவை ஏற்றுக் கொண்ட அவர்கள், தங்கள் பெயரை வெளியிட வேண்டாம் என்று வற்புறுத்திக் கேட்டுக் கொண்டபடியால் பரலோகத்தில் மிகுந்த பலன் அவர்களுக்குண்டாகும்படி வெளியிடவுல்லை.

1976 ஆம் ஆண்டு நான் அந்தமான் தீவுகளுக்கு ஊழியத்திற்காகச் சென்றிருந்த போது, கர்த்தர் என் உள்ளத்தில் ஒரு ஏக்கத்தையும் தணியாத தாகத்தையும் வைத்தார். தமிழ் கிறிஸ்தவ உலகத்திற்குத் தேவையான ஆவிக்குரிய புத்தகங்களை, வெளியிட வேண்டும் என்பதே அது!

அப்படியே எழுதினேன். அதை வெளியிட எந்த கிறிஸ்தவ பதிப்பகத்தார்களும் முன்வரவில்லை. எனவே நானே மிகுந்த பொருட் செலவுடன் வெளியிடலானேன். ஒவ்வொரு புத்தகத்தையும் ஏறக்குறைய 2000 விலாசங்களுக்கு அவர்கள் கேட்காமலே, அனுப்பி வருகிறேன். கர்த்தருக்கே மகிமையுண்டாவதாக!

எழுத்து வலிமை மிகுந்த ஆயுதம்! வால்டேரும் ரூசோவும் அதை அணுகுண்டுகளாக மாற்றி, தங்கள் தங்கள் தேசத்தில் பெரும் புரட்சியை உண்டு பண்ணி, மக்களின் உள்ளங்களில் தங்கள சுயநல விதைகளை விதைத்தனர்.

காரல் மார்க் எழுத்திலே ஏவுகணையை பொருத்தி, கம்யூனிசம் என்ற விஷ அம்பை ஆயிரம் ஆயிரம் உள்ளங்களில் எய்தான். வலு சர்ப்பத்தின் ஆயுதமாக எழுத்து பயன்பட்டதால் ''தேவன் இல்லை" என்ற கொள்கை உலகத்தில் மூன்றிலொரு பகுதியை இருள் மயமாக்கிற்று. கிறிஸ்தவர்களுக்கு எதிரான சக்திகள் பெலன் கொண்டு, ஆலயங்கள் தகர்க்கப்பட்டன. போதகர்கள் சித்திரவதை செய்யப்பட்டனர்.

எழுத்தின் வலிமையை சாத்தான் அந்த அளவிற்கு உபயோகித்து தேசங்களைக் கவிழ்க்கக் கூடுமானால், தேவ பிள்ளைகளாகிய நாம் ஏன், ஆவியும் ஜீவனுமான கர்த்தருடைய வார்த்தைகளை தேவ மகிமைக்காகவும், ஆத்தும ஆதாயங்களுக்காகவும் பயன்படுத்தக் கூடாது?

தமிழகத்திலே வெளிவரும் சினிமா பத்திரிகைகளுக்கும், ஆபாச புத்தகங்களுக்கும் கணக்கே இல்லை. வார இதழ்கள் பெருகிவிட்டன. எல்லா பத்திரிகைகளுக்கும் அட்டைப்படம் பெண்கள் தான். ஆபாசக் கவர்ச்சி பெண்களை அட்டைப் படமாக வைத்து, இளம் உள்ளங்களை நரகத்திற்கு நேராய் சாத்தான் சுண்டி இழுத்துக் கொண்டிருக்கிறான். ஐயோ, தடுப்பதற்கும், ஆத்துமாக்களை மீட்பதற்கும் யாரும் இல்லையா? கிறிஸ்தவ சமுதாயம் என்ன செய்து கொண்டிருக்கிறது?

சமீபத்தில் ''இயேசு வரமாட்டார்" என்ற ஒரு புத்தகத்தை வாசித்தேன். விலை ரூ 4.90. அந்த எழுத்தாளர்

கிறிஸ்துவை கேலி செய்தது மட்டுமல்ல, சகோதரன் தினகரன் முதல் சகோதரி சாராள் நவரோஜி வரை அத்தனை ஊழியர்களை பற்றியும் மகா அவதூறும் எழுதியிருந்தார்.

இன்னொரு புத்தகத்தை அதிக விலை கொடுத்து வாங்கினேன். ''மெரினாவில் இயேசு'' அந்த கிறிஸ்தவ ஆசிரியர் என்ன நோக்கத்தில் எழுதினாரோ தெரியாது, அட்டைப் படமே இயேசு வாய்விட்டு சிரிப்பதுபோல இருந்தது. கிறிஸ்துவை கேலியும் பரியாசமும் செய்திருந்ததை அறிந்தேன்.

போதும் கிறிஸ்து அவமானப்பட்டது போதும். அவர் தன் சிநேகிதரின் வீட்டிலே காயப்பட்டதும் போதும் (சகரியா13:6). கிறிஸ்து பட்ட அவமானங்களும், வேதனைகளும் போதும்; போதும். அவர் கண்கள் துயரத்தோடு, கண்ணீர் ததும்பி வேதனையோடு நம்மைப் பார்க்கின்றன.

அவரது பார்வை, அன்று பேதுருவை மனங்கசந்து அழ வைத்தது மட்டுமல்ல. பிற்பாடு அவனை இரத்த சாட்சியாக வாழவும், முடிவில் கர்த்தருக்காக ஜீவனைக் கொடுக்கவும், ஏவி எழுப்பிற்று. கர்த்தருக்காக திடமாய், தீர்மானமாய் உழைக்க தீர்மானிப்போமாக.

அடுத்த புத்தகம் எதைப்பற்றி எழுதப்பட வேண்டும் என்ற உங்கள் ஆலோசனையை வரவேற்கிறேன். சிரமத்தைப் பாராதபடி ஓரிரு வரிகளாவது எழுதி அனுப்புங்கள். உற்சாகமாக புத்தக ஊழியத்தைத் தாங்குங்கள். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!

இந்தப் புத்தகத்திற்கு ஓய்வு தரவேண்டாம். குறைந்தது 50 பேருக்காவது வாசிக்கக் கொடுங்கள். நீங்கள் அனுப்பும் காணிக்கை, புதிய ஆவிக்குரிய புத்தகங்களை வெளியிடச் செய்யும். அல்லேலூயா!

# பலியின் உடன்படிக்கை!

"பலியினாலே என்னோடே உடன்படிக்கை பண்ணின என்னுடைய பரிசுத்தவான்களை என்னிடத்தில் கூட்டுங்கள் என்பார்" சங்கீதம் 50 : 5.

அன்று, கல்வாரிச் சிலுவையில் தம்மையே பலியாக்கி, நம்மோடு கூட ஓர் அன்பின் உடன்படிக்கையைச் செய்தார் இயேசு. அவரது இரத்தத்தைக் குறித்து, இது அநேகருக்காக சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய இரத்தமாயிருக்கிறது என்றார்.

நாம் அவருடைய அன்புக்கும், தியாகத்திற்கும், உடன்படிக்கைக்கும் தகுதியுள்ள வாழ்க்கை வாழ்கிறோமா? நம்மையே ஆராய்ந்து பார்ப்போம்.

இந்த புத்தகத்தில் அடங்கியுள்ள கல்வாரி தியானங்களும், இரத்த சாட்சிகளின் வரலாறுகளும், உங்கள் உள்ளத்தில் நேச அக்கினியைப் பற்றி எரியச் செய்வதாக!


## எமது வெளியீடுகள்:

1. கல்வாரிப் பாதையில் நீ ...
2. என்னை பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே ...
3. கிறிஸ்துவின் இரத்தம் ...
4. ஆயத்தப்படு; ஆயத்தப்படுத்து.
5. பலியின் உடன்படிக்கை !
6. எழுப்புதல் எப்பொழுது ?
7. அக்கினி இரதங்கள் !
8. பெற்றுக் கொள்ளத் தக்கதாக ...!

உடனே எழுதி பெற்றுக்கொள்ளுங்கள்;
கிறிஸ்துவில் வல்லமையாய் பெலனடையுங்கள்.